GURUVARULUM, KULANDAIPPERUM – A STUDY

குருவருளும், குழந்தைப் பேறும் - ஓர் ஆய்வு

A THESIS

Submitted by

K. VAIDYANATHAN
(Reg. No.D16AS001)

in partial fulfillment for the award of the degree

of

DOCTOR OF PHILOSOPHY



DEPARTMENT OF ASTROLOGY

FACULTY OF ARTS AND SCIENCE

BHARATH INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

CHENNAI 600 073.

MARCH 2020

DECLARATION

I declare that this dissertation titled "**GURUVARULUM, KULANDAIPPERUM – A STUDY**" is an original and bonafide work done by my own in the partial fulfillment of the requirement for the award of the degree of **Doctor of Philosophy** and submitted to the **Department of Astrology, Faculty of Arts and Science**, Bharath Institute of Higher Education and Research, was carried out under the supervision of **Dr. N. Dhamodaran, MA., M.A., M.A., M.A., (Astrology) M.Phil., Ph.D.,** Visiting Professor, Faculty of Astrology, Department of Science and Humanities, Bharath Institute of Higher Education and Research, is entirely original and has not been submitted for any degree or diploma earlier.

I further declare that this thesis does not form of any other thesis or dissertations on the basis of which a degree was awarded or conferred on earlier occasion on me or any other candidate.

Place:

Date: **Signature of the Scholar**

BONAFIDE CERTIFICATE

Certified that this thesis titled "**GURUVARULUM, KULANDAIPPERUM – A STUDY**" is the bonafide work of **Mr. K. VAIDYANATHAN, REGISTER (No.D16AS001)** who carried out the research under my supervision.

Certified further, that to the best of my knowledge the work reported and in the publications by the scholar does not form part of any other thesis or dissertation, on the basis of which a degree or award was conferred on an earlier occasion of thesis of any other candidate.

SUPERVISOR

Signature of the Supervisor with official Seal

JOINT-SUPERVISOR
(if any)

Signature of the Supervisor with official Seal

ACKNOWLEGEMENT

I would like to thank the Honorable **Chancellor Dr. J. Sundeep Aanand** and Honorable Managing Director **Dr. E. Swetha Sundeep Anand,** respected **Vice-Chancellor Dr. V. Kanagasabai** for giving me an opportunity to pursue research program in Bharath University. I express my gratitude to **Pro – Vice chancellor Dr. K.P. Thooyamani** and **Dean Engineering Dr. J. Hameed Hussain** for providing constant support to submit this thesis in time.

I would like to thank **Dr. M. Sundararajan,** Dean – R & D to fecilitate to submit the synopsis of my research work successfully. I wish to place on record my deep sense of gratitude and heart-felt thanks to **Dr. M. Prem Jeyakumar**, Controller of examinations for giving valuable suggestions.

It is great pleasure to express my deep sense of gratitude to my Supervisor **Dr. N. Dhamodaran,** Visiting Professor, Department of Astrology, Faculty of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, for her valuable suggestion and guidance and encouragement at every stage of work.

A special thanks to my family. Words cannot express how grateful I am to my parents for the sacrifice that you've made on behalf. I would like to express appreciation to my beloved wife Hema Gopinath, and my friends for their untiring efforts and constant support in presenting this study successfully.

Name of the Scholar

K. VAIDYANATHAN

பொருளடக்கம்

முன்னுரை

பிரபஞ்சம் தோன்றியது முதலே கிரகங்களைக் கொண்டே உலகம் இயங்கிவருகிறது. அதில் நவக்கிரகங்களில் **“குரு பார்க்க கோடி பாவம் நிவர்த்தி”** என்று பாராட்டப்படும் வியாழன் என்ற குருபகவானைப் பற்றியும், குரு ஒருவர் சாதகத்தில் என்னென்ன பலன்களைத் தருவார் என்பது பற்றியும், குரு ஏன் புத்திரகாரகன் என்று அழைக்கப்படுகிறார் என்பது பற்றியும், குருவினால் ஏற்படும் நல்ல, தீயசெயல்களையும், சாதகத்தில் குரு எங்கு இருந்தால் சிறந்த குழந்தைகள் கிடைக்கும் என்பதையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

பதினாறுவகையான செல்வங்களில் குழந்தைச்செல்வமே மிகச்சிறந்த செல்வம். புத்திரன் இல்லாதவன் ‘‘புத்’’ என்ற நரகத்தை அடைகிறான் என்று வேதங்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட குழந்தையைப் பெற நாம் முற்பிறவியில் புண்ணியம் செய்து இருக்கவேண்டும் .முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கு ஏற்பத்தான் நாம் இப்பிறவியில் இப்புண்ணியபூமியில் நன்மைகளையும், தீமைகளையும் பெறுகின்றோம் என்று நம் வேதங்களும், புராணங்களும், சோதிடமும் கூறுகின்றன. நல்ல குழந்தைகளைப் பெற குருவின் அருளைப் பெறவேண்டும்.

உலகில் பிறந்த மனிதர்கள் அனைவருக்கும் தங்களுக்கு குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசை கண்டிப்பாக இருக்கும். ஆனால் எல்லோருக்கும் குழந்தை பிறக்கிறதா? அப்படியே பிறந்தாலும் ஆண், பெண் குழந்தைகள் சமமாக பிறக்கின்றதா? ஒரே குழந்தை மட்டும் ஏதேனும் ஒரு இனத்தில் பிறக்கிறதா அல்லது குழந்தையே பிறக்காதா?

ஒரு சில தம்பதியர்களுக்கு குழந்தைப்பேறு ஏற்படவில்லையே என்ற வினாவின் வெளிப்பாடே இந்த ஆய்வாகும். குழந்தை பிறப்பதற்கு குரு என்ற கோளின் பங்கு மிக முக்கியமானது. எனவே ‘குருவருளும், குழந்தைப்பேறும்’ என்ற தலைப்பில் இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது.

சாதகத்தில் குருவின் நிலை நன்றாக அமையவேண்டும். எனவேதான் குருவுக்கு புத்திரகாரகன் என்ற காரகத்துவம்

வழங்கப்பட்டுள்ளது. குழந்தை பிறக்க எந்த கிரகங்கள் துணை புரிகின்றன என்பதையும் பனிரெண்டுபாவங்களில் ஐந்தாம் பாவத்தையும், காரகன் குருவையும் ஆராய்ந்து குழந்தைப் பிறப்பைப் பற்றி, குழந்தையின்மை பற்றி விளக்கப்பட்டு உள்ளது.

ஆய்வுத்தலைப்பு

மேஷம் முதல் மீனம் வரையிலான பன்னிரு இலக்கினங்களிலும் பிறந்த ஜாதகங்களை ஆய்வு செய்தால் அவற்றில் குரு, ஐந்தாமிடம், ஐந்துக்குடையவனின் தாக்கம் நிச்சயமாக இருக்கம் என ஆய்வு விதிகளின் மூலம் உறுதி செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். ஆகவே ‘‘குருவருளும் குழந்தைப் பேறும்’’ என்பதே ஆய்வுத்தலைப்பாக அமைகிறது.

ஆய்வு நோக்கம்

குரு என்ற கோள் விஞ்ஞான ரீதியாக குழந்தைப் பேற்றிற்கு எவ்வாறு ஆதாரமாக இருக்கின்றது என்பதையும், ஜோதிட நூல்களின்படி குரு குழந்தை பிறப்பதற்கு எவ்வாறு ஆதாரமாக இருக்கின்றது என்பதையும், குழந்தைப்பேற்றில் உண்டாகும் குறைகளையும், குழந்தை இன்மையையும் அதற்கான கோள்நிலை அமைப்பின்படி ஆராய்ந்து உண்மை காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

குரு அறிவியல் ரீதியாக எவ்வாறு குழந்தைப் பேற்றிற்கு ஆதாரமாக இருக்கிறது என்பதையும், சோதிடநூல்கள்படி குரு குழந்தைப் பிறப்பிற்கு எவ்வாறு ஆதாரமாக இருக்கிறது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். குழந்தை பிறப்பதற்கு குருக்கோளின் பங்கு மிக முக்கியமானது. எனவே ‘குருவருளும், குழந்தைப்பேறும்’ என்ற தலைப்பில் இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகிறது.

ஆய்வின் கருதுகோள்

1. குரு இராசிமண்டல ரீதியாக எந்தெந்த இராசியில் வரும் பொழுது உயிர் அணுக்கள் அதிகமாக உற்பத்தி செய்ய உதவுகின்றன என நிறுவுதல்.

2. குருவின் வக்கிரம், அஸ்தமனம், அதிசார நிலைகளில் புத்திரபாக்கியத்தின் அதிருப்திபற்றி விளக்குதல்.

ஆய்வு எல்லை

தமிழகத்தில் பிறந்து வாழ்ந்து வரும் பல்வேறு நண்பர்கள், உறவினர்கள் மற்றும் ஜோதிட அன்பர்கள் ஆகியோரிடம் அணுகி அவர்களது ஜாதகத் தகவல்களும், அவர்களது குழந்தைகள் பற்றிய தகவல்களும் சேகரம் செய்யப்பட்டு அவை இவ்வாய்வுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு களப்பணி வழியாகப் பெறப்பட்ட 200 சாதகத் தகவல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவையே ஆய்வு எல்லையாகும்.

ஆய்வு அணுகுமுறை

விளக்க அணுகுமுறையிலும் (Descriptine Method), ஒப்பிட்டு அணுகுமுறையிலும் (Comperative Method), ஆய்வு முறையிலும் (Research Method) இவ்வாய்வு செய்யப்படுகிறது.

பல்வேறு தரப்பாரிடமிருந்து 200 சாதகத் தகவல்கள் பெறப்பட்டன. அந்தச் சாதகங்களில் குருக் கோளின் தாக்கம் மற்றும் ஐந்தாம் பாவம், ஐந்தாம் பாவாதிபதி, ஐந்தாம் பாவத்தில் நின்ற கிரகம், ஐந்தாம் பாவதிபதி நின்ற பாவம் போன்ற அடிப்படைக்கூறுகள் பகுக்கப்பட்டன. அதன் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

முதன்மை ஆதாரங்கள்

சோதிடநூல்களாகிய பிருஹத் சாதகம், சாராவளி, ஜாதக அலங்காரம், பெரிய சில்லறைக் கோவை, சாதகசிந்தாமணி, புலிப்பாணி 300 ஆகியநூல்களும், குருவைப் பற்றிய வானியல் குறிப்புகளுடன், குருவைப் பற்றி சேகரம் செய்யப்பட்ட தகவல்களும் ஐந்தாம் பாவத்தைப் பற்றிய பிருஹத் சாதகம், சாராவளி, சாதக அலங்காரம், பெரிய

சில்லறைக் கோவை, சாதக சிந்தாமணி, புலிப்பாணி 300, சந்திரகாவியம் ஆகிய நூல்களும் முதன்மை ஆதாரமாகவும் அமைகிறது.

துணை ஆதாரங்கள்

களப்பணி மூலம் பெறப்பட்ட 200 சாதகங்கள் துணை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன. குடும்ப ஜோதிடம், ஜோதிஷ வித்யா வாரிதி போன்ற நூல்களும் துணை ஆதாரமாகின்றன.

ஆய்வுப் பகுப்பு

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை, துணை நூற்பட்டியல். பின்னிணைப்பு நீங்கலாக கீழ்க்கண்ட நான்கு இயல்களைக் கொண்டதாக தொகுக்கப்படுகிறது. நான்கு இயல்களும் தலைப்பு வாரியாக சுருக்கமாக இங்கு கூறப்படுகிறது.

முன்னுரை

1. வானியலும், குருக்கோளும்
2. குருவின் கோச்சாரமும், குழந்தை பிறப்பும்
3. குழந்தை பிறப்புக்கான கோள் அமைப்புகளும், பகுப்பாய்வும்,
4. தொகுப்பாய்வு

திறனாய்வு, வரைபடங்கள் மற்றும் முடிவுரை. முடிவுகள், மேலாய்வுக்களங்கள், அடிக்குறிப்புகள். துணைநூல் பட்டியல், பின்னிணைப்புகள் என ஆய்வுத் தலைப்புகள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் பகுப்பாய்வு மற்றும் திறனாய்வின் மூலம் கண்டறியப்பட்ட தொகுப்புகள் முடிவுகளாகப் பெறப்பட்டுள்ளன.

முதல் இயல்

'வானியலும், குருக் கோளும்' எனும் தலைப்பிலான முதல் இயலில் ஜோதிடத்தைப் பற்றிய அறிமுகமும், நவக்கோள்களைப் பற்றியும், பன்னிரு இராசிகளைப் பற்றியும், நவக்கிரகங்களுக்குரிய நட்சத்திர மண்டலங்களைப் பற்றியும், குருக்கோளைப் பற்றிய விளக்கமும், பாவகப் பலன்களும், பன்னிரு பாவங்களில் குருக்கோள்

நின்ற பலன்களைப் பற்றியும். குருவின் காரகத்துவ குணங்களைப் பற்றியும், குருவைப் பற்றிய சிறப்புச் செய்திகளைப் பற்றியும், குருவின் இராசிமண்டல சஞ்சாரத்தால் குழந்தை பிறப்பு பற்றியும், குருவின் வக்கிர, அஸ்தமன, அதிசார நிலைகளால் குழந்தை பிறப்பில் ஏற்படும் குறைகளைப் பற்றியும் விளக்கப்பட்டு உள்ளது.

பிரபஞ்சம் 1800 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கக்கூடும் என்று அறிவியல் மேதைகள் கணக்கிட்டுள்ளார்கள். பிரபஞ்சத்தில் விண்வெளி என்பது எல்லா திசைகளிலும் முடிவற்ற அளவில் விரிவடைந்து கொண்டே செல்லும் ஒரு பரப்பாகும். விண்வெளியில் தோன்றிய நட்சத்திரத்திலிருந்து உண்டானவைதான் கிரகங்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் வானத்தில் தனித்தனி மண்டலங்களாக உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்திலும் தோன்றிய கிரகங்கள் அந்த நட்சத்திரத்தையே மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன.

சூரியன் ஒரு நட்சத்திரம். அதிலிருந்து தோன்றிய கிரகங்கள் சூரியனையே மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன. பிரபஞ்சம் என்ற பெரிய பகுதியில் ஒரு புள்ளி அளவே சூரியக்குடும்பம் ஆகும். சூரியக்குடும்பத்தின் நடுவில் சூரியன் உள்ளது. நாம் வாழும் பூமியைச் சுற்றிச் சுற்றி வட்டமடித்துக் கொண்டே இருப்பது போல கிரகங்களில் பல நமது கண்களுக்கு காட்சி தருகின்றன. ஆனால் உண்மையில் கிரகங்கள் பூமியைச் சுற்றவில்லை. சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன. சூரியக்குடும்பத்தில் முதல் கிரகம் புதன் முதல் சுற்றுப்பாதையில் சுற்றி வருகின்றது. சுக்கிரன் இரண்டாம் சுற்றுப்பாதையிலும், பூமியும், சந்திரனும் மூன்றாம் சுற்றுப்பாதையிலும், செவ்வாய் நான்காம் சுற்றுப்பாதையிலும், குரு ஐந்தாம் சுற்றுப்பாதையிலும், சனி ஆறாம் சுற்றுப்பாதையிலும் சுற்றி வருகின்றன. இவர்களுடன் பூமியின் துணைக்கோளான சந்திரன் பூமியையும் சுற்றி சூரியனையும் சுற்றி வருகின்றது. சந்திரன் வீதியும், சூரியன் வீதியும் சந்திக்கும் இரு இடங்கள் தான் இராகு, கேது கிரகங்கள். இந்த இரண்டு நிழல் கிரகங்களையும் இந்திய ஜோதிடம் அங்கீகரித்துள்ளது.

பூமிக்கு அருகாமையில் உள்ள துணைக்கிரகம் சந்திரன். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், இராகு, கேது என்ற

ஒன்பது கிரகங்களை நவக்கிரகங்கள் என்று சொல்கிறோம். பூமியும் ஒரு கிரகமே. பூமியில் நாம் வாழ்வதால் அதைக் கிரகமாக கருதாமல் மற்ற கிரகங்களை நவக்கிரகங்கள் என்கிறோம். சூரியன் ஒரு நட்சத்திரம். சூரியன் சுய ஒளி பெற்றது. ஆனால் அதைச் சுற்றி வரும் பூமியும், மற்ற கிரகங்களும் சுய ஒளி இல்லாதவை. சூரியனின் ஒளியை மற்ற கிரகங்கள் உள்வாங்கி பிரதிபலிக்கின்றன.

நாம் வாழும் பூமி நீள் உருண்டை (எலிப்டிக்கல்) வடிவமானது. பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதோடு சூரியனையும் சுற்றிவருகிறது. அதனால் தான் இரவும், பகலும் ஏற்படுகிறது. சங்க இலக்கியங்களில் கோள்கள், இராசி மண்டலங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் சுமேரியாவில் அசீரிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் வானியல், விஞ்ஞானம் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்தது. 27 நட்சத்திரக் கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. கோள்களுக்கும் புதிய பெயர்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

வான சாஸ்த்திரம் முதலில் வளர்ச்சி பெற்று பின்னர் அது ஜோதிடவியலாக உருமாறியது. இந்த உருமாற்றம் மேல்நாட்டுச் ஜோதிடத்தில் மெசபடோமியா, பாபிலோனியா, சால்தியா, கிரேக்கம், எகிப்து, சீனா, அரேபியா போன்ற நாடுகளின் வானசாஸ்த்திர வளர்ச்சியும் அத்துடனான ஜோதிட சாஸ்த்திர வளர்ச்சியும் காணப்படுகிறது. ஜோதிடவியலின் அடிப்படை உண்மைகள் முற்காலம், தற்கால வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ள கோட்பாடுகளேயாகும். இக் கோட்பாடுகளின்படி முற்றுப்பெற்ற சோதிடப்பலன்கள் கூறப்படுகிறது.

நவீனகாலச சோதிட வளர்ச்சியின் தந்தை எனப் போற்றப்படுபவர் தமிழகத்தைச் சேர்ந்த கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆவார். இவர் இந்திய சோதிட முறையில் உள்ள சில விதிகளைத் தவிர்த்து தனது கண்டுபிடிப்பில் உருவான புதிய விதிகளைக் கொண்டு பலன் கூறும் முறையை எற்படுத்தியுள்ளார். இவரது கணிதமுறை கே.பி. கிருஷ்ணமூர்த்தி பத்ததி முறை என்று இவரது பெயரிலேயே அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் பல பல்கலைக்கழகங்களில் சோதிடத்திற்கு தனித்துறை ஏற்படுத்தப்பட்டு பட்டயம் முதல் முனைவர் பட்டம் வரை சோதிடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் இயல்

‘குருவின் கோச்சாரமும், குழந்தை பிறப்பும்’ என்ற தலைப்பிலான இரண்டாம் இயலில் ஒவ்வொரு கிரகமும் ஒரு இராசியைக் கடக்கும் காலம் பற்றியும், கிரகங்கள் ஒரு நாளில் சுற்றுவட்டத்தில் செல்லும் பாதைகள் பற்றியும், கிரகங்கள் சந்திரன் நின்ற இராசிக்கு நன்மை செய்யும் பாவங்கள் பற்றியும், குருவின் கோச்சாரப்பலன்கள் பற்றியும், குழந்தை பிறப்புக்கான கோச்சாரக் குருவின் அருள் பற்றியும், குழந்தை பிறக்கும்போது கோச்சாரக் குரு பற்றியும், நட்சத்திரங்களுக்குரிய தசா வருடங்கள் பற்றியும், குருவின் தசா. புத்தி விவரங்களும், குரு தசா, புத்தியின் பொதுப்பலன்களும், ஐந்தாம் பாவத்துடன் தொடர்பு கொண்ட குருவின் தசா, புத்திக் காலங்களில் குழந்தை பிறப்பு பற்றியும் விளக்கமாக கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் இயல்

‘குழந்தை பிறப்புக்கான கோள் அமைப்புகளும், பகுப்பாய்வும்’ என்ற தலைப்பிலான மூன்றாம் இயலில் குழந்தை பிறப்பு பற்றிய விளக்கமும், நால்வகை வந்தியா தோஷங்கள் பற்றியும், காரகன், பாவாதிபதிகள் பற்றிய விளக்கமும், இலககின வாரியாக காரகன், ஸ்தானாதிபதி பற்றிய விளக்கமும், குருவின் முழுபலம் அறிதல் பற்றியும், குருவின் சமபலம் அறிதல் பற்றியும், குருவின் பலமின்மை அறிதல் பற்றியும், ஐந்தாம் பாவத்தின் முழுபலம் அறிதல் பற்றியும், ஐந்தாம் பாவத்தின் பலமின்மை அறிதல் பற்றியும், ஐந்தாம் அதிபதியின் முழுபலம் அறிதல் பற்றியும், ஐந்தாம் அதிபதியின் பலமின்மை அறிதல் பற்றியும், குழந்தைப்பேறுக்கான பல நிர்ணயம் பற்றியும், ஆய்வு விதிகளின் சேர்க்கையால் குழந்தைகளின் வகைகளை அறிதல் பற்றியும், ஆய்வு விதிகளின் சேர்க்கைப்படி குழந்தைப் பேற்றின் பலத்தை நிர்ணயம் செய்தல் பற்றியும், குழந்தை பிறப்புக்கான கோள் அமைப்புகள் பற்றியும், யூக விதிகள் பற்றியும், அவற்றிற்கான விளக்கமும், ஆய்வு விதிகளைக் கொண்டு ஜாதகங்களின் ஆய்வுப் பகுப்பு பற்றியும் விளக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்காம் இயல்

‘தொகுப்பாய்வு’ என்ற தலைப்பிலான நான்காம் இயலில் சேகரம் செய்யப்பட்ட 200 ஜாதகங்களை ஆய்வு யூக விதிகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதில் கிடைக்கப்பெற்ற ஆய்வு முடிவுகளைத் தொகுத்து ஒரு தொகுப்புரையாக வழங்கப்பட்டு உள்ளது.

முடிவுரை

ஆய்வேட்டின் இறுதி உரையாக அமையும் இப்பகுதியில் ஒவ்வொரு இயல்களில் ஆராய்ந்து பெற்ற முடிவுகளின் அடிப்படையில் முடிவுகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து இயல்களின் முடிவுகள் தொகுக்கப்பட்டு முடிவுரையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுத் தொடர்புடைய மேலாய்வுகள் சுட்டப்பட்டுள்ளன. பகுப்பாய்விற்காகப் பெறப்பட்ட 200 சாதகங்களோடு ஆய்வுவிதிகள் பொருத்திப் பார்க்கப்பட்டுள்ளன. முடிவுரையை அடுத்து ஆய்விற்குப் பயன்பட்ட துணைநூல் பட்டியல் இடம்பெறுகிறது. ஆய்வேட்டின் இறுதியில் பின்னிணைப்புகளாக ஆய்வின் மூலம் கிடைக்கப் பெற்ற முடிவுகளின் பட்டியல்கள், ஆய்வுக்கு சாதகங்களை கொடுத்துதவிய சாதகர்களின் தகவல்கள், ஆய்வு விளக்க வரைபடம் அட்டவணையுடனும், விளக்கத்துடனும் தரப்பட்டுள்ளன. குருக்கோள் பற்றிய வலைதளப் படங்கள் தரப்பட்டுள்ளன.

இயல் - 1

வானியலும், குருக்கோளும்

அறிமுகவுரை

இவ்வியலில் சோதிடம் பற்றி ஓர் அறிமுகமும், நவக்கோள்கள், பன்னிரு இராசிகள் பற்றிய விளக்கமும். கோள்களுக்கான வேறு பெயர்களும், நவக்கிரகங்களுக்குரிய நட்சத்திர மண்டலங்களும், குருபற்றிய விண்வெளித் தகவல்களும், குருபற்றிய தகவல்களும், பாவகப்பலன்களும், பன்னிரு பாவங்களில் குரு நின்ற பலன்களும், குருவின் காரகத்துவ குணங்களும், குருவைப் பற்றிய சிறப்புச் செய்திகளும், குருவின் மேஷம் முதலான மீனம் வரையிலான இராசிமண்டல சஞ்சாரத்தால் ஏற்படும் குழந்தைப் பிறப்பு பற்றியும், குருவின் வக்கிர, அஸ்தமன, அதிசார நிலைகளால் குழந்தைப் பிறப்பில் ஏற்படும் குறைகள் பற்றியும் விளக்கமாக அறியப்பட உள்ளது.

1.0. சோதிடம் - ஓர் அறிமுகம்

வானியல் என்பது வானத்தில் உலா வரும் கோள்கள், நட்சத்திரங்கள், எரிகற்கள் முதலியவை பற்றி ஆராய்ந்து அதன் தன்மைகளைப் பற்றிக் கூறும் ஒரு சாஸ்திரம் ஆகும். ஜோதிடம் என்பது கோள்கள், நட்சத்திரங்கள், உபக்கோள்கள் முதலியவற்றின் தன்மைகள், இயக்கங்கள், பூமி மற்றும் பூமியின் மேலுள்ள உயிரினங்கள் மீது அது ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றி ஆராய்ந்து சொல்வது ஆகும்.

ஜோதிடம் என்பது அறிவைத்தரும் ஒளி எனப் பொருள்படும். ஒரு குழந்தை தன் முற்பிறவியல் செய்த பாவ, புண்ணியத்தைத் தழுவியே இப்பிறவியிலும் அப்பலன்களை அனுபவிக்கப் பிறவி எடுக்கின்றது என்பதே இந்துமத நம்பிக்கை. ஒருவரின் முற்பிறவியின் இரகசியத்தை சொல்வதே ஜாதகம் ஆகும். நல்வினை செய்வோர், நன்மைகளையும். தீவினை செய்வோர், தீமைகளையும் அடையும்படி ஏற்படுத்தப்பட்ட கோட்பாட்டின்படி அமைவதுதான் ஜாதகம். ஜோதிடம் மனித வாழ்வின் பல்வேறு அங்கங்களின் ஒருங்கிணைந்த ஒன்றாகும். மனிதன் அனுபவித்த இன்னல்களில் இருந்து விடுபட ஜோதிடம் உளவியல் முறையில் பயன்படக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது. மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் பல்வேறு காரணங்களால் துன்பத்திற்கு ஆளாகித் துவண்டு போகின்றனர். அப்பொழுது அவர்களைத் தட்டிக் கொடுத்து நாளைய வாழ்க்கை மீது நம்பிக்கை கொள்ளச் செய்யும் பணியைச் ஜோதிடம் செய்கின்றது. பிரபஞ்ச உற்பத்தியின் தோற்றத்தை முழுமையாக

அறிவிக்கும் சாஸ்த்திரமாக ஜோதிடம் விளங்குகின்றது. ஜோதிட சாஸ்த்திரம் குழந்தை பிறக்கும் போதுள்ள கிரக நிலைகளால் கட்டுப்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. இந்த கிரகஙகளே நமது வாழ்வின் அடிப்படைச் சக்திகள். அவையே நம்மை இயக்குகின்றன. இந்த கிரகங்கள் நாம் இருக்கும் நிலை பொருத்தும், தங்களுக்குள்ள தொடர்புகள் பொருத்தும், பல்வேறு சக்தியைப் பெறுகின்றன. அவை ஒன்று சேர்ந்து நடத்தும் வழியிலேயே வாழ்க்கை நடக்கிறது. கிரகங்கள் தங்கள் சக்திக்கு தகுந்தவாறு உயிரினங்களின் உயிர் வாழ்க்கை குறிப்பிட்டுள்ள காரகத்துவத்திற்கும், பாவத்திற்கும் சில சக்திகளை குழந்தை பிறக்கும் சமயம் கொடுக்கின்றது. இவை யாவற்றையும் கணிதம் மூலமாக ஆராய்வதுதான் ஜாதகக் கணிதம் ஆகும்.

பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே எகிப்து, தேசத்தினரும், பெருவைச் சேர்ந்த ‘இன்கா’ இன மக்களும் மெக்சிகோ நாட்டில் ‘அஸ்டெக்’ மக்களும் ஜோதிடம் பற்றி அறிந்திருந்தனர். பாபிலோனியரும் இயேசு பிறப்பதற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே ஜோதிடம் பற்றி அறிந்திருந்தனர். காலத்தைக் கணக்கிடும் முறைமை உலக இனங்கள் பலவற்றிலும் காணப்பட்டது. உலகில் தோன்றிய நாகரிகங்களை ஒன்பது பிரிவுகளாகப் பகுப்பர். அவையாவன :

1. எகிப்திய நாகரிகம்
2. மெசப்படோமிய நாகரீகங்கள்
    - ❖ சுமேரிய நாகரிகம்
    - ❖ பாபிலோனிய நாகரீகம்
    - ❖ அசீரிய நாகரீகம்
    - ❖ சால்திய நாகரிகம்
3. பாரசீக நாகரீகம்
4. யூத நாகரீகம்
5. இந்திய நாகரீகங்கள்
    - ➢ சிந்து சமவெளி நாகரிகம்
    - ➢ திராவிட நாகரீகம்
    - ➢ இந்தோ ஆரிய நாகரீகம்
6. சீன நாகரீகம்

7. அமெரிக்க நாகரீகங்கள்
   - மாயர் நாகரீகம்
   - அஸ்டெக் நாகரீகம்
   - இன்கா நாகரீகம்
8. கிரேக்க நாகரீகங்கள்
   - ஹெல்லனிக் நாகரீகம்
   - ஹெல்லஸ்டினிக் நாகரீகம்
9. உரோமானிய நாகரீகம்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாகரீகங்கள் பலவும் வானியலைப்பற்றி பல்வேறு கதைப் பாடல்களின் வழியாகவும், கணக்கீடுகள் வழியாகவும் அர்த்தப்படுத்திக் கொள்ள முயன்றுள்ளன. இவையே ஜோதிடத்தின் உலக அளவிலான தோற்றுவாய் ஆகும். உலக இலக்கியங்களில் காலக்கணிப்பு, குறி சொல்லுதல், தீர்க்க தரிசன நிறைவேற்றம் என்பதை மையமாக வைத்தே ஜோதிடம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

உலகில் இந்திய ஜோதிடம் என்பதை காலத்தால் சோதிக்கப்பட்ட மிகப்பழமையான ஜோதிடமுறையாகும். ஜோதிடம் என்னும் சம்ஸ்கிருத வார்த்தைக்கு ‘ஒளியின் விஞ்ஞானம்’ எனப் பொருள்படுகிறது. இந்த ஜோதிடத்தை மேலை நாட்டினர்கள் வேதாந்த ஜோதிடம் என்று அழைக்கின்றனர். வேத காலத்திலிருந்து ஜோதிட சாஸ்த்திரத்தின் சுவடுகள் தெரிகின்றது. நமது வேதங்களில் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னரே ஜோதிட சாஸ்த்திரம் பற்றி தெளிவாக எழுதப்பட்டுள்ளது.[1] வேதம் ஆறு அங்கங்களை உடையது. வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒரு அங்கமே ஜோதிடம் ஆகும். அவையாவன :

1. ஜோதிடம் - கண்களையும்
2. கல்பம் - கைகளையும்
3. நிருத்தம் - காதையும்
4. சிட்டை - மூக்கையும்
5. வியாகரணம் - முகத்தையும் [2]
6. சந்தஸ் - கால் பாதத்தையும்

குறிப்பதாக அமைகின்றன. கண்ணில்லாது இதர அங்கங்கள் இருந்தும் பலனில்லாதத போல, வேதத்தின் கண்ணாக மிகவும் முக்கியமாக விளங்குவது ஜோதிடமே என்கிறது வேதசாஸ்திரம்.

வேதத்தின் அங்கமான ஜோதிடமும் ஆறு அங்கங்களைக் கொண்டு உள்ளது. அவை.

1. கணிதம் - கிரகங்களின் இருப்பிடம், நகர்தல் போன்றன பற்றிய கணக்கீடுகள்.

2. கோணம் - கோள வடிவில் உள்ள கிரகங்கள், அவற்றின் சுழற்சி பற்றியது.

3. ஜாதகம் - பிறந்த ஜாதகத்தை கிரக அடிப்படையில் கணித்து, பரிசீலித்து பலன் சொல்வது.

4. பிரசன்னம் - ஜாதகர் கேட்கும் கேள்விக்கு விடையை அந்த நேரத்தின் கிரக நிலையை வைத்து பதிலளிப்பது. இவ்வாறு பகுப்பாய்வு செய்து உலக மக்கள் பயனடையுமாறு வானவியல் வல்லுநர்களும், ஞானிகளும் ஜோதிடத்தை உருவாக்கினார்கள்.

1.1. நவக்கோள்கள் - விளக்கம்

பிரபஞ்சம் 1800 கோடி[1] ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கக்கூடும் என்று அறிவியல் மேதைகள் கணக்கிட்டுள்ளார்கள். பிரபஞ்சத்தில் விண்வெளி என்பது எல்லா திசைகளிலும் முடிவற்ற அளவில் விரிவடைந்து கொண்டே செல்லும் ஒரு பரப்பாகும். விண்வெளியில் தோன்றிய நட்சத்திரத்திலிருந்து உண்டானவைதான் கிரகங்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் வானத்தில் தனித்தனி மண்டலங்களாக உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்திலும் தோன்றிய கிரகங்கள் அந்த நட்சத்திரத்தையே மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன.''

சூரியன் ஒரு நட்சத்திரம். [2] அதிலிருந்து தோன்றிய கிரகங்கள் சூரியனையே மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன. பிரபஞ்சம் என்ற பெரிய பகுதியில் ஒரு புள்ளி அளவே சூரியக்குடும்பம் [3] ஆகும். சூரியக்குடும்பத்தின் நடுவில் சூரியன் உள்ளது. நாம் வாழும் பூமியைச் சுற்றிச் சுற்றி வட்டமடித்துக் கொண்டே இருப்பது போல கிரகங்களில் பல நமது கண்களுக்கு காட்சி தருகின்றன. ஆனால் உண்மையில் கிரகங்கள் பூமியைச் சுற்றவில்லை. சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன. சூரியக்குடும்பத்தில் முதல் கிரகம் புதன் முதல் சுற்றுப்பாதையில்[4] சுற்றி வருகின்றது. சுக்கிரன் இரண்டாம் சுற்றுப்பாதையிலும், பூமியும், சந்திரனும் மூன்றாம் சுற்றுப்பாதையிலும், செவ்வாய் நான்காம் சுற்றுப்பாதையிலும், குரு ஐந்தாம் சுற்றுப்பாதையிலும், சனி ஆறாம் சுற்றுப்பாதையிலும் சுற்றி வருகின்றன. இவர்களுடன் பூமியின் துணைக்கோளான சந்திரன் பூமியையும் சுற்றி சூரியனையும் சுற்றி வருகின்றது. சந்திரன் வீதியும், சூரியன் வீதியும் சந்திக்கும் இரு இடங்கள் தான் இராகு, கேது[5] கிரகங்கள். இந்த இரண்டு நிழல் கிரகங்களையும் இந்திய ஜோதிடம் அங்கீகரித்துள்ளது.

பூமிக்கு அருகாமையில் உள்ள துணைக்கிரகம் சந்திரன். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், இராகு, கேது என்ற ஒன்பது கிரகங்களை நவக்கிரகங்கள் என்று சொல்கிறோம். பூமியும் ஒரு கிரகமே. பூமியில் நாம் வாழ்வதால் அதைக் கிரகமாக கருதாமல் மற்ற கிரகங்களை நவக்கிரகங்கள் என்கிறோம். சூரியன் ஒரு நட்சத்திரம்.

சூரியன் சுய ஒளி பெற்றது. ஆனால் அதைச் சுற்றி வரும் பூமியும், மற்ற கிரகங்களும் சுய ஒளி இல்லாதவை. சூரியனின் ஒளியை மற்ற கிரகங்கள் உள்வாங்கி பிரதிபலிக்கின்றன.

நாம் வாழும் பூமி நீள் உருண்டை (எலிப்டிக்கல்) வடிவமானது. பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதோடு சூரியனையும் சுற்றிவருகிறது. அதனால் தான் இரவும், பகலும் ஏற்படுகிறது.[6] சங்க இலக்கியங்களில் கோள்கள், இராசி மண்டலங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் சுமேரியாவில் அசீரிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் வானியல், விஞ்ஞானம் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்தது. 27 நட்சத்திரக் கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. கோள்களுக்கும் புதிய பெயர்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1.2. பன்னிரு இராசிகள்

எண்	சுமேரியப் பெயர்	கிரேக்கப்பெயர்	தமிழ்ப்பெயர்
1	லுகுங்கா	ஏரிஸ்	மேஷம்
2	முல்	டாரஸ்	ரிஷபம்
3	மாஸ்	ஜெமினி	மிதுனம்
4	குங்சு	கேன்சர்	கடகம்
5	உரா	லியோ	சிம்மம்
6	அபசின்	விர்கோ	கன்னி
7	சிபானிட்டு	லிப்ரா	துலாம்
8	கிர்தாப்	ஸ்கார்பியோ	விருச்சிகம்
9	பா	சாஜிடேரியஸ்	தனுசு
10	சுகுர்	கேப்ரிகான்	மகரம்
11	கு	ஆக்வேரியஸ்	கும்பம்
12	ஜிப்	பிசியஸ்	மீனம்

1.3. கோள்களும் வேறு பெயர்களும்

எண்	சுமேரியப் பெயர்	கிரேக்கப்பெயர்	தமிழ்ப்பெயர்
1	ஷாமேஷ்	சன்	சூரியன்
2	சின்	மூன்	சந்திரன்
3	இங்கார்	வீனஸ்	சுக்கிரன்
4	நெபோ	மெர்க்குரி	புதன்

5	நெர்சல்	மார்ஸ்	செவ்வாய்
6	நினுர்த்தா	சாடர்ன்	சனி
7	மார்டக்	ஜீபிட்டர்	வியாழன்

நவக்கிரகங்கள் என்று சொல்லக்கூடிய ஒன்பது கிரகங்களும், பூமி என்ற ஒரு கிரகமும் சேர்ந்து மொத்தம் பத்துக்[8] கிரகங்களாகின்றன. இந்த பத்துக் கிரகங்களின் அணிவகுப்பை வரிசைப்படுத்தி பார்ப்போமேயானால் பூமிக்கு ஒரு புறம் சந்திரன்-சுக்கிரன்-புதன்-ஆதித்தன் என்று இருக்க, அதே பூமிக்கு மறுபக்கத்தில் செவ்வாய் என்று சொல்லக்கூடிய அங்காரகன்-குரு-சனி என்ற மிகப்பிரமாண்டமான கிரகங்களும், அதிக சக்தியும், வல்லமையும் பெற்ற கிரகங்களும் இருக்கின்றன.[9]

உண்மைத் தத்துவப்படி கிரகங்களின் சுழற்சி எப்படி என்றால் ஆதித்தன் தாம் நின்ற இடத்திலேயே இருந்து கொண்டு தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. இராகு, கேது நிழல் கிரகங்கள் என்றும், சர்ப்பக்கிரகம் என்றும் சொல்லப்படுவதால் அவைகளின் மீது விழும் சர்ப்ப ரூபமான நிழலை மட்டுமே காண முடிகிறது. ஆக மொத்தத்தில் புதன், இராகு, கேது ஆகிய கிரகங்களைத் தவிர மற்ற ஆறு கிரகங்களைக் கண்ணால் பார்க்க இயலும்.

இராசி இல்லங்கள் 12இல் மேஷம் முதல் மீனம் வரையில் 12 இராசிகளில் 27 நட்சத்திர மண்டலங்கள் இடம் பெற்று இருக்கின்றன என்றும் அறிதல் வேண்டும். இராசி ஒன்றுக்கு இரண்டே கால் நட்சத்திரங்கள் வீதம் 12 ராசிகளில் 27 நட்சத்திரங்கள் இடம் பெற்று இருக்கின்றன.

நவக்கிரகங்கள் அமைந்துள்ள விதம் சூரியன்-புதன்-சுக்கிரன்-சந்திரன்-அங்காரகன்-குரு-சனி ஆகிய ஏழும், நிழல் கிரகங்களான இராகு, கேது ஆகிய இரண்டும் கூடி மொத்தம் ஒன்பது கிரகங்களாகும். இவைகளே ஜோதிட சாஸ்திரத்தில் ‘‘நவக்கிரகம்’’ என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ளன. இந்த நவக்கிரகங்கள் ஏழும் இராசி வீடுகள் பன்னிரெண்டில் வலம் வந்த வண்ணமாக இருக்கின்றன. இராகு, கேது என்ற இரண்டு நிழல் கோள்கள் இராசி மண்டலத்தில் வல, இடமாகச் (Anti-Clockwise) சுற்றி வருகின்றன.

இந்த 12 இராசி வீடுகளில் இடம் பெற்றுள்ள 27 நட்சத்திரங்களும், ஒன்பது கிரகங்களும் எப்பொழுதும் நமக்குப் பலன்களைத் தந்து கொண்டு இருக்கின்றன. சூரியனைப் பகலில் அன்றாடம் பார்க்கின்றோம். சுக்கிரனை காலை வெள்ளி, மாலை வெள்ளி என்றும் உதய அந்தி சந்திகளிலும், சில சமயம் இரவு வேளைகளிலும் நன்றாகப் பார்க்கிறோம். இது தூய வெள்ளை நிறத்தில் வெளேரென்ற புடலம்பூவைப் போலக் காட்சியளிக்கிறது. புதன் பச்சைக் கிரகம் என்று சொல்லப்படுகிறது. இது சூரியனுக்கு மிகச் சமீபத்தில் இருப்பதால் இதனைச் சாதாரணக் கண்களால் பார்க்க முடியாது.

சந்திரனை இரவிலும், பகலிலும் ஒவ்வொரு நாளும் பிறைத்தோற்றத்துடன் காண்கின்றோம். பௌர்ணமி தினத்தன்று மட்டும் முழு நிலவைக் காண முடிகிறது. அமாவாசை தினத்தில் நிலவை முற்றிலுமாகப் பார்க்க இயலவில்லை.

அங்காரகன் என்று சொல்லக்கூடிய செவ்வாயை இரவில் சில சமயம் மட்டும் செந்நிறமான தோற்றத்துடன் ஆகாயத்தில் காண்கிறோம். குரு கிரகத்தையும் சில சமயம் மாலையிலும், இரவிலும் மஞ்சள் நிறத்துடன் வான மண்டலத்தில் இருப்பதைக் காண்கிறோம். சனி கிரகத்தையும் சில சமயம் நீல நிறத்துடன் வானத்தில் காண முடிகிறது.

நட்சத்திர ஒளிக்கும்,கிரகங்களின் ஒளிக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. நட்சத்திரங்களில் இருந்து வரும் ஒளி கண் சிமிட்டுவது போலக் காணப்படுகின்றது. ஆனால் கிரகங்களில் இருந்து வரும் ஒளியானது ஆடாது அசையாது ஒளிர்கிறது.

ஒரு நட்சத்திரத்தை 4 பாகமாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு பாதம் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு இராசியிலும் 9 பாதங்கள் நட்சத்திரங்களில் இடம் பெற்று இருக்கின்றன .27 நட்சத்திரங்களும் 108 பாதங்களாகப் பிரிக்கப்பட்டு கணக்கிடப்படுகின்றன.

மேஷம் முதல் கடகம் வரையிலான நான்கு இராசி வீடுகளிலும் அஸ்வினி – பரணி - கிருத்திகை – ரோகிணி - மிருகசீரிஷம் - திருவாதிரை - புனர்பூசம் - பூசம் - ஆயில்யம் என்று 9 நட்சத்திரங்கள் இடம் பெற்று இருக்கின்றன. இது முதல் வீதியாகும்.

சிம்ம இராசி முதல் விருச்சிக இராசி வரையிலான நான்கு இராசிகளிலும் மகம் - பூரம் - உத்திரம் - அஸ்தம் - சித்திரை – சுவாதி – விசாகம் - அனுஷம் - கேட்டை ஆகிய 9 நட்சத்திரங்கள் இடம் பெற்று இருக்கின்றன. இது இரண்டாம் வீதியாகும்.

தனுசு இராசி முதல் மீனம் இராசி வரையில் உள்ள நான்கு இராசிகளிலும் மூலம் - பூராடம் - உத்திராடம் - திருவோணம் - அவிட்டம் - சதயம் - பூரட்டாதி – உத்திரட்டாதி – ரேவதி ஆகிய 9 நட்சத்திரங்கள் இடம் பெற்று இருக்கின்றன. இது மூன்றாம் வீதியாகும்.[10]

1.4. நவக்கிரகங்களுக்குரிய நட்சத்திரமண்டலங்கள்

- கேதுவின் நட்சத்திரங்கள் - அஸ்வினி – மகம் - மூலம்
- சுக்கிரனின் நட்சத்திரங்கள் - பரணி – பூரம் - பூராடம்
- சூரியனுடைய நட்சத்திரங்கள் - கிருத்திகை – உத்திரம் - உத்திராடம்
- சந்திரனின் நட்சத்திரங்கள் - ரோகிணி – அஸ்தம் - திருவோணம்
- அங்காரகனின் நட்சத்திரங்கள் - மிருகசீரிஷம் - சித்திரை – அவிட்டம்
- இராகுவின் நட்சத்திரங்கள் - திருவாதிரை – சுவாதி – சதயம்
- குருவின் நட்சத்திரங்கள் - புனர்பூசம் - விசாகம் - பூரட்டாதி
- சனியின் நட்சத்திரங்கள் - பூசம் - அனுஷம் - உத்திரட்டாதி
- புதன் நட்சத்திரங்கள் - ஆயில்யம் - கேட்டை – ரேவதி[11]

12 இராசி வீடுகளில் மிதுனம்-சிம்மம்-தனுசு-கும்பம் ஆகிய நான்கு இராசி வீடுகளில் எந்த கிரகத்திற்கும் உச்சமும் கிடையாது, நீச்சமும் கிடையாது.

- மேஷம்,சிம்மம்,தனுசு – நெருப்பு இராசிகள்
- ரிஷபம்,கன்னி,மகரம் - நிலம் இராசிகள்

- மிதுனம்,துலாம்,கும்பம் - காற்று இராசிகள்
- கடகம்,விருச்சிகம்,மீனம் - நீர் இராசிகள்

மேஷம்-மிதுனம்-சிம்மம்-துலாம்-தனுசு-கும்பம் ஆகிய இராசிகள் ‘‘ஆண் இராசிகள்’’ (ஒஜை இராசிகள்) எனப்படுகின்றன.

ரிஷபம்-கடகம்-கன்னி-விருச்சிகம்-மகரம்-மீனம் ஆகிய ஆறு இராசிகளும் ‘‘பெண் இராசிகள்’’ (யுக்ம இராசிகள்) எனப்படுகின்றன.

நவக்கிரகங்களில் சூரியன், தேய்பிறைச் சந்திரன், செவ்வாய், பாவருடன் சேர்ந்த புதன், சனி, இராகு, கேது ஆகிய கோள்கள் பாவக்கிரகங்கள் என்றும், வளர்பிறைச் சந்திரன், சுபருடன் சேர்ந்த புதன், வியாழன், சுக்கிரன் ஆகிய கோள்கள் சுபக்கிரகங்கள் என்றும் ஜோதிட ஆசான்கள் பாகுபடுத்தி உள்ளார்கள். சுபக்கிரகங்களில் முதன்மையானவர் வியாழ பகவான் என்ற குரு என்று ஜோதிட சாஸ்திரங்கள் கூறுகின்றன.

1.5. குரு பற்றிய விண்வெளி விளக்கம்

சூரியமண்டலத்தில் சூரியனை மையமாகக் கொண்டு சுற்றி வரும் கோள்கள் புதன், வெள்ளி, சந்திரன், பூமி, செவ்வாய், குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகிய பத்து கோள்கள். சூரியன் ஒளி பெற்றது. ஆனால் அதைச் சுற்றி வரும் கிரகங்களுக்கு சுய ஒளி கிடையாது. சூரியனின் ஒளியைப் பெற்று கிரகங்கள் பிரதிபலிக்கின்றன.

சூரியனிடமிருந்து குரு கிரகம் உள்ள தூரம் 778 மில்லியன் கிலோமீட்டர்கள் ஆகும். பூமியிடமிருந்து குரு கிரகம் உள்ள தூரம் தோராயமாக 628 மில்லியன் கிலோமீட்டர்களாகும்.

குருவிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்கு ‘‘மீத்தேன்’’[12] என்று பெயர். அது பயிர் வளர்ச்சிக்கும், உயிர் அணு வளர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ளது. அது மக்களுக்கு நன்மையே செய்கிறது.

அமெரிக்காவின் ‘‘நாசா’’ 1977ம் ஆண்டு வாயேஜர்-1 மற்றும் வாயேஜர்-3 என்ற விண்வெளி ஆய்வுச் செயற்கைக்கோள்களை விண்வெளியில் ஏவியிருந்தார்கள். அந்த ஆய்வுக்கலன்கள் ஒன்றன்பின் ஒன்றாக 1980ல் வியாழனையும், 1981இல் சனியையும் சந்தித்தன.

இவ்விரண்டு செயற்கைக்கோள்களும் தகவல் தொடர்பு மூலம் தெரிவித்த தகவல்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்து இனம் கண்டுள்ளார்கள்.

கிரக வரிசையில் செவ்வாய்க்கு அடுத்ததாக இருப்பதும் மற்ற கிரகங்களை விட பெரியதுமான வியாழன் அதிகமான வேகத்தில் தன்னைத் தானே சுழன்று கொண்டும், சூரியனுக்கு சுமார் 475,692,000 மைல் தொலைவில் 12 வருடங்களுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது. வியாழனில் ஒரு இரவு, பகல் நடைபெற 9 மணி 55 நிமிடம் ஆகிறது. ஏனைய கிரகங்களை விட மிகவும் துரிதமாகச் சுழலும் வியாழன் பூமியிலிருந்து அதிகபட்சம் 567,122,000 மைல்களும்,குறைந்தபட்சம் 384,262,000 மைல்கள் தூரத்திலும் இருக்கின்றன.

தனக்குத் தானே ஒரு பொருள் சுழற்சியை மேற்கொள்ளும் பொழுது காந்தசக்தி ஏற்படும். இதன் காரணமாக பூமி தன்னைத் தானே சுழற்றிக்கொள்வதால் வடதுருவ, தென்துருவ காந்தப் புலன்கள் ஏற்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் காரணமாக புறவெளி இயக்கத்தில் பூமி கட்டுப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இத்தகைய காந்தப்புலத்திற்கு விஞ்ஞானிகள் "வேன் ஆலன் பெல்ட்"[13] (Van Allan Belt) என்று பெயரிட்டுள்ளார்கள். அதிகமான காந்தப்புலத்தாக்குதல் மனிதனின் மூளையில் உள்ள மிதக்கும் நரம்புகளை[14] (Floating nervous of brain)அதிகமாகப் பாதிக்கும்.

பூமியைப் போன்றே வியாழனுக்கும் காந்தப் புலன் உண்டு. பிற கிரகங்களை விட வியாழன் மிக வேகமாக தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால் மிகப்பெரிய அளவில் காந்த ஈர்ப்பு சக்தியினைப் பெற்றுள்ளது. இதனால் வியாழன் ரேடியோ அலைகளை அதாவது மின் காந்த அலைகளை உற்பத்தி செய்து தன்னைச் சுற்றி அனுப்பிக்கொண்டுள்ளது. இக்காந்தப் புலன் வியாழனைச் சுற்றி கண்ணீர் துளி வடிவில் சூழ்ந்துள்ளன. மேலும் இக்காந்தப்புலன் பேராற்றலாம் சூரியனின் காந்தப்புலத்தைக் காட்டிலும் மிகப்பெரியதென்றும்! அக்காந்தப் புலத்தின் ஒரு பகுதி வால் போன்று நீண்டு உரித்த தேங்காயின்[15] வடிவத்தில் காணப்படுகிறது.

சூரியனில் நடைபெறும் அணுச்சிதைவின் காரணமாகச் சூரியன் வெப்பமும், சக்தியும் பெற்று பேராற்றலோடு திகழ்கின்றது. பிரம்மாண்டமான அளவில் அணுப்பிளவு நடைபெறுவதால் சூரியனில் தீப்பிழம்புகள் வெடித்துப் புயலாக மாறி மனிதக் கண்களுக்கு புலப்படாத வகையில் ஏனைய கிரகங்களைத் தாக்குகின்றது. இத்தகைய காந்தப்புயலின் தாக்குதல் காரணமாக வியாழனின் காந்த வாலின் பின்பக்கம் சீவிவிட்டாற் போலத் தோற்றத்தைப் பெற்றுள்ளது. இக்காந்தவால் சுமார் 48 கோடி கிலோமீட்டருக்கு மேலும் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். மிகப்பெரிய காந்தவாலுடன்[16] சேர்ந்த வியாழன் மிகப்பெரிய பேராற்றலோடு விளங்குகின்றது.

சூரியனைச் சுற்றி சுழலும் எல்லா கிரகங்களும் தமக்குத்தாமே ஓர் அச்சில் சுழலும் காரணமாக காந்தப்புலன் இயற்கையாகவே ஏற்பட்டுள்ளது. இக்காந்தப்புலன்கள் யாவும் தத்தமக்குரிய ஆற்றலை பிற கிரகங்கள் மீது செலுத்திக்கொண்டும் ஒன்றுக்கொன்று பிற கிரகங்களாலும், சூரியனின் மையப் பேராற்றலாலும் ஈர்க்கப்பட்டு ஈர்ப்பு விசை உடன்பாட்டிற்கொப்ப இயங்கிக்கொண்டுள்ளது. இவ்வாற்றல் காரணமாக கிரகங்கள் யாவும் தத்தம் செயல்களால் துரிதமும் தடையும் பெற்று இரசாயன மாறுபாடுகளைக் கொள்கின்றது. இப்பிரபஞ்ச இயக்கத்தின் முன்மாதிரியாக சூரியக்குடும்பம் விளங்குகின்றது! இயங்குகின்றது!!.

பிற கிரகங்களை இயக்கியும், தானும் இயங்கிக்கொண்டும் இருக்கின்ற நிலையில் சூரியன் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது! சூரியனாலும் பிற கிரகங்களாலும் ஆளப்படும் பூமியானது பிற கிரகங்களின் ஈர்ப்புவிசை, காந்தப்புலன் ஈர்ப்புவிசை காரணமாகவும் பாதிக்கப்படுகின்றது. சில சூழல்கள் தட்பவெப்ப நிலைகளில் கூட பெரிதும் மாறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றது. அத்தோடன்றி பூமியின் வாயுப்பரப்பில் இரசாயன மாறுபாடுகளையும் ஏற்படச் செய்கின்றது. இஞ்ஞனம் பூமியே மாறுகின்ற பொழுது, பூமியின் தன்மைக்கேற்ப தோன்றியுள்ள உயிர் அமைப்புகள் யாவும் தத்தம் பரிணாம வளர்ச்சியிலுண்டான இயல்புகளிலும் அவற்றின் செயல்களிலும் மாறுபாடு கொள்வதே இயற்கை!!

விஞ்ஞான வளராக் காலத்திற்கு முன்பே நம் முன்னோர்கள் மெய்ஞான அறிவு (Power Of Intution)கொண்டு கிரகங்களையும் நகர்வு விதிகளையும் செவ்வனே ஆராய்ந்து வகை செய்துள்ளார்கள். பூமி தோன்றுவதற்கும், ஏனைய கிரகங்கள் தோன்றுவதற்கும்? ஏன் இந்த பிரபஞ்சமே தோன்றுவதற்கே ஆதிகாரணமாக இருப்பது பஞ்ச பூதங்களில் பிரதானமான நெருப்பே காரணமாகும்!! ஆக ஒன்றுமில்லா வெற்றிடத்தில் நெருப்புக்கோளமான ஒளிதரும் சூரியன் தோன்றிய பின்னர் தான் கிரகங்கள் தோன்றி உயிர் தோன்ற ஏதுவாயிற்று!

விஞ்ஞான ஆய்வு நோக்கில் காணும்போது, சூரியனின் ஆற்றல்மிகு கதிர்களான ஆல்பா, பீட்டா, காமா[17] மற்றும் தொகுப்பான அல்ட்ரா வயலெட் என்னும் நீலக்கிரணம் பூமியின் மேல் காற்றென்னும் ஊடகத்தின் வழியாகப்பாய்ந்து தன் நச்சுத்தன்மையினை இழந்து இராசயன மாறுபாடுகளைக் காற்றிலேயே ஏற்படுத்துகின்றது. காலங்காலமாக பூமியின் மீது பட்டு வரும் சூரியனின் கிரணமும் வியாழன் தோற்றுவிக்கும் காந்தப்புலனின் காந்த எதிர் வினை ஆற்றிலும் பல லட்சக்கணக்கான வருடங்கள் தொடர்ந்தாற்போல் ஒன்று கூடி ஏற்படுத்தியதன் விளைவே! உலகில் பல உயிர்கள் தோன்றி பல்கிப்பெருகி வளர்ந்து பரிணாம வளர்ச்சிக்கு காரணமாகிறது. இதனை ஆராய்ந்து சொல்லிச் சென்ற பெருமை நமது முன்னோர்களுக்கே உரியது. வியாழனை புத்திரகாரகம்[18] என பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

மருத்துவ விஞ்ஞானத்தின் வழியாக ஆராயப்பட்ட சான்றுகளின் படி, உயிர்கள் புணர்ச்சியில் ஈடுபடும்போது சுக்கிலமெனும் உயிர்அணு (விந்து) நீண்ட வாலுடன் கூடிய அமைப்பினால் நீந்திக்கடந்து பெண்ணின் கருவறைக்குள் சென்று அங்கு மின்தூண்டல் காரணமாய் உருவாக்கி நிற்கும் சுரோணியம் என்னும் சினை முட்டைகளை உடைத்து ஒன்று கூடி ஒருயிர் கருவினைத் தோற்றுவிக்கும். உயிர்அணு நீந்துதலுக்கும் கர்ப்பஅணுக்கள் தோன்றுவதற்கும் உரிய விந்தைக்குக் காரணமாக இருப்பது மனித உடலின் கண் செவ்வனே செயல்படும் மின்காந்தப்புலனின் சக்தியே ஆகும்!. இக்காந்தப்புலன் சக்தி பூமியினால் ஏற்படுகிறதென்றாலும், பூமிக்கு எதிர்வினை காந்தப்புலமாக அமைந்தும், பிதுர் காரகனெனும் சூரியனின் காந்தப்புலத்தினை விட பேராற்றல்

பெற்றதும் வியாழனின் காந்தப்புலனே!! இக்காந்த அமைப்பு உயிர்களைத் தோற்றுவிக்கும் காரண காரியங்களுக்கு தோற்றுவாயாகி நின்றபடியால் வியாழனுக்கு புத்திரகாரகன் என்ற பெயர் வந்தது.

மேலும் வியாழனின் காந்தப்புலத்தின் ஈர்ப்பு காரணமாக உயிர்களுக்குக் கேடுகள் ஏதும் பயப்பதில்லை. மாறாக நன்மையையே செய்கின்ற காரணத்தால் ஜோதிடம் ஆக்கிய சான்றோர்கள் வியாழனை "நைசர்க்கிய சுபர்"[19] என்றழைத்தனர்.

1.6. குரு பற்றிய விளக்கம்

பிருகஸ்பதி என்ற திருநாமத்தைச் சொன்னாலே அறிவிலே சிறந்தவன் என்ற எண்ணந்தான் யாவருக்கும் உண்டாகும். நவக்கிரகங்களின் ஒன்றான குருவை வியாழனென்றும் பிருகஸ்பதியென்றும் கூறுவார்கள். தேவர்களுக்கெல்லாம் குருவாக விளங்குகிறவர் அவர். பிரம்மதேவனுடைய மானச புத்திரர் ஆங்கீரச முனிவர், விசுதாவின் புத்திரர் வியாழபகவான். அவருடைய மனைவி தாராதேவி. சகோதரன் உதத்யன், சகோதரி யோகசித்தி. அவருக்கு மமதை என்பவளிடம் தோன்றியவர் பரத்துவாசர்.[20] இவரின் புதல்வர்கள் எமகண்டன், கசன்.

அவர் காசிக்குச் சென்று அங்கே ஒரு இலிங்கத்தை நிறுவிப் பதினாயிரம் தேவஆண்டுகள் பூசித்துத் தவம் செய்தார். சிவபெருமான் அவர் தவத்துக்கு உவந்து, அவர் முன்னே எழுந்தருளி 'அரிய தவத்தைச் செய்து உன் மனத்தை இந்த லிங்கத் தியானத்திலே நிறுத்தியமையால் உன்னை ஜீவன் என்று உலகத்தார் வழங்குவர். உன்னுடைய குணங்களாலும் நம்முடைய திருவருளாலும் நீ இந்திரனுக்குக் குருவாக விளங்குவாயாக!'[21] என்று வரம் கொடுத்தார்.

"மன்பெருங் குணங்களை உடைய ஆற்றினும்
என்பெருங் கருணை இன்(று) இயைந்த தானும்நீ
பொன்பயில் இருவிசும்(பு) அளிக்கும் புங்கவற்(கு)
அன்புடைக் குரவனே ஆதி ஈண்டென"

இறைவன் அருளியதாகக் காசிகாண்டம் என்ற நூல் கூறுகிறது.

குரு பொன் வண்ண மேனியினர். நான்கு திருக்கரங்களை உடையவர். கமண்டலம், அட்சமாலை, யோகதண்டம் அபயம் என்பவற்றை அந்தக் கரங்களிலே காணலாம். விஷ்ணு தர்மோத்தரம் என்னும் நூலில் பிருகஸ்பதி இரண்டு கரமுடையார் என்ற செய்தி உள்ளது. அவற்றில் புத்தகமும் அட்சமாலையும் ஏந்திக்கொண்டிருப்பார் என்று அந்த நூல் கூறும். பல வகை அணிகளையும் பொன்னிற ஆடைகளையும் புனைந்தவர். அவர் சாந்தமூர்த்தி, சதுரமான பீடத்தில் இருப்பவர், கிழக்கு நோக்கி இருப்பவர், முடிவுடையார் பொன்னிறத்தினர் பொன்னிறச் சந்தனம் பூசுபவர் பொன்னிற மலர், பொன்மாலை, பொன்னுடை, பொற்குடை, பொன்னிறத்துவசம், பொற்றேர் உடையவர். மேருவை வலம் செய்பவர்.

தனுர் இராசிக்கும் மீன இராசிக்கும் தலைவர். தம்முடைய பத்தினியோடும் புத்திரர்களோடும் எழுந்தருளியிருப்பவர். இவருக்கு அன்ன வாகனமென்று ஒரு நூலும், யானை வாகனமென்று[22] ஒரு நூலும் சொல்கின்றன. இவருடைய வழிபாட்டுக்கு உகந்த தானியம் கடலை, மணி புஷ்பராகம், மலர் முல்லை, சமித்து அரசு, சுவை இனிப்பு. இவர் தம்மை வழிபடுகிறவர்களுக்கு வாக்கை அருள்பவர் மகப் பேற்றை வழங்குபவர். ஈசான்ய திசை இவருக்கு உரியது.

குருவின் அதிதேவதை பிரம்மன். தேவ குரு, ஸுராசார்யர், குரு என்ற திருநாமங்கள். இவருடைய உபதேசத்தால் இந்திரனும் தேவர்களும் நன்மை பெறுவதைக் குறிப்பிடுகின்றன. வாகீசர் என்பது ஒரு திருநாமம். பீதாம்பரர், யுவர் என்பவை இவருடைய பொன்னாடையினாலும் இளமைத் தோற்றத்தாலும் வந்த பெயர்கள் த்ரிலோகேசர், லோக பூஜ்யர், கிரகாதீசர் என்பவை இவருடைய தலைமையை வெளிப்படுத்தும். கருணை நிரம்பியவராதலின் தயாபரர் என்ற பெயர் வந்தது. இன்னும் நீதிஞ்ஞர், நீதிகாரகர், தாராபதி, கிரகபீடாபஹாரகர், ஸௌம்யமூர்த்தி முதலிய பெயர்களும் உண்டு.

தன்னிடம் வந்து பணிந்தவருக்குக் கற்பகம் போல் வேண்டியவற்றை அருளுகிறவர் பிருகஸ்பதி. ஏழைக்கு இரங்குபவர் பரை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நால்வகை வாக்குகளின் உருவை

விளக்குகிறவர். கருணை கடல் தூயவர் நீதி சாஸ்திர ஆசிரியர் களங்க மற்றவர்.

பிருகஸ்பதி இயற்றிய நீதி நூல் ஒன்று உண்டென்று கூறுவர். திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் ஓரிடத்தில் 'தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப்பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின் என்று எழுதுகிறார். அதிலிருந்து சுக்கிரநீதி என்ற நூல் இருப்பதுபோல, பிருகஸ்பதியின் பெயராலும் ஒரு நீதி நூல் வழங்கியிருக்கலாமென்று தெரிகிறது.

குரு தூய்மைக்கும் அறிவுக்கும் உறைவிடமாக விளங்குகிறார். குடை, முடி, சதுரமான பீடமுள்ள தேர், அதில் இரண்டு குதிரைகள் ஆகியவை அவருடைய தலைமைக்கு அடையாளங்கள். சாந்தமான பார்வை, உடம்பில் அணிந்த ருத்திராட்ச மாலைகள், கையிற் பிடித்த ஜபமாலை, ஞான முத்திரை காட்டும் கரம், ஒரு கையில் உள்ள யோக தண்டம், மற்றொன்றில் உள்ள கமண்டலம் ஆகியவை அவருடைய ஞானச் சிறப்பைக் காட்டுகின்றன. அவருக்கு அருகில் தாரை வீற்றிருக்கிறாள். அவளுடைய உருவம் சிறியதாக இருப்பது பிருகஸ்பதிக்கு முன் காமம் சிறுமையடைவதைக் காட்டுகிறது. பின்னே மேருமலையின் தோற்றத்தைக் காணலாம்.

வலப்பக்கத்தில் அதி தேவதையாகிய பிரம்மதேவன் அமர்ந்திருக்கிறான். மூன்று முகங்கள் முன் தோன்ற மற்றொன்று பின்னே மறைந்திருக்க அவன் காட்சி அளிக்கிறான். இடப்புறத்தில் பிரத்யதிதேவதையாகிய இந்திரன் தன் அரச நிலைக்கு ஏற்ற வகையில் யானையுடனும் ஆசனத்துடனும் விளங்குகிறான். நான்கு சக்கரங்கள் கொண்ட இரதத்தில் நாற்கோண பீடத்தில் எழுந்தருளியிருக்கிறார் வியாழ பகவான். ஓரத்தில் காணும் வில்லும் மீனும் அவர் தனுர் இராசிக்கும் மீன இராசிக்கும் அதிபதி என்பதை புலப்படுத்துகின்றன.

வாசவனார் போற்றுகுரு வாக்குக் கொருதலைவன்
தேசுறுபொன் போன்ற திருமெய்யான்--மாசில் அக்க
மாலைதண்டம் குண்டிகைசின் முத்திரைகை வைத்தகுண
சீலன் வியாழனென்று தேர்.[23]

1.7. பாவகச் செயல்பாடுகள் பற்றிய விளக்கம்

குழந்தை பிறப்புக்கான காரக பாவமான ஐந்தாம் பாவம் காரக பாவமாகத் தரப்பட்டுள்ளது. அப் பாவகச் செயல்பாடுகளும், அப் பாவங்களில் காரகக் கோளான குரு நிற்பதால் ஏற்படும் பலன்களும் தரப்பட்டுள்ளன. அது தவிர இலக்கினம் முதல் பனிரெண்டாம் பாவம் வரையிலான பாவகப் பலன்கள் தரப்பட்டுள்ளன.

1.8. பாவகப் பலன்கள்

1.8.1. இலக்கின பாவகப் பலன்கள்

உடலமைப்பு, உறுப்புகள், சந்தோஷம், வருத்தம், முதுமை, உண்மையறிதல், அறிவு, பிறந்த இடம், பிரபலம், புகழ், கண்ணியம், கனவுகள், பலம், பெருந்தன்மை, அரசியல் வாழ்க்கை, ஆயுள், சாந்தம், வயது, தலைமுடி, தோற்றம், சுயமரியாதை, ஜீவனம், அடுத்தவருக்காகச் சூதாடுதல், நிந்தை, இழுக்கு, கௌரவிக்கப்படுதல், தோல், தூக்கம், பாண்டித்தியம், செல்வம், அவமதிப்பு, பழிவாங்கும் போக்கு, வியாதியிலிருந்து விடுதலை, கைவிடும் தன்மை, செயலாற்றும் திறமை, கால்நடைகளைக் காப்பாற்றும் முயற்சி.[24]

இயல்பான உயரம், நிறம், அமைப்பு, வடிவம், உடல் ஆரோக்கியம், கற்பனைத்திறன், வீரம், ஒழுக்கம், குணம், ஆண்மை, கௌரவம், நன்மை, தீமைகள், ஆயுள், கல்வி, நெடுந்தூரப் பயணம், சூதாட்டம், தலையும் முகத்தில் மேல் பாகமும், எடுத்த செயலில் வெற்றி - தோல்வி, வாழ்க்கையில் போராட்டம், நாட்டு மக்களைக் கேள்வி கேட்பவர்.[25]

1.8.2. இரண்டாம் பாவகப் பலன்கள்

வாக்கு, செல்வம், மதநூல்களில் நம்பிக்கை, மற்றவர்களைப் பேணுதல், சௌகர்யங்களை அனுபவித்தல், உண்மையும் பொய்யும், கண்கள், கட்டுப்படுத்துதல், குடும்பம், வியாபாரம். மிருதுவான பேச்சு, தர்மசிந்தை, பெருந்தன்மை, பரோபகாரம், நண்பர்கள், சிறந்த சொல்வன்மை, கற்றல், பணிவு, திட சிந்தை, செல்வாக்கான வாழ்க்கை, செல்வம் சேர்க்கும் முயற்சி, கருமித்தனம்.[26]

அதிர்ஷ்டம், ஒருவருடைய சக்தி, துணை, சொந்தக் கருத்துக்களை விளக்கும் தன்மை, பார்வை, வலது கண், ஞாபகசக்தி அதிகரித்தல், கற்பனை, வாக்குத்திறமை, மெய் அல்லது பொய், பண அலுவல்கள், ஊதியம், இலாபம் அல்லது நஷ்டம், பத்திரங்கள், ஊதாரித்தன்மை, தனம் வரும் வழி.[27]

1.8.3. மூன்றாம் பாவகப் பலன்கள்

தைரியம், சகோதரர்கள், யுத்தம், சாலை, நிலம், சித்தப்பிரமை, தகுதி, கவலைகளை ஏற்படுத்துதல், படைவீரன், பராக்கிரமம், நண்பர்கள், அலைச்சல், சக்தி, பிதுரார்ஜிதச் சொத்தில் பிரிவினை, ஆபரணங்கள், நற்பண்புகள். கல்வி, பொழுதுபோக்கு, பலம், இலாபம், பாரம்பரியம், நன்னடத்தை, பணியாட்கள், சிறிய வாகனங்கள், குறுகிய பிரயாணம், தேசாந்திர யாத்திரை, பெரும் ஒப்பந்தம் முதலியன.[28]

ஞாபக சக்தி, மனபலம், கல்விப்பயிற்சிக்கு ஏற்ற மனச்சார்பு, வீரம், உறுதிப்பாடு, வதந்தி, கோள் சொல்லுதல், கையொப்பம், சக்தியைக் குறைத்தல், எதிர்பாராத தொடர்பு, மிதிவண்டி, போக்குவரத்து, கணிதம், செய்திப் போக்குவரத்து, தபால் நிலையங்கள், தந்தி, அச்சுத் தந்தி, தொலைக்காட்சி, செய்திக் போக்குவரத்து, வானொலி செய்திகள், அடையாளங்கள், நடுவர், தூதுவர், இதி ஆசிரியர், நூலகம், நூல் சேகரிப்பு, வியாபாரம், வீடு விற்பனை, தொலைபேசி போன்றவை மூன்றாம் பாவம் மூலம் அறியலாம். *29*

1.8.4. நான்காம் பாவகப் பலன்கள்

கல்வி, அரசாங்கப்பணி, பிரயாணம், மனிதனால் இயக்கப்படும் வாகனம், தாயார், உறவினர், நண்பர்கள், கிணறு, பானம், பால், வாசனைத் திரவியங்கள், மகிழச்சியான வாழ்க்கை, நற்பெயர், மருத்துவத்தில் அற்புத சக்தி, நம்பிக்கை, தவறான குற்றச்சாட்டு, வெற்றி, விவசாயம், நிலம், தோட்டம், மகிழ்ச்சி தரும் ஏற்பாடுகள், திடமான அறிவு, சொந்தமான புதிய வீட்டில் குடிபுகுதல், நடத்தை, வேதங்களையும். சாஸ்த்திரங்களையும் விருத்தி செய்தல்.[30]

கல்லறை, தனிப்பட்டோரின் காரியங்கள், அந்தரங்க வாழ்க்கை, ஞாபகச் சின்னங்கள், கல்விப் பயிற்சி, ஒருவருடைய வீடு, அபூர்வப் பொருட்கள், வாகனங்கள், நிலம், தானிய வயல், பண்ணைகள், பழத்தோட்டங்கள், சுரங்கங்கள், புராதனப் பொருட்களும் பரம்பரை சொத்துக்களும், பள்ளி, கல்லூரி.[31]

1.8.5. ஐந்தாம் பாவகப் பலன்கள்

குழந்தைகள், தந்தையின் புண்ணிய காரியங்கள், அரசன், மந்திரி, நன்னடத்தை, சிற்ப வேலை, புத்தி, கல்வி, விவேகம், நற்பத்திரங்கள், ஆடைகள், மந்திரப் பிரயோகம், பிதுரார்ஜித சொத்து, ஞான திருஷ்டி, மனைவி வழி சொத்து, ஆழ்ந்த ஞானம், உறுதியான சிந்தை, ரகசியம், நன்னடத்தை, நற்செய்தி, ஆரோக்கியம், நட்புறவு, காவியங்களையும், பிரபந்தங்களையும் தொகுத்தல், நற்பணிகளில் பிரயத்தனம், மந்திரம், உபாசனை, தயை தாட்சண்யம், உணவைப் பகிர்ந்தளித்தல், பாப புண்ணியம் பார்த்தல், ஜபங்களையும் மந்தரங்களையும் பிரயோகித்தல், பாண்டித்தியம், ஆழ்ந்த சிந்தனை, பணஒம் சம்பாதிக்கும் வழிகள், இலக்கியத்தில் புலமை, பாரம்பரியமான மந்திரிப் பதவி முதலியன.[32]

காதல் விஷயங்கள், நல்லொழுக்கம், உல்லாசம். சுவையும், அலங்காலம், இயந்திரக் கலைகள், விவேகம், பாவபுண்ணியம் பகுத்தறிதல், வேதபாராயணம். சமயத்தைப்பற்றிய சிந்தனை, ஆழ்ந்த படிப்பும், அறிவும், உல்லாச சம்பவம், மந்திர உச்சாடனம், வைதீக பழக்கங்கள், உடலில் உள்ள அணுக்கள், நோயிலிரந்து விடுபடல்.[33] எனவும் ‘‘ஒருவருடைய சந்ததி, குழந்தை, சித்திர மேதாவித்தனம், பொழுதுபோக்கு, கொண்டாட்டம், வினோத விளையாட்டு, விசத்திர கலை, ஆட்டம், சினிமா, நாடகம், சங்கீதம், நடனம். விருந்து விழாக்கள், சூதாட்டம், அளவு கடந்த செல்வம், குதிரைப் பந்தயம், பங்குகள். உழைப்பில்லாத வருமானம், லாட்டரி, பண்டமாற்று போன்றவை ஐந்தாம் பாவம் மூலம் அறியலாம்.[34]

1.8.6. ஆறாம் பாவகப் பலன்கள்

வியாதி, தடை, யுத்தம், தாய்மாமன், கபம், கட்டி, கொடூரச் செயல், பைத்தியம், பெரியம்மை, பகை, எதிரி, கஞ்சத்தனம், மர்ம உறுப்பில் கட்டி, கடும் சுவாசம், கடன்கள், அவதூறு, ஷயரோகம், குணப்படுத்தக்கூடிய தேகக் கட்டு, காயம், மனக்கவலை, வேதனை, பலராலும் வெறுக்கப்படுதல், கண் நோய், பிச்சை பெறுதல், அகால போஜனம், எதிரிகளால் நட்டம், அழிவு அல்லது கீழே விழுதல், சோர்வடைந்த நிலை, வயிற்றுப்புண், விலங்கிடுதல், சுயமரியாதையைக் காப்பாற்றுதல், சிறுநீரகக் கோளாறு, சீதபேதி, அறுசுவை, திருடர்களாலும், பணியாட்களாலும் துன்பமடைதல், சிறைத்தண்டனை.[35]

வியாதியின் வீடு, நோய், பராமரிப்பு, உணவு, பகைமை, உடைகள், ஆரோக்கிய சாத்திரம், நேரம் தப்பிய சாப்பாடு, சேவை, முடிவு, தொழிலாளர்கள், வேலையாட்கள், வாடகை வீடு, சுகாதார மூலிகைகள், போட்டி பந்தயத்தில் சாதகமான நிலைகள், எதைத் தொட்டாலும் தடை, சித்த பேதம், லோபத்தனம், களவு, ஆபத்து, சிறைச்சாலை, கைத்தொழில் போன்றவற்றை ஆறாம் பாவம் மூலம் அறியலாம்.[36]

1.8.7. ஏழாம் பாவகப் பலன்கள்

திருமணம், காதலில் வெற்றியடைதல், இசை, மலர்கள், நினைவிழத்தல், கணவன், மனைவியின் கற்புநிலை, இரு மனைவிகள், மர்ம உறுப்பு, வாணிபம் அல்லது வியாபாரம், பால், நெய் மற்றும் தானியங்களால் தயாரிக்கப்பட்ட உணவு, தான தருமங்கள், பராக்கிரமம், பகைவர்களின் அழிவு, வெற்றி, வாக்குவாதம், உடல் உறவு, தத்து புத்திரன், சொந்த இடம், வெளிநாடு அல்லது தூரமான இடம், ரகசியமான பாலுறவு, திருட்டு முதலியன.[37]

ஒற்றுமையான வீடு, கேள்வி கேட்பவர், சட்டமுறையான கட்டுப்பாடு, அருவர் சண்டை, நீண்ட ஆயுளுக்கு அபாயம், எதிரியிடமிருந்து நன்மை, தீமைகள், சுக பரிமாற்றங்கள், கௌரவமும், மதிப்பம் பெறுதல், கொடுக்கல், வாங்கல் செய்பவர், வழக்கு, அபராதங்கள், திருமணம், விவாகம், விவாகப் பிரிவினை, குத்தகை, பிற நாடுகளில் செல்வாக்கு,

இழந்த பொருளை மீட்பு, யுத்தம், வெளி நாட்டு விவகாரங்கள், சர்வதேச வர்த்தகம் போன்றவை.*38*

1.8.8. எட்டாம் பாவகப் பலன்கள்

ஆயுள், சந்தோசம், தோல்வி, ஒருவருடைய மரணத்தால் கிடைக்கும் ஆயுள் காப்பீட்டுப் பணம், தூரத்து உறவினரின் மரணம், மரணத்தால் ஏற்படும் துக்கம், இடைவிடாத தொந்தரவால் வருத்தம், சகோதரன், பகைவன், கணவன் அல்லது மனைவியால் உண்டாகும் துன்பங்கள், துக்கம், சோம்பேறித்தனம், அரசாங்கத் தண்டனையைப் பற்றிய பயம், நஷ்டம், கடன்கள், அடுத்தவரின் அறியமையைப் பயன்படுத்திப் பணம் பெறுதல், நீடித்த சொத்து, துட்டனின் வருகை, பாவம், கொலை செய்தல், உடல் உறுப்பை இழத்தல், மிகுந்த தண்டனை, மிகுந்த மனத்துயரம், மன அமைதியைக் குலைக்கும் கதைகள், தொடர்ந்த வருத்தம், கொடிய செயல்களைச் செய்யும் முயற்சி, சண்டை, கடும் வேதனை.*39*

ஆயுள் நீடிப்பு, மரணத்தின் வீடு, உரிமை, கடைசிக்கால இச்சா பார்த்திரம், இன்ஸ்யூரன்ஸ், மறு பிறப்பின்மை, இயற்சை அல்லது செயற்கை மரணம், நீரில் மூழ்கிவிடல், தற்கொலை, துரதிர்ஷ்டம், துக்கமும், தளர்ச்சியும், ஆபத்து, அறுவை வைத்தியம், கடுமையான விபத்து, நோய் அதிகரிப்பு, பயணத்தில் கஷ்டம், எதிரிகளால் துன்புறுதல், கற்பழிப்பு, உறுப்புகள் சேதம் அல்லது பழுதடைதல்.*40*

1.8.9. ஒன்பதாம் பாவகப் பலன்கள்

தருமம், புண்ணிய காரியம், தவம், குரு மற்றும் பெரியோர்களுக்கு மரியாதை செய்தல், மனத்தெளிவு, கற்பதற்கான அயராத முயற்சி, பிரயாணம், அதிர்ஷ்டம், விவேகம், வீரம், நற்கதைகளைக் கேட்பதும் பரப்புவதும், பயணங்கள், புனித ஸ்நானம், புண்ணிய காரியங்களில் தொடர்பு கொள்ளல், நன்மைகள், அட்ட ஐஸ்வர்யங்கள், பரம ஞானம், வேதச்சடங்குகள், தியாகம், பணப்புழக்கம்.*41*

நம்பிக்கை, விவேகம், தெய்வ வழிபாடு, தத்துவ ஞானம். சமயச்சார்பு, பக்தி, வைதீக சாத்திர வல்லுநர். தியானம், ஆராய்ச்சி,

புதியன கண்டுபிடித்தல், சட்டரீதியான நடுநிலைமை, நீண்ட பயணங்கள், கடல் பிரயாணம், வான்வழி பிரயாணம், ஆன்மீக மதிப்புள்ள நூல்கள் வெளியிடுதல், அதிர்ஷ்டம், யாத்திரை, சட்டம், தர்ம போதனை, கோவில்கள், கிறித்துவ தேவாலயங்கள், மசூதிகள், தருமம், கப்பல் தொழில், சட்டத்துறைகள், சமய சம்பந்தமானச் செயல்கள், விஞ்ஞானம், பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டு உள்நாட்டுப் போக்குவரத்து, வானொலி, கடல் தந்தி, கம்பியில்லாத் தந்தி.[42]

1.8.10. பத்தாம் பாவகப் பலன்கள்

வியாபாரம், வாணிபம், இராஜசன்மானம், அரசாங்க உத்தியோகம், சேவை, குதிரைச்சவாரி, குத்துச்சண்டை, விவசாயம், வைத்தியம், கீர்த்தி புகழ், செல்வம் சேமிப்பு. மறைத்து வைக்கப்பட்டப் புதையல். தியாகம். உயர்ந்த அந்தஸ்து, குரு, ஆசிரியர்கள், புண்ணியத்தின் அளவு, மருந்து, மந்திர சித்தி, சுய மரியாதை, கௌரவித்தல், புகழ், போதனை செய்யும் திறமை, அதிகாரப் பதவி, செல்வாக்கு, சுயக்கட்டுப்பாடு, அதிகார தோரணை.[43]

செல்வந்தன், மரியாதை, பெருந்தன்மை, பொது மதிப்பு, பெயர், புகழ், அதிகாரம், கௌரவம், நம்பிக்கை, ஒழுக்கம், சித்தி, மதிப்பு, குலம், கீர்த்தி, மரியாதை, மதிப்பு, படிப்பு, பேராசை, அதிகாரம், இல்லற நடவடிக்கை, முதலாளி, நீதிபதி, அரசாங்கம், புண்ணிய இடங்களுக்கு யாத்திரை, உலகத்திலிருந்து விடுபடல், அரசனிடமிருந்து கௌரவம், வேளாண்மை, மருத்துவர், முதல் தொழில், மந்திரக் கவசம், மருந்து, கல்வி பயிலுதல், தேசத்தலைவர், மழை, கொடை, அபிவிருத்தி, புதையல் அமைத்தல். நூல்நெறி.[44]

1.8.11. பதினோராம் பாவகப் பலன்கள்

பல வழிகளில் கிடைக்கும் இலாபம், சகலவிதமான வருமானம், அடுத்தவர்களுக்காகப் பணி செய்தல், தெய்வீக ஆராதனை, சாத்வீகத் தெய்வ வழிபாடு, கல்வி, பொன், பொருள் சேர்க்கும் திறமை, மூதாதையர் சொத்து, சிறப்பான நிலை, ஆபரணங்கள் மற்றும் நவரத்தினங்கள் மீதான ஆர்வம், செல்வம், செல்வஇழப்பு, பாண்டித்யம், மந்திரிப்பதவி, இலாபம், அதிர்ஷ்டம், விரும்பிய குறிக்கோளை அடைதல்,

எளிதான முறையில் வரும் வரவுகள், ஆசைகள், கலைகளில் திறமை ஆகியவை. *45*

தோழர்களின் வீடு, சபை, சமுதாயம். பிரியப்பட்டவை, பார்வையாளர்கள், ஆலோசகர்கள், ஆதரவாளர்கள், நன்மை விரும்பிகள், நம்பிக்கை, ஆசைகள், மன ஊக்கம், எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றி, மகிழ்ச்சி, அபிவிருத்தி, இலாபம், எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம், நட்பின் இணைப்பு நிரந்தரமடைதல், புனர் நிர்மாணிப்பு, நோய் குணமடைதல், சுகம், நம்பிக்கை. உறுதிப்பாடு, இடது காது, வலது பாதம், இடது கை, இருகால்கள், முன்னேற்றம்". *46* எனவும், "செல்வம், ஒருவரின் செல்வாக்கு, அதிர்ஷ்டம், பிரதிநிதித் தேர்வு, வழக்கு, சமுதாயம், வாணிபம், எழத்துக்கள், ஆதாயம், சம்பத்து வரவு, முதலும் வட்டியும், எளிதில் இலாபமடைதல், மகிழ்ச்சியான செய்தி, அதிர்ஷ்டத்தின் விளைவு, மக்கள் சபை, மாநகராட்சி, மாநகர சபை, மாவட்ட சபைகள், பஞ்சாயத்துகள், அரசாங்க கொள்கைகள், திட்டமிடல், நாடுகளின் நட்புறவு, நன்மை, பரிமாற்றம், கம்பெனிகள், களஞ்சியங்கள், சங்கங்கள், சபைகள், வெற்றிபெறும் எண், மருத்துவமனையிலிருந்து விடுபடல் போன்றவை. *47*

1.8.12. பனிரெண்டாம் பாவகப் பலன்கள்

தூக்கம் கெடுதல், மனவருத்தம், எதிரிகளால் உண்டாகும் பயம், சிறைவாசம், துன்பங்களிலிருந்து விடுதலை, கடன் நிவர்த்தி, மூதாதையரின் சொத்து, எதிரி, இடது கண், பொதுமக்களால் வெறுக்கப்படுதல், உடல்ஊனம், கட்டுப்பாடற்ற பாலுறவு வாழ்க்கை, திருமணத்தடை, அதிகார இழப்பு, துர்ப்பாக்கியமான நிலை, தந்தை மற்றும் சகோதரர்களின் சந்தோஷ வாழ்க்கைக்கு இடையூறு செய்தல், சண்டை சச்சரவு, கோபம், உடல் வியாதி, மரணம், இடமாற்றம், பலவகைச் செலவுகள், மனைவி அல்லது கணவரின் மரணம்.*48*

நட்டம், தடையும், அடக்குதலும், கட்டுப்படுத்துதலும், கூடுதல் செலவும், கிரயத்துக்கு வாங்குதல், முதலீடு செய்தல், நன்கொடைகள், தருமம், கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிதல், தூர இடத்துக்கு போய்விடுதல், பிரித்து வைத்தல், பீடையும், தீய அதிர்ஷ்டமும்,

சிறையிலிருத்தல், இரகசிய உழைப்பு, இரகசிய நடவடிக்கை, பயம், மௌனமாக துன்பப்படுதல், ஆழ்ந்த தூக்கம் அல்லது தூங்காமை, கால்கள், இடதுகண், பகைவரிடமிருந்து பயம், உடல் உறுப்பை வெட்டுதல், உடம்பில் காயம், எதிர்பாராத துன்பங்கள், கீழ்படியாமை, இரகசிய சூழ்ச்சிகளும். திட்டங்களும். பொறாமையும், குரோதமும், இடைநிலை, தற்கொலை அல்லது வஞ்சித்துக் கொல்லுதல், ஊரைவிட்டுத் துரத்துதல், தூரதேசத்தில் வாழ்க்கை.[49]

வீணாக்குதலும். இராஜதுரோகமும், பரோபகாரத்துக்குரிய சங்கங்களுடன் கூட்டு, பிற நாட்டுக் குற்றவாளிகளை பிடித்துக் கொடுத்தல், கீழ்த்தரத்தாருடன் கலப்பு, அந்தரங்கம், ஒருவருடைய இரண்டாவது தொழில், மருத்துவ ஆய்வு, துப்பறியும் வேலை, குரூரத் திட்டம், இரகசிய விவகாரங்கள். இரசாயன முறைகளைக் கண்டுபிடித்தல், விலங்குகளால் ஆபத்து, இழிவு, தீயவர் திரும்பி வருதல், மறைக்கப்பட்ட வீடு, வேலை நியமனம், படுக்கை வசதி, எதிர்பாராத கோரிக்கைகள், பணநெருக்கடி, மித மிஞ்சிய செலவுகள். சூறையாடல், கொள்ளையடித்தல், கற்பழித்தல், விஷமிடல், கள்ளக்கடத்தல், அச்சுறுத்திக் களவாடல், ஏமாற்றுச் செய்கை, தேசக்கலகம், இராஜத் துரோகம்.[50]

1.9. பன்னிரு பாவங்களில் குரு நின்ற பலன்கள்

1.9.1. இலக்கினத்தில் குரு நின்ற பலன்

தீர்க்கமான ஆயுள்பலமும், நோயற்ற சுகவாழ்க்கை, திடகார்த்தமான சரீரம்,கல்வியல் கேள்விகளில் வல்லமை பெற்றிருப்பர். குண்டான உடல்வாகு வாயு சரீரம் நல்லநடத்தை புகழ்பெறுவார். தைரியசாலி பலவகை சாஸ்திரங்களை அறிந்தவர். தனவானாக இருப்பார். 5 வயதிலும் 16 வயதிலும் செல்வச்சேர்க்கையும், திடீர்யோகங்களும் உண்டாகும்.[51] அழகியசரீரம், வசீகரம் உடையவர். நல்ல குணநலன்களும், சாந்தமான சுபாபமும் உடையவர் பொருள்வசதி ஏற்படும். அலங்காரப்பிரியர் களத்திர, புத்திரசுகம் உடையவர், மதிநுட்பம் உடையவர் சுகவாழ்வை நடத்துவார். எதற்கும் அஞ்சாமல் துணிச்சலாக

செயல்படுவார். குருவின் பார்வை 5, 7, 9ஆம் இடத்தைப் பார்வை செய்வதால் நல்லமனைவி, நல்லகுழந்தை, புகழ்பெற்ற தகப்பனார், பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். நல்ல அதிர்ஷ்டம் உடையவர் உண்மையைப் பேசுவார். அவர்களுக்கு சமுதாயத்தில் தனி அந்தஸ்து கிடைக்கும்.

1.9.2. இரண்டில் குரு நின்ற பலன்

பொருளாதார முன்னேற்றம் வெகுவளமாக நிலையாக ஏற்படும். 16, 27, 39 வயதில் செல்வசேர்க்கையும் செல்வாக்கும் ஏற்படும். தாரளமாக பணவசதிபெறுவர், சரளமாக பேசவல்லவர். சொல்வன்மையும், வாக்குபலிதமும் உண்டுபரந்த மனப்பான்மையும், தயாளகுணமும் உடையவர். பணத்தின் அருமை உணர்ந்தவர்.[52] எனவே பணத்தை யோசித்துசெலவு செய்வார். ‘‘ஆற்றில்போட்டாலும் அளந்து போடுவார். பாத்திரம் அறிந்து பிச்சையிடுவார்’’. சிக்கனவாதி, சுகவாழ்வு உடையவர். நல்லகுடும்பம், உறவினர்கள் அமைவார்கள். பல சாஸ்திரஞானம் பெறுவார். நல்லகல்வியும், கல்வி, கேள்விகளில் முதன்மையும் பெறுவார். செல்வாக்கு உடையவர். சமயோகிதவாக்கு சாதுர்யம் உடையவர். அரசாங்க வெகுமதி ஆதரவு நன்கு ஏற்படும். குடும்பத்தில் அதிக செல்வம், நகை, பணம்சேமிப்பு ஏற்படும். விருந்து உபச்சாரம் செய்து உறவினர்களையும் நண்பர்களையும் மகிழ்விப்பார். வசிகரமானமுகம் நல்லபேச்சாளர், நல்ல உணவுகளை இரசித்து உண்பவர்.

1.9.3. மூன்றில் குரு நின்ற பலன்

தீர்க்கயாத்திரை, புனிதஸ்தலங்களுக்கு அடிக்கடி செல்வார். உறவினர்களுக்கும் பாட்டனார், பாட்டி வாரிசுக்கும் யோகம் கெடும். சிக்கனமிக்கவர். எக்கணமும் சிக்கனமாக இருப்பார். கெட்டநண்பர்கள் சகவாசம் ஏற்படும். கெட்டசிந்தனை, கெட்டசெயல்களைச் செய்வார். மனதில் உள்ளதையாரும் அறிந்து கொள்ள முடியாது. பணப்பற்றாக்குறை, பணமுடக்கம், பண இழப்பு அடிக்கடி ஏற்படும்.[53] 38ஆவது வயதில் ஸ்தலயாத்திரையும் ஏற்படும். நினைத்ததை சாதிக்க வல்லவர், மனைவிசொல்படி நடக்கத்தக்கவர், எதையும் எளிதில் கிரகிக்க வல்லவர் சகோதர கடமைகளை நன்கு ஆற்றுவார். சகோதரர் அதிகம்

உள்ளவர் காது, மூக்கு, தொண்டை, புஜங்கள் புஷ்டியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். விளையாட்டில் சாதனை புரிவார். எழுத்துவளமுண்டு, பொது வாழ்வில் ஈடுபாடு உண்டு. பூர்விக சொத்துக்கள் இவரின் இளம்வயதில் சேதமடையும். அடிக்கடி இடமாற்றம் உள்ளவர். நல்ல உத்தியோகம் கிடைக்கும். கிணற்றில் நீர்ஊற்று உண்டு. வஞ்சக எண்ணமுடையவர், பாவக்காரியங்களில் ஈடுபடுபவர் இவரது சகோதரர் புகழ் உள்ளவர்.

1.9.4. நான்கில் குரு நின்ற பலன்

வாகனயோகம் உள்ளவர், வீடு, மனை, சொத்துக்கள் சேரும். தாயார் நீண்டஆயுளுடன் இருப்பார்கள். உறவினர்கள், நண்பர்களுக்கு அதிக உதவி செய்து மன நிறைவு பெறுவார். மேற்படிப்பு ஆராய்ச்சிப்படிப்பு உண்டு. அதிக அளவில் செல்வம் சேர்ப்பார். பணியாட்கள் அடக்கமாக இருப்பார்கள். விவசாயப்பிரியர், தோட்டம், கிணறு வகைகள் உண்டு.[54] உயர்ந்த தொழில் செய்வார். லேவாதேவித் தொழில், நகை சம்பந்தமான தொழில், வங்கித்தொழில் செய்வார். வங்கிகள் இவருக்கு ஆதரவானது. வசதியான இடத்தில் சுகதாரமான சூழ்நிலையில் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்வார். அதிகமான கால்நடை, வாகனங்கள் உடையவர். நீண்டகாலம் அன்னையின் ஆதரவைப் பெறுவார். பணப் புழக்கமுள்ள இடத்தில் பணிபுரிவார். 12ஆம் வயதில் உறவினர்களால் செல்வம் சேரும். மனைவி, மக்களுடன் மகிழ்ச்சியாக வாழ்வார். நல்ல நண்பர்கள் நல்ல விசுவாசமான வேலையாட்கள் அமைவார்கள். பெரியவீடு, வாகனம் உண்டு. எல்லாவித சுகத்தையும் பெறுவார்.

1.9.5. ஐந்தில் குரு நின்ற பலன்

தெய்வஅருள் பெற்றவர், சிறந்தஜோதிடர், ஆலோசனை சொல்லும் அறிவாளி, பரந்த மனப்பான்மை உடைய உயர்ந்தமனிதர், மனிதருள் இவர் மாணிக்கம், பரோபகாரி, தர்மசிந்தை உடைய கொடையாளி, அனுபவ அறிவுபெற்ற அறிஞர், தெளிந்தமனம், தீர்க்கசிந்தனை, எதிர்காலத்தைத் துள்ளியமாக உணரும் இறையருள் பெற்றவர். சமூகத்தில் அனைத்து வகையினராலும் போற்றிப் பாராட்டப்படுபவர். உயர்ந்தமனிதர்கள்,

அரசியல்வாதிகள், பெரியோர்கள், அறிஞர்களால் போற்றப்படுவார்.[55] மதப்பற்றுமிக்கவர், மதபோதகர், தெய்வ நம்பிக்கையுடன் மனசாட்சியுடன் செயல்படுவார். சிறந்த நீதிபதி, திடீர் தனம் சேரும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி பெறுவர். ஏதாவது சிறியகுறை இருக்கும். அன்பு, குருபக்தி, நல்லதிட்டங்கள், ஆலோசனை, நீதிநெறி உணர்வு உள்ளவர். வாக்குப் பலிதம் உண்டு. மௌனமாக பலசாதனை புரிவார். எழுத்துவன்மை உடையவர். பூர்விகச்சொத்து கிடைக்கும். அழியாப்புகழ் வாய்ந்தவறாக இருப்பார். நற்பணிகள் பலபுரிந்து நற்பெயர் பெறுவார். அரசியலில் ஈடுபட்டு மக்களுக்கு பல நன்மைகள் செய்து புகழ் பெறுவார். அரசு கௌரவப்பதவிகள் நாடிவரும். தெய்வத்திற்கு நிகராகப் போற்றப்படுவார்கள். இவர் ஆன்மீக குரு, ஆன்மீக யோசனைகள் சொல்லி மக்களை நல்வழிப்படுத்துவார்.

1.9.6. ஆறில் குரு நின்ற பலன்

இவருக்கு நேரடி விரோதிகள் இல்லை. எதிரிகளை எளிதில் முறியடிக்க வல்லவர். 40ஆம் வயதில் எதிரிகளால் பிரச்சனை உண்டு. அந்தப் பிரச்சனையை எளிதில் முறியடிப்பார். வழக்கு விவகாரங்களில் பூரணவெற்றியும் இலாபமும் ஏற்படும். நினைத்தவைகளை சாதிக்கவல்லவர். வேலையாட்கள் நல்லவர்களாக அமைவார்கள். தாயாதிகள் நல்ல மேன்மை பெறுவார்கள்.[56] தாய்வழி உறவினர்களுக்கு நோய்கள், நலிவு இருக்கும். நகைச்சுவை ஈடுபாடு அதிகம் இருக்கும். சிற்றின்பப்பிரியர். பெண்களிடம் வலியச்சென்று பழகுவார்கள். பலபெண்கள் தொடர்பு உண்டு. பலவீன தேகம் அல்லது மெலிந்ததேகம் உடையவர். வாயுத்தொல்லை, வயிற்றுக்கோளாறுகள். மூளைக்கோளாறுகள், மூச்சுக்கோளாறுகள், மூலநோய், தோல்சம்பந்தமான நோய்கள், கட்டி, தழும்புகள், கை, கால்பிடிப்புகள், மலச்சிக்கல், கொழுப்பு அதிகமாதல், சர்க்கரைநோய், தைராய்டு மூலம் உடல்அதிகமாகபெருத்தல், கேன்சர் போன்ற நோய்கள் ஏற்படலாம். சோம்பேறி, அவமரியாதை அடைபவர். மாயமந்திரம் பேய் ஓட்டுவதில் தேர்ந்தவர், அடிக்கடி குழந்தைகளால் கவலை ஏற்படும். பிறர் காரியங்களில் ஈடுபட்டு பிரச்சினைகளைச் சந்திப்பார்கள்.

1.9.7. ஏழில் குரு நின்ற பலன்

நீண்ட ஆயுள் உடையவார், திடீர் பணவரவுகள் அதிர்ஷ்டம் ஏற்படும். தன்மீது அதிகமதிப்பும், பக்தியும், பாசமும், நேசமும் உடைய மனைவி அமைவார். இல்லற வாழ்வு இனிமையாக இருக்கும். விரும்பிய கணவன் அல்லது மனைவியை அடைவார். குலப்பெருமையும், ஆச்சாரமும், உயர்ஞானமும், கல்வித்திறமையும் கடமையுணர்வும் உள்ள மனைவி அமைவார். 27, 34 வயதுகளில் பிரபல யோகங்கள் ஏற்படும். புத்திநுட்பமும், அழகும் உடையவராக இருப்பார். தனவந்தர், கல்வி, கேள்விகளிலும், வித்தைகளிலும் நல்ல தேர்ச்சி பெறுவார். அதிக லாபம் கிடைக்கும் தொழில் ஈடுபாடு உடையவர்.[57] தீவிரதிட்டங்கள், உயர்ந்தநோக்கங்கள் இலட்சியங்கள் உடையவர். தந்தை குரு முதலியவர்களை மதிப்பார். மனைவி மூலம் இலாபங்கள் ஏற்படும். மனைவியிடம் கட்டுப்பட்டிருப்பார். நல்ல குழந்தைகள் உண்டு. எல்லோராலும் விரும்பப்படுவார். தன் தந்தையைவிட தாராளகுணம் உடையவர். வாகன சுகம் உண்டு. மதிப்புமிக்க காரியங்களைச் செய்வார். நல்ல நண்பர்களின் **துணை** உண்டு. பெருந்தன்மையும் நல்ல சிந்தனையும் உள்ள அழகான படித்த மனைவி அமைவார். இல்லறத்தை நல்லறமாக நடத்துவார். இனியவர் எனப்பெயர் பெறுவார். இயன்றதை செய்வார். ஈகைகுணம் உடையவர்.

1.9.8. எட்டில் குரு நின்ற பலன்

நீண்ட ஆயுள் உண்டு திடீர் விபத்துக்கள், திடீர்தனலாபம்,திடீர் அதிஷ்டம் உண்டு. 17ஆம் வயதில் கெட்ட பெண்தொடர்பு ஏற்படலாம். 31ஆம் வயதில் பிணி, விபத்து ஏற்படும். இடமாற்றம் அடிக்கடி ஏற்படும். நிலையான தொழில் இல்லாமையால் அடிக்கடி தொழில்மாற்றம் ஏற்படும். சாஸ்திரங்களை அறிவார். பெரிய குடும்பமாக அமையும். விரதங்களை கடைப்பிடிப்பவர். தீர்க்கதரிசனம், நல்லஉபதேசங்கள் உடையவர். சந்ததி பற்றியும் கவலை, துக்கம் உள்ளவர். புகையிலைப் பழக்கம் இருக்கும். மனைவி மூலம் (அ) உயில் மூலம் தனவரவு உண்டு. மனைவியை பிரியவும் விவகாரத்து பெறவும் வாய்ப்பு உண்டு. பிறர்தனத்தை

அபகரிப்பார். தலைமைஸ்தானம் வகிப்பார். நீடித்தவருவாய் அற்றவர்.[58] வயிற்றுக்கோளாறு, நீரிழிவு, சர்க்கரை, இரத்தஅழுத்தம், காமாலை, மூச்சுதிணறல், வீக்கம், வாதநோய் போன்றவை அந்திமகாலத்தில் தொல்லைதரும். இதயத்துடிப்பு, இரத்தஅழுத்தம், மூளைக்கட்டி போன்றவை அவ்வப்போது தோன்றக்கூடியவை. ஏழை, இழிவான வேலை செய்து வயிறு வளப்பார். கருமி, நோய் உள்ளவர். குற்றம் சாட்டப்பட்டு சிறைத்தண்டனை அனுபவிக்கும் நிலையும் ஏற்படலாம். புத்திரர்களால் அடிக்கடி பிரச்சனை ஏற்படும்.

1.9.9. ஒன்பதில் குரு நின்ற பலன்

எல்லா வளமும் பெற்று சகல சௌக்கியத்துடன் வாழ்வார். ஸ்ரீலெட்சுமியின் பரிபூரணமான அருளைப்பெற்றவர். மக்கட்செல்வம் நிரம்பியவர். நற்காரியங்களில் நாட்டம் மிக்கவர். எதையும் கற்கும் ஆர்வம் உள்ளவர். சகோதரியின் ஆதரவு கிடைக்கும். இசைக்கு மயங்கும் இசைப்பிரியர். தகப்பனாருக்கு நீண்ட ஆயுள் உண்டு. தாயன்பு, தந்தையன்பை உடையவர்.[59] இவரின் 15வயது முதல் தந்தைக்கு பிரபலயோகமுண்டு. தந்தை நீண்ட ஆயுள் பெறுவார். தனது 35வயதில் பெறும் சாதனைகள் செய்வார். சக்திக்கும், தகுதிக்கும் மேலான சாதனைகளைச் செய்வார். பேறும் புகழும் உடையவர். எழுத்தாற்றல், பேச்சாற்றல் உடையவர். திறமைசாலி, எந்த ஒரு காரியத்தையும் வெற்றியடைச் செய்வார். புனிதயாத்திரை மேற்கொண்டு புண்ணியநீராடி புண்ணியனாவார். அதிக சந்ததிகள் உண்டு. புகழ் பெற்ற குழந்தைகளை பெற்று பெருமிதம் அடைவார். பதினாறு செல்வங்களையும், அஷ்டலெட்சுமியையும் பெற்று சகல சௌக்கியத்துடன் நிறைவான நீண்ட ஆயுள் பெறுவார். பெரியோரை மதிப்பார். சாதுக்களையும், சித்தர்களையும் வழிபாடு செய்வார். அறிஞர்களைப் பாராட்டுவார். ஞானிகளிடம் ஆசிர்வாதம் பெறுவார். மிகப்பெரிய அரசியல்வாதிகள் உயர்ந்த மனதர்களால் பாராட்டுப்பெறுவார். சாதுர்யம் சமயோசிதம் உண்டு. தவ வலிமை உடையவர். குலப்பெருமையை ஓங்கச்செய்து நிலைநாட்டுவர். பொதுமக்களுக்கு நல்லது செய்வார் தர்மகாரியங்களை செய்வார். திருப்பணியும், அறப்பணியும், ஆசிரியர்பணியும், ஆதரவற்றோருக்கு ஆதரவும்

நல்குவார். முதியோர்களை முதன்மைப்படுத்துவர். மூத்தோர் சொல் கேட்டு முறையான வாழ்க்கை வாழ்வார். நான்குவகை மக்களுக்கும் நல்லவர். நாலும் தெரிந்தவர். நற்குணம் உடையவர். மனிதரில் மாணிக்கம், மாசற்ற மனிதர், மங்களம் நிறைந்தவர். மணிமகுடம் சூட்டப்படுவார். பூர்விக தெய்வஅனுக்கிரகம் உண்டு. பூர்வீகசொத்துக்கள் கிடைக்கும். புதையல் கிடைக்கும், வெளிநாடு சென்று வெகு பணம் ஈட்டுவார்.

1.9.10. பத்தில் குரு நின்ற பலன்

நன்னடத்தை, நற்காரியங்கள் செய்து புகழ்ஈட்டுவார். மிகப்பெருஞ்செல்வம் சேர்ப்பர். அரசனுடன் நட்பு உடையவர். கண்ணியமும் சாந்தமும் உடையவர். தத்துவஞானம் பேசும் சமர்த்தர். பண பலமுடையவர், படைப்பலம் உடையவர், நவஇரத்தினங்களைப் பெற்றவர். இசைபாடலில் வல்லவர். வாகனவசதி, பெரிய அரண்மனை போன்ற வீடு, ஆள் அடிமை, சகல வசதிகளைப்பெற்று மிகவும் சுகபோக வாழ்க்கை வாழ்வார். எத்துறையிலும் அதிஷ்டசாலியாவர். அரசாங்கத்தில் பெரும்பதவி பட்டம் பெறுவார். அரசாங்கத்தையே நடத்தும் அதிகாரம் பெறுவார். பெரும்புகழ், பிரதானம் உண்டு. அரசாங்க வெகுமதி உண்டு.[60] வம்சவிருத்தி உண்டு, ஆண்மகன் அவசியம் பிறக்கும். சமூகத்தின் ஆதரவு உண்டு. செல்வவளம் பெற்று செல்வாக்குடன் திகழ்வார். மதிப்புடையவர், செய்யும் தொழிலே தெய்வம், தொழில்பக்தி, தொழில் மேன்மை உடையவர். நற்செயல் பலசெய்து புகழ் பெறுவார். அழகிய அதிஷ்டம் வாய்ந்த மனைவியும் நல்ல மக்களையும் பெறுவார். மனைவியால் பெரும் செல்வமுண்டு. நல்லகுணம் மிக்கவர், தர்மஸ்தானங்கள், அறநிலையத்துறையில் பணியாற்றுவார். ஆசிரியர் நகைவியாபாரமும், நவரத்தின வியாபாரமும் செய்வார். சிறந்த நீதிபதி, வங்கிகளில் உயர்ந்த பதவி வகிப்பார். காசாளர் போன்ற பதவிகளில் ஈடுபடுவர். பேராசிரியர், புகழ் பெற்ற வியாபாரி, தொழில் நேர்மை உடையவர்.

“10இல் குரு பதவியைக் கெடுக்கும் என்பார்கள்’’ பதவியில் சில சிரமங்களைக் கொடுத்து இவரை பக்குவப்படுத்தி உயர்ந்த மனிதராக்கும்.

முயற்சிசெய்து வெற்றி பெறுவார். மக்கள் ஆதரவு உடையவர். வருமுன் அறியும் தீர்க்க தரிசனம் உண்டாகும். மொழி, இனம், மதம் வளர்ச்சிக்கு பொதுத்தொண்டு ஆற்றுவார். மஞ்சள் நிற பொருள்கள், இனிப்புப் பொருள்களில் வருவாய் பெறுவார்

10ஆம் இடத்தில் சந்திரன் குரு இணைவு மிக நன்மையைத் தரும் யாகங்கள் செய்து உலகமக்களுக்கு நன்மை அடையச்செய்வார். தரும காரியங்கள் செய்வார். கல்வி நிலையங்கள், பல நன்மை செய்வார். ஆசிரியராகப் புகழ் பெறுவார். வருமுன் உரைப்பதில் சிறந்த ஜோதிடர், அறநிலையங்களை நிறுவி அற்புதம் செய்வார். அரசாங்கப்பதவி கிடைக்கும். அமைச்சர்களின் ஆதரவு கிடைக்கும்.

1.9.11. பதினோராம் இடத்தில் குரு நின்ற பலன்

செல்வந்தர், அச்சமற்றவர், அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் உண்டு. நீண்டஆயுள் உடையவர். வாகனவசதி உடையவர், பெருமளவில் செல்வ வளமும் சேமிப்பும் உடையவர். எதிலும் வெற்றி, நினைத்த காரியத்தைச் செவ்வானே செய்து வெற்றி பெறுவார். இயல், இசை, நாடகப்பிரியர். எதிலும் துணிவு, ஆற்றல், தைரியம், விடாமுயற்சி. கடினஉழைப்பே வெற்றியின் ரகசியம் என்பதை உணர்பவர். 32ஆம்வயதில் உயர்ந்த வாகன சேர்க்கை உடையவர். திடீர்தனயோகம், புதையல்யோகம் உடையவர். பசு, கன்று, கால்நடைவிருத்தி உண்டு. பால்பாக்கியம் உடையவர். பிறர் செல்வங்கள் வந்துசேரும். செல்வாக்கும், மதிநுட்பமும், சாதுர்யமும் உடையவர். மூத்தசகோதரர்களால் நன்மை உண்டு.[61] தர்மகுணம், பக்தி உடையவர். திறமையான வித்துவான். இவர் தந்தை சகலயோகங்களும் சிறப்பும் பெற்று விளங்குவார். 15ஆவது வயதில் பெருமளவு இலாபங்கள், திடீர்யோகம் ஏற்படும். புகையிலை, இலாகிரிவஸ்துக்கள், பொன், வெள்ளி, போன்றவற்றின் மூலம் பணவரவு உண்டு. சாஸ்திர ஆராய்ச்சி, புத்தகம் வெளியிடுதல் மூலம் புகழ் பெறுவார். தொழிலில் அதிக இலாபங்கள் உண்டாகும். தெய்வ அருள், குலதெய்வ அருளைப் பெறுவார். நினைத்ததை முடிப்பவர். பல அரிய காரியங்கள் செய்து புகழ் பெறுவார்.

1.9.12. பனிரெண்டாம் இடத்தில் குரு நின்ற பலன்

பிறரால் வெறுக்கப்படுவர், தீயசொல்லும், சுடுசொல்லும் பேசுபவர். சோம்பேறி, குழந்தையற்றவர். பாபக்காரியம் செய்பவர். சிக்கனவாதி, 25ஆம்வயதில் திடீர் விரயங்கள் உண்டு. சோம்பேறியாய் இருப்பார். உறக்கப்பிரியர், சுகவாசி, தேவையற்ற அதிக செலவு செய்வார். விருந்து உபசாரங்கள், தெய்வீக சுபகாரியங்களுக்குச் செலவு செய்வார். களத்திரசுகம் உடையவர். மோட்சம்பெறுவார். இலாகிரி, போதைப்பழக்கம் உடையவர். நற்பெயர் கிடைப்பது அரிது. சேமிப்புக் குறைவு அரசாங்கத்திற்கு வரிகட்டாமல் இரகசிய சேமிப்பு இருக்கும். கணித சாஸ்திரம் அறிந்தவர். புத்திரர் குறைவு, புத்திரர்களால் தொல்லை. தாமத திருமணம், பொருந்தாத திருமணம், உடல்நலமின்மை, அடிக்கடி ஏற்படும் மூளைக்கோளாறு, தோல்வியாதி, நரம்புத்தளர்ச்சி, வாயுகோளாறு, உடல் அதிகமாக பெருத்தல், கொழுப்புச்சத்து அதிகரித்தல், இரத்தஅழுத்தம் அதிகரித்தல், சக்கரைநோய் ஏற்படலாம். சுகபோகவாழ்வு நடத்துவார். உயர்குலப் பெண்கள் தொடர்பு ஏற்படும். அதிக கற்பனை, அதிகஆசை உடையவர். தூரதேசப்பயணம், ஸ்தலயாத்திரைகள் செல்வார்.[62] ஆன்மீக ஸ்தலயாத்திரை செல்வார், அலைச்சல் அதிகம் இருக்கும். 12இல் சந்திரன், குரு சேர்க்கை ஜாதகரின் வாழ்வில் மர்மம் இருப்பதாகச் ஜோதிடம் சொல்கிறது. வெளிநாட்டு பிரஜா உரிமைபெற்று வெளிநாட்டில் வாழும் தகுதி உடையவர். நல்ல காரியங்களுக்குப் போராட்டம், பொதுநல முன்னேற்றத்திற்காகச் சிறை சென்று தியாகி எனப்பெயர் பெறுவார்.

1.10. குருவின் காரகத்துவ குணங்கள்

ஞானம், நற்குணம், மகன்கள், நீதித்துறை, வட்டி, மந்திரி, ஒருவரின் ஒழுக்கமான நடத்தை, கற்பிக்கும் திறன், பெருந்தன்மை, வேதஅறிவு, சாஸ்திரங்கள், புராணங்கள் மற்றும் ஸ்மிருதிகளில் புலமை, அனைத்து வகைகளிலும் செழுமை, தேவர்களிடமும் அந்தணர்களிடமும் பக்தி, ஆசிர்வதிக்கப்பட்ட தன்மை, யாகம், தவம், ஆன்மீகநம்பிக்கை, பொக்கிஷ

அறை, மேதைத்தன்மை, புலனடக்கம், கணவனால் கிடைக்கும் மகிழ்ச்சி, கௌரவம், பாசம் முதலியன குருவால் அறியப்படுபவை.[63]

குரு பகவான் மஞ்சள் நிற வர்ணம் உடையவர். இவரது கண்களும், கேசமும், பழுப்பு நிறமுடையன. பருத்த உடலும், உயர்ந்த மார்பும், பெருத்த நடையும் கொண்டவர். கபத்தன்மையை குணமாக கொண்டவர். மிகவும் புத்திசாலி. சிங்கத்தின் கர்ஜனை போன்றதும், சங்கின் நாதம் போன்றதுமான குரலமைப்பு உடையவர். எப்போதும் செல்வச் செழிப்பை அருள்பவர். கல்வி தொடர்பான விஷயங்களில் மொழிபெயர்த்தலில் இவர் மேன்மை உமையவராகத் திகழ்வார்.

மனித உடலில் உள்ள கொழுப்பு இவரால் ஆளப்படுகிறது. பொக்கிஷம், அஸ்வத் என்று சொல்லப்படும் அரசமரம், அந்தணர்கள் வசிப்பிடங்கள், தெய்வங்கள் உறைவிடங்கள் வடகிழக்குத் திசை ஆகியன குருவைச் சார்ந்தவை. ஜோதிடர், மந்திரி, குரு (ஆசிரியர்), அந்தணர், சன்யாசிகளுக்குத் தலைமை ஏற்பவர், முக்கியஸ்தர், புறா, குதிரை, அன்னப்பறவை ஆகியன குருவிற்கு உரியன.[64]

பிரம்மா, அரசாங்கப்பணம், ஆன்மீகம், ஜோதிடம், ஞானம், உபதேசம், யோகாப்பியாசம், ஆசாரியத்துவம், அஷ்டமாத்திகள், புத்தியுக்தி விவகாரசேவை, தனம், ஒழுக்கம், பிராபல்யம், இராஜ சன்மானம், பட்டம்பேர், சுருதிஸ்மிருதி, ஸத்விஷயம், சாந்தம், சொர்ணம், வைடூரியம், புஷ்பராகம், கோமேதகம், புஷ்பம், தித்திப்பு, நேத்திரங்கள், ஆண்டிவர்க்கம், ரிஷிவர்க்கம், தேன்,கடலை, சீரகம், யானை, மகான்கள், லாகிரி வஸ்துக்கள், வட்டிவகை, தெய்வீக வகைகள், கல்வி, பள்ளி போன்றவை மூலம் இலாபம் ஏற்படும். பித்ருகாரகன், பெண்கள் ஜாதகத்தில் கணவனை பிரதிபலிக்கும் கிரகம்.

பருத்த சரீரம், பொன்நிறக்கண்கள், கம்பீரப் பொழிவு, தர்மகுணம், அறிவாற்றல், பணப்புழக்கம், ஆரோக்கியமுள்ள உடல்வாகு, இனிப்புச்சுவையில் ஆர்வம், எதிலும் முன்னணியில் இருப்பது, கல்வியில்

தேர்ச்சி, சிறந்த அறிவு, அனைவருக்கும் ஆலோசனை சொல்லுதல், அநுஷ்டானப்படி தெய்வப்பணியில் ஈடுபட்டு ஆன்மீகத்தை வளர்த்தல், கடவுள் பக்தி, பெரியோர்கள் புண்ணிய ஷேத்திரங்கள் (இடம்) எழுத்துத்துறை, பத்திரிக்கைத்துறை, நன்கொடை, நீதி, நிர்வாகம், அஷ்ட ஐஸ்வர்யம், மதிப்பு மரியாதை மதக்குருக்கள், பூசாரிகள், அர்ச்சகர்கள், கனிவகைகள், பூர்வீக சொத்து பூர்வீக தெய்வ அனுகிரகங்கள், குரு 2ஆம் வீடு, 5ஆம் வீடு, 9ஆம் வீடு, 10ஆம் வீடு, 11ஆம் (2, 5, 9, 10, 11) வீடுகளுக்கு காரகன் ஆகிறார்.[65]

1.11. குருவின் வேறு பெயர்கள்

தேவகுரு, வியாழன், அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், பொன்னவன், மறையன், பீதாம்பரர், சௌமியமூர்த்தி, வானவர்கோன் தேசிகன், கரபதி, ஜிவன், மந்திரி, சுருகுரு வேந்தன், அங்கிரகன், தாராபதி, சிகண்டிகன், தெய்வ மந்திரி, ஈட்டியவன், இஜ்யன், ஆண்டளப்பன், வேதன், நற்கோள் என்ற வேறுபெயர்களும் உண்டு.[66]

1.12. குருவைப்பற்றிய சிறப்புச் செய்திகள்

1. சுபக்கிரகம் எனப்படும் குரு புத்திரகாரகர். தனகாரகர் என அழைக்கப்படுகிறது.
2. ஜாதி - அந்தணர்
3. பாஷை - சமஸ்கிருதம் (தேவ பாஷை(அ) தேவ நாகரி)
4. குணம் - சத்வ குணம் (நல்ல குணம்)
5. நிறம் - மஞ்சள் (சந்தனம் என்றும் கூறுவதுண்டு)
6. நெட்டையான உருவம்
7. முழு சுபர்
8. நாடித்தன்மை - வாத சம்பந்தமானவர் (வாத நாடி)
9. உடல் உறுப்பு ஆதிபத்தியம் உடலின் தசை (சதை) மற்றும் மூளைக்கு ஆதிபத்தியம் பெறுபவர். மூளை என்பது தலையில் ஆகாயத்தைப் பார்ப்பதால் குருவுக்கு பஞ்ச பூதத் தத்துவத்தில் ஆகாயம் அளிக்கப்பட்டுள்ளது.

10. அமைச்சர் (மந்திரி) எனும் அந்தஸ்து பெறுபவர் (குரு) என்று அழைக்கப்பட்டு தேவர்களுக்கு குருவாக இருந்தாலும் மந்திரி என்ற அந்தஸ்தைப் பெறுகின்றார்.
11. தானியம் - கொத்துக்கடலை (சுண்டல் கடலை)
12. திசை - வட கிழக்கு
13. வாகனம் - யானை
14. ஆசனம் - நீள் சதுர வடிவம் (சவுக்கம்)
15. சுவை - இனிப்பு
16. பஞ்ச பூதத் தத்துவம் - ஆகாயம்
17. உலோகம் - பொன் (தங்கம் என்பதால் குருவுக்கு பொன்னவன் என்ற பெயரே உண்டு)
18. மலர் - முல்லை
19. சமித்து (தாவரம்) – அரசு
20. தட்சிணா மூர்த்தி - அம்ஸம்
21. வாசனைத் திரவியம் - கோரோசனம்
22. இடம் - வேள்விகள் (யாகம் - ஹோமம் செய்யும் இடம்)
23. கிரக ஷேத்திரம் - ஆலங்குடி, திட்டை, திருச்செந்தூர்
24. கிழமை - வியாழன் (குரு வாரம்)
25. பார்வை- தான் இருக்கும் இடத்திலிருந்து 5, 7, 9 ஆகிய இடங்களைப் பாரப்பவர்
26. எண்கணித அலை எண் - 3 (மூன்று)
27. தந்தை - ஆங்கீரசர்
28. கோத்திரம் - ஆங்கீரச கோத்திரம்
29. பத்தினி - தாரை எனும் தாரா தேவி
30. இராசியில் சஞ்சரிக்கும் காலம் - 1 வருடம்
31. இராசிக்கட்டம் முழுவதும் கடக்கும் காலம் 12 வருடங்கள். (ஒரு மாமாங்கம் எனப்படும் 12 வருடங்கள்)
32. குரு இராசியில் பிரவேசித்து 2 மாதங்கள் கழித்தே பலன்களைச் செய்வார்.
33. சூரியனுடன் 15 பாகைக்குள் வரும் போது அஸ்தமனமாகி அஸ்தங்க தோஷம் பெறுவார்
34. தசாவின் மத்திய பகுதியில் பலன் கொடுப்பார்

35. அஸ்தமனமாகும் ராசிகள் - மிதுனம் - கன்னி

36. அதி தேவதை - இந்திரன் (ஆனால் பிரும்மா என்று சில நூல்கள் குறிப்பிட்டுள்ளன)

37. பிரக்யதி தேவதை - பிரும்மா தஷிணாமூர்த்தி தஷிணா மூர்த்தியையே பிரக்யதி தேவதை.

38. சமம் பெறும் இராசி (வீடு) - கும்பம்

39. நட்புக் கிரகங்கள் - சூரியன் - செவ்வாய் - சந்திரன்

40. பகைக் கிரகங்கள் - புதன் - சுக்கிரன்

41. சமக் கிரகங்கள் - சனி - இராகு - கேது

42. சூரியனிலிருந்து குரு கிரகம் உள்ள தூரம் தோராயமாக 778 மில்லியன்கிலோ மீட்டர்களாகும்

43. பூமியிலிருந்து குரு கிரகம் உள்ள தூரம் தோராயமாக 628 மில்லியன்கிலோ மீட்டர்களாகும்

44. குரு தசா காலம் - 16 வருடங்கள்

45. குரு தசாவில் மற்ற கிரக புத்தி காலங்கள்

		ஆ—மா— நா
குரு தசா	குரு புத்தி	02—01—18
குரு தசா	சனி புத்தி	02—06—12
குரு தசா	புதன் புத்தி	02—03—06
குரு தசா	கேது புத்தி	00—11—06
குரு தசா	சுக்கிரன் புத்தி	02—08—00
குரு தசா	சூரியன் புத்தி	00—09—18
குரு தசா	சந்திரன் புத்தி	01—04—00
குரு தசா	செவ்வாய் புத்தி	00—11—06
குரு தசா	இராகு புத்தி	02—04—24
	மொத்தம்	16—00—00

46. குருவின் நட்சத்திரங்கள் - புனர்பூசம் - விசாகம் - புரட்டாதி
47. குருவானவர் மேஷம் - கடகம் - சிம்மம் - விருச்சிகம் - ஆகிய இராசிகளுக்கு சுபராகின்றார்
48. கடகம் விருச்சிகம் ஆகிய இரு இராசிகளுக்கும் முழு யோகராகின்றார்
49. மேஷம் - சிம்மம் ஆகிய இரு இராசிகளுக்கும் 1/2 சுபராகின்றார்
50. மிதுனம் - கன்னி ஆகிய இரு இராசிகளுக்கும் பாதகாதிபதியாகின்றார்
51. ரிஷபம் - சிம்மம் ஆகிய இரு இராசிகளுக்கும் பாதகாதிபதியாகின்றார்
52. குருவுக்குரிய தேசம் - அவந்தி
53. நிர்வாகப் பொறுப்பில் குரு ஆஸ்தான குரு என்ற அந்தஸ்தைப் பெறுகின்றார்
54. ஜல இராசி எனும் கடகத்தில் குரு உச்சமும் தனுசு மீன இராசியில் ஆட்சியும் பெறும் இவர் நீர் சார்ந்த இராசி எனும் மகரத்தில் நீசமாகின்றார்.
55. ஆங்கிலத்தில் குருவுக்கு ஜுபிடர் (JUPITER) என்று பெயர்
56. கைரேகை அமைப்பில் ஆட்காட்டி விரலுக்கு கீழே இருப்பது குரு மேடாகும்.
57. குருவுக்குரிய நவரத்தினம் புஷ்பராகம் (TOPAZ)இதில் கனக புஷ்பராகம் - வெண் புஷ்பராகம் - தேன் புஷ்பராகம் என்று மூன்று வகை உண்டு.
58. குரு வருடத்துக்கொரு முறை வக்கிரகதியடைவார். இது சுமார் 3½ மாதங்கள் வரை இருக்கக் கூடும்
59. குரு ஆதிக்கம் அதிகம் உடையவர்கள் இனிப்பு சாப்பிடுவதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள்.

1.13. குருவின் இராசிமண்டல சஞ்சாரத்தால் குழந்தைப் பிறப்பு

இராசிக்கட்டத்தையும், வானிலுள்ள 27 நட்சத்திரங்களையும் 12 நட்சத்திரக்கூட்டங்களாகப் பிரித்து அதை ஆங்கிலத்தில் ‘‘சோடியாக்’’ என்று அழைக்கிறார்கள். கிரேக்க மொழிச் சொல்லான

“சோடியாக்கோஸ்” (ZODIACKOS)[67] என்றால் விலங்குகளின் கூட்டம் என்று பொருள். பெரும்பாலான நட்சத்திரக்கூட்டங்களும் விலங்குகளின் பெயர்களைக் கொண்டிருந்ததால் இந்தப் பெயரை கிரேக்கர்கள் சூட்டினார்கள்.

கோள்களின் சுழற்சியால் ஏற்படும் வாழ்வின் மாற்றங்களை விஞ்ஞானப்பூர்வமாக நிரூபித்துக் காட்டவேண்டும். அதுவே அறிவியல் ஜோதிடம் (Astro-Science). அவ்வாறு நிரூபித்துக் காட்டினால் ஜோதிடமும் விஞ்ஞானத்தின் ஒரு அங்கமே ஆகும்.

வானமண்டலத்தை 360 டிகிரியாக 12 ராசியாக பிரித்துள்ளார்கள். ஒவ்வொரு இராசியும் 30 டிகிரி கொண்டது.[68] (**30°X12=360°)**

எண்	ராசி	பாகை	எண்	ராசி	பாகை
1	மேஷம்	1°-30°	7	துலாம்	181°-210°
2	ரிஷபம்	31°-60°	8	விருச்சிகம்	211°-240°
3	மிதுனம்	61°-90°	9	தனுசு	241°-270°
4	கடகம்	91°-120°	10	மகரம்	271°-300°
5	சிம்மம்	121°-150°	11	கும்பம்	301°-330°
6	கன்னி	151°-180°	12	மீனம்	331°-360°

1.14.1. மேஷம்

சர இராசி என்றும், ஓஜை இராசி என்றும் அழைக்கப்படும் மேஷம் ஒரு ஆண் இராசியாகும். நெருப்பின் ஆதிபத்தியம் பெற்ற முதல் இராசியான இது உடல் உறுப்பின் தலையைக் குறிக்கும். இதன் ஆட்சியாளர் எரிகிரகம் எனும் செவ்வாய், எரிகிரகம் (அ) நெருப்புக்கிரகம் எனும் சூரியன் இந்த இராசியில் உச்சம் பெறுகின்றனர். சனி இந்த இராசியில் நீசம் அடைகின்றார். குரு ஒருவரே இந்த இராசியில் நட்பு பெறுபவர்.[69] சந்திரன், சுக்கிரன், புதன் மூவரும் சமம் பெறுகின்றார்கள். இராகு, கேது இருவரும் பகை பெறுகின்றார்கள்.

ஆடு என்னும் நாற்கால் பிராணியைச் சின்னமாகக் கொண்ட மேஷம் ஆங்கிலத்தில் ஏரீஸ்(Aries) என்று பெயர் பெறுகின்றது. கிழக்குத் திசையைக் குறிக்கும் இது சிறு காடுகளை இருப்பிடமாகக் கொண்டது.

இரவுக்காலத்தில் வலிமை பெரும் இது சிவப்பு நிறத்தைக் கொண்டதாகும்.

ஜாதகலங்காரம் என்னும் நூலில் ஆடு எனும்[70] சின்னத்தைக் கொண்ட மேஷத்தில் பிறந்தவன் பலனைக் காணுமிடத்து இராஜசேவை செய்வோனும், எவ்விதத்திலும் நீங்காத திடமான புத்தியுடையோனும், சிரிப்பதில் விருப்பமுடையவனும், உயர்ந்த அடிமைத்தொழில் செய்பவனும், அதிகமான செல்வத்தையுடையவனும், வீர, தீர, பராக்கிரமச் செயல்கள் செய்பவனும், இளைத்த திரேகமுடையவனும், பெருமையுடைய சத்தியமார்க்க, தரும சாஸ்திரங்களை கேட்க பிரியமுள்ளவனும், உயர்ந்த கழுத்தும், உண்மையான வார்த்தை பேசுபவனும், கோபம் உடையவனும், சிறுத்த முழங்கால்களை உடையவனும், எதிரில் வரும் மிருகங்களை வதைக்கும் குணமும் கொண்டவன்.

மேஷத்தில் குரு இருப்பதை அற்புதமான நிலை என்றே கூறலாம். 9, 12 ஆகிய இரண்டுக்கும் அதிபதியாகும் குரு பாக்கியம், தர்மம் எனும் நவதிரிகோணாதிபத்தியம் (9) பெறுவதால் அவருக்கு விரயாதிபத்தியம் மட்டுப்பட்டு சுபர் என்றாகி மேஷத்துக்கு நன்மை செய்யவேண்டிய வராகிவிடுவார். இலக்கினத்தில் உள்ள குரு செல்வாக்கு, கௌரவம், அந்தஸ்து, கௌரவபதவிகள், தலைமை தாங்கும் பண்பு, தெய்வக் காரியங்களை முன்னின்று செய்தல் ஆகியவற்றை அளிப்பார். மற்றவர்கள் இவர்களைத் தேடி வந்து ஆலோசனைகளைப் பெறுவார்கள். தந்தையாரிடமும் மற்றும் பெரியவர்கள், சான்றோர்களிடமும் மதிப்பும், மரியாதையையும் உடையவர்கள். அதனால் அதிக ஆண் குழந்தைகள் பிறக்க வாய்ப்புண்டு.

எனினும் சில பிரச்சினைகளையும் மேஷ இலக்கின குரு அளிக்கவே செய்வார். குறிப்பாக 12க்குரிய விரயாதிபத்தியமும் பெறும். அவர் கௌரவத்தை விட்டுக்கொடுக்காதவர் என்பதால் அதிகமாக செலவு செய்ய வைப்பார். நல்ல செலவுகள் தான் என்றாலும் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள கடன்கள் வாங்கியும் செலவுகள் செய்யத் தயங்கமாட்டார்கள். பெரும்பாலும் குடும்பத்துக்குச் செய்யவேண்டும் என்ற அக்கறை குறைவாகவே இருக்கும். சுயநலத்தைவிட பொது சேவைக்காகத் தான் அதிகம் செலவு செய்வார்கள். புகழ் போதை அதிகம் கொண்டவர்கள். காமஉணர்வு அதிகமாக இருக்கவே செய்யும்.

சூரியன் குரு இணைவு என்பது மிகவும் அற்புதமான நிலை. இரு திரிகோணாதிபதிகள், இரு யோகர்களும், மேஷ இலக்கனத்தில் இருப்பது தலைமைப் பொறுப்பை வற்புறுத்தி அளிக்க வைக்கும். இவர்கள் வேண்டாமென்றாலும் முன் நின்று செய்யும் பொறுப்பை இவர்களைத் தேடி வரும். பொதுநலவாதிகள், மிகவும் பெருந்தன்மையுடையவர்கள், ஈகைக்குணம் உடையவர்கள், அனைவருக்கும் பாகுபாடு பார்க்காமல் உதவி செய்வார்கள். தெய்வகாரியங்கள் செய்வதில் மிகவும் ஆர்வம் உடைய இவர்கள் தர்மகர்த்தா, மடாதிக்கம் போன்ற பதவிகள் வகிப்பார்கள். நீதித்துறை மற்றும் கௌரவ மாஜிஸ்திரேட், ஊர்ப்பிரமுகர், நாட்டாண்மை போன்றவைகளும் ஏற்படலாம். பெண்கள் விஷயத்தில் சபலம் இருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் சாமர்த்தியமாக செயல்படுவார்கள்.

காமம் அதிகமாக இருக்கும் இராசியானதாலும், குரு 9, 12க்குடைய ஆதிபத்தியம் பெற்று கட்டில் சுகத்தைக் கொடுக்கும்.

1) 5க்குடையவன் சூரியன், பெண் இராசியாகிய ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனத்தில் அமரும் போதும் பெண் நவாம்சம் பெறும்போதும் பெண் குழந்தைகள் பிறக்கும்.
2) குரு பார்வை சூரியனுக்கு ஏற்பட்டால் ஆரோக்கியமான, புத்திசாலியான குழந்தைகள் பிறக்கும். குழந்தைகளால் பெற்றோருக்கு நன்மைகள் ஏற்படும். பெற்றோர்கள் குழந்தைகளை மிகவும் சிறப்பாக கவனித்துக்கொள்வார்கள்.
3) சூரியன் மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பத்தில் அமரும்போதும், ஆண் நவாம்சம் பெறும் போதும் ஆண்குழந்தைகள் பிறக்கும்.
4) மேஷத்தில் அமர்ந்த வியாழனுடன் செவ்வாய் சேர்ந்தாலும், மேஷத்தில் உள்ள குருவை செவ்வாய் பார்த்தாலும் ஆண்குழந்தைகள் பிறக்கும்.
5) மேஷத்தில் உள்ள குருவை சுக்கிரன், சந்திரன் பார்வை செய்தாலும், சேர்ந்தாலும் பெண் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கும்.
6) மேஷத்தில் உள்ள குருவை ஆண், பெண் கிரகங்களின் பார்வை, சேர்க்கை ஏற்பட்டால் ஆண், பெண் குழந்தைகள் பிறக்கும்.

7) மேஷத்தில் உள்ள குருவுடன் அலிக்கிரகமான கேது, சனி, புதன் சேரும்பொழுது குழந்தைகள் பிறந்து இறக்கும் அல்லது குறைப்பிரசவம் ஆகும். குறைபாடு உள்ள குழந்தைகள் பிறக்கவும் வாய்ப்புள்ளது.

1.14.2. ரிஷபம்

ஸ்திர இராசி என்றும், பெண் இராசி, இரட்டைப்படை இராசி என்றும் அழைக்கப்படும் இரண்டாம் இராசியான ரிஷப இராசி முகத்தைக் குறிக்கும் இராசியாகும். இதன் ஆட்சியாளர் நீர்க்கிரகம் எனப்படும் சுக்கிரன் ஆகும். மற்றொரு குளுமையான நீர்க்கிரகமான சந்திரன் இந்த இராசியில் உச்சம் பெறுகிறார். எருது (மாடு) எனும் நாற்கால் பிராணியைச்[71] சின்னமாகக் கொண்டு நாற்கால் இராசி என்றழைக்கப்படும் ரிஷபம் ஆங்கிலத்தில் டாரஸ்(Taurus) என்று பெயர் பெறுகின்றது. தென் திசையைக் குறிக்கும் இது பயிர் நிலங்களுக்குரிய இடத்தை இருப்பிடமாகக் கொண்டது. இரவில் வலிமை பெரும் இது வெண்மை நிறத்தைக்கொண்டதாகும்.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் ரிஷபத்தில் பிறந்தவர்களைப்பற்றி[72] கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பெருத்த துடை, பரந்த முகம் கொண்டவனாகவும், பயிர்த்தொழில் செய்வதில் நாட்டமுடையவனாகவும், நடுவயது முதல் கடைசிக்காலம் வரை சௌக்கியமாக வாழ்பவனும், பெண்களிடம் பிரியமுள்ளவனாகவும், தான தருமங்கள் செய்பவனாகவும், கொடையாளியாகவும், பொருமையுள்ளவனாகவும், துக்கங்களையும், கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்பவனாகவும், பசுக்களை பராமரிப்பதில் விருப்பமுடையவனாகவும் இருப்பான் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்களிடம் விருப்பம் உடையவர்கள், சகோதரிகளிடம் பாசமாக இருப்பார்கள். தாய்ப்பாசமும் உண்டு. கஞ்சத்தனம் இல்லாமல் நல்ல செலவாளிகளாவே இருப்பார்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதிலும், அலங்கார சாதனங்கள், வாசனாதி திரவியங்களிலும் விருப்பம் உடையவர்கள். எப்போதும் நேர்த்தியாகவே ஆடை அணிபவர்கள்.

ரிஷபத்தில் குரு தனித்து நிற்பதைப் பற்றிக்காணும் போது அஷ்டம இலாபாதிபதியான குரு இலக்கினத்தில் திக்பலம் பெறுபவர் என்பதால் நல்ல ஆயுள் பலம் அளிப்பார்.

இவர்கள் எதையும் செய்யாமல் மற்றவர்களைக் கொண்டே வேலைகளை முடித்துக்கொள்வதில் சமர்த்தர்கள். மற்றவர்கள் தங்களை உயர்வாக எண்ணுமளவிற்கு உத்தமர்களாக காட்டிக் கொள்வார்கள். அந்தரங்கத்தில் வேறுவிதமாகச் செயல்படுவார்கள். எப்படியும் சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றுவிடுவார்கள். தங்கள் காசைச் செலவழிக்காமலே பிறர் செலவிலும், உழைப்பிலும் ஆதாயம் பெறுவதுடன் புகழ், செல்வாக்கையும் பெற்றுவிடுவார்கள். வம்பு, வழக்குகள் இவர்களைத் தேடி வரும். அவைகளை சாமர்த்தியமாக சமாளிப்பதுடன், இவர்களே நாட்டாண்மை செய்பவர்களாக இருந்து சாதுர்யமாக முடித்து வைப்பார்கள். 11க்குடையவரும் இவரே என்பதால் 8, 11ஆம் இடங்கள் உபஜெய ஸ்தானம் என்பதால் இவர்களிடம் பணப்புழக்கம் தாராளாமாக இருக்கும். எவர் பணம் என்றாலும் இவர்களிடம் சரளமாகப் புரளும்.

பெண்தன்மை கொண்ட இராசி, அதிபன் சுக்கிரனும் பெண் தன்மை உடையவன், ரிஷபத்திற்கு புத்திரஸ்தானாதிபதி புதன், இவன் ஒரு அலிக்கிரகம். ரிஷப இலக்கினத்தில் குரு, செவ்வாய் சேருவது அதிகமான காம உணர்ச்சிகளை ஏற்படுத்துகிறது. காமகாரகன் சுக்கிரன் அதிக ஆசையைத் தூண்டி இல்லற சுகத்தை அதிகமாகப் பெறுவர். பெண் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கும். 5க்குடையவன் அலிக்கிரகம். எனவே புதன் வலுத்தாலும், வியாழனுடன் சேர்ந்தாலும் பெண் குழந்தைகள் பிறக்கும். குழந்தைகள் குறைவாகவே கிடைக்கும்.

1) புதன் பெண் இராசியில் அமர்ந்தால் பெண் குழந்தைகள் பிறக்கும்.
2) புதன், வியாழனுடன் அல்லது சூரியனுடன் சேர்ந்து ஆண் இராசியில் இருந்தால் ஆண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும்.
3) ரிஷபத்தில் அமர்ந்த குருவை புதன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகளே அதிகம் பிறக்கும்.

4) ரிஷபத்தில் அமர்ந்த குருவை சனி, கேது போன்ற அலிக்கிரகங்கள் பார்த்தால் பெண் குழந்தைகள் பிறக்கும். குறைவாகக் குழந்தைகள் பிறக்கும் அல்லது ஊனமாகப் பிறக்கும்.
5) ரிஷபத்தில் அமர்ந்த குருவுடன் சுக்கிரன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் அதிகமாகப் பிறப்பார்கள்.
6) ரிஷபத்தில் அமர்ந்த குருவுடன் சந்திரன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் அதிமாகப் பிறக்கும்.
7) ரிஷபத்தில் அமர்ந்த குருவுடன் இராகு சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் ஊனமாகப் பிறக்கும்.
8) ரிஷபத்தில் அமர்ந்த குருவுடன் சூரியன், செவ்வாய் போன்ற ஆண் கிரகங்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஆண் குழந்தைகள் பிறக்கும்.

1.14.3. மிதுனம்

மிதுன இலக்கினம் உபய இராசி, ஓஜை இராசி, ஆண் இராசி, சௌமிய இராசி, ஒற்றைப்படை இராசி[73] என்று அழைக்கப்படும். 3ஆவது இராசியான இது கழுத்து, தொண்டை ஸ்தானத்தைப் பற்றிக்குறிக்கும். இதன் ஆட்சியாளர் காற்றுக்கிரகம் என்றழைக்கப்படும் புதனாகும். இந்த இராசியில் எந்தக் கிரகமும் உச்சமோ, நீசமோ, மூலத்திரிகோணமோ அடைவதில்லை. சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய நால்வரும் நட்பு பெறுகின்றார்கள்.

சூரியன் சமமான நிலையையும், செவ்வாய், குரு இருவரும் பகை என்ற நிலையையும் பெறுகின்றார்கள். சுக்கிரன், சனி இருவரும் இலக்கின சுபரும், யோகருமாகின்றார்கள். செவ்வாய், குரு இருவரும் அசுபர்களும், பகைவர்களுமாகின்றார்கள். மற்றவர்கள் சமத்துவமாக செயல்படுவார்கள். இந்த இலக்கினத்திற்கு பாதகாதிபதி குரு, மாரகாதிபதிகள் குருவும், செவ்வாயும். 7ஆம் இடம் பாதகஸ்தானம். 7, 11ஆம் இடங்கள் மாரக ஸ்தானமாகும். ஆயுதம் தரித்த ஆணும், வீணையை வைத்திருக்கும் பெண்ணுமான இரட்டையர்களைச் சின்னமாகக் கொண்ட இது இருகால் இராசியாகும். ஆங்கிலத்தில் ஜெமினி (Gemini) என்று பெயர் பெறுகின்றது. ‘ஆனி’ இதற்குரிய மாதமாகும்.

மலட்டு இராசி என்றழைக்கப்படும் இது மேற்கு திசையைக் குறிக்கும். பச்சை நிறத்தையும், விளையாடுமிடங்களையும் குறிப்பிடுவது.

'ஜாதகலங்காரம்' எனும் மூலநூலில் தித்திப்பு உடைய மிதுன இலக்கினத்தில் பிறந்தவன் அனைவரும் கண்டு புகழ்ந்து பேசத்தக்கவனும், சங்கடங்களையுடையவனும்,[74] மௌனமாக இருப்பவனாகவும், சுத்தமுடையவனாகவும், இரண்டு விதமாக பேசுபவனாகவும், வைராக்கிய நோன்புடையவனாகவும், தனது காரியங்களை வெகு ஜாக்கிரதையாகச் செய்து முடிக்கும் வல்லமையும், உண்மையே பேசுபவனும், பித்த வியாதியுடையவனும் என்று கூறப்பட்டுள்ளது.

கலைகளில் ஞானமும், இரசிப்புத்தன்மையும் உள்ளவர்கள். சங்கீத ஞானமும் உண்டு. அதிகம் சிரமப்படாமல் உடல் உழைப்பு இல்லாமல் வாழத் தெரிந்தவர்கள் என்பதுடன் வசதியான வாழ்வை எப்படியும் பெற்றுவிடுவார்கள். தொழில் வகையிலும் சுலபமான தொழில்களையே செய்வார்கள்.

மிதுனம் ஒரு அலி இராசி. மிதுனத்தில் குரு அமரும்பொழுது பால் உணர்வுகள் அதிகமாக இருக்காது. விந்தணுக்கள் குறைவாகவே இருக்கும். இலக்கினாதிபதி புதன் ஆட்சி, உச்சம் பெற்றாலும், குருவுடன் சேர்ந்தாலும் பெண் குழந்தைகள் பிறக்கும். ஆரோக்கியமான பெண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும். மிதுனத்திற்கு 5க்குடையவன் சுக்கிரன். இவன் குருவுடன் சேர்ந்தாலும், ஆட்சி, உச்சம், திரிகோணம் பெற்றாலும் பெண் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கும். விந்தணுக்கள் அதிகமாக உற்பத்தி ஆகும். குருவுடன் இராகு, சனி, கேது போன்ற அலிக்கிரகங்கள் சேர்ந்தாலும் பெண் குழந்தைகள் குறைவாக ஊனமாகப் பிறக்கும்.

1) சுக்கிரன் பெண் இராசியில் இருந்தால் பெண் குழந்தைகளும்,
2) சுக்கிரன் ஆண் இராசியில் இருந்தால் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் பிறக்கும்.
3) மிதுனத்தில் அமர்ந்த குருவுடன் சுக்கிரன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும்.

4) மிதுனத்தில் உள்ள குருவை சூரியன், செவ்வாய் போன்ற ஆண் கிரகங்கள் குருவைப் பார்த்தால் ஆண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும்.
5) மிதுனத்தில் உள்ள குருவை இராகு, கேது, சனி போன்ற அலிக்கரகங்கள் பார்த்தால் குழந்தைகள் பிறக்காது. பிறந்தாலும் ஊனமாகப் பிறக்கும். 5க்குடையவன் சுக்கிரனின் நிலையைப் பொறுத்து ஊனத்தின் தன்மை குறைவாகும்.

1.14.4. கடகம்

சர இராசி, உக்கும இராசி, பெண் இராசி, சௌமிய இராசி, இரட்டைப்படை இராசி என்றெல்லாம் அழைக்கப்படும் 4ஆவது இராசியான கடகம் இருதயத்தைப் பற்றிக் குறிக்கும்.[75] இதன் ஆட்சியாளர் குளுமையான நீர்க்கிரகமான சந்திரன். சந்திரனுக்கு ஆட்சி எனும் சொந்த வீடு கடகம் மட்டும் தான். இந்த இராசியில் குரு உச்சமடைகின்றார். செவ்வாய் நீசமடைகின்றார். சூரியன் நட்பு பெறுகின்றார். புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய ஐவரும் இந்த இராசியில் பகை பெறுகின்றார்கள். இதில் சமம் என்ற நிலையை எவரும் பெறுவதில்லை.

செவ்வாயும், குருவும் இந்த இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுபரும், யோகர்களுமாகின்றார்கள். செவ்வாய் முழு சுபர், யோகர் என்ற அந்தஸ்தையும், குரு 6ஆமிட ஆதிபத்தியத்தையும் பெறுவதால் அரை சுபர், அரை அசுபர் என்ற நிலையைப் பெறுகின்றார்கள். சூரியன் நண்பன் என்ற நிலையைப் பெறுகின்றார். மற்றவர்கள் இந்த இலக்கினதாரர்களுக்கு அசுபர்கள், பகைவர்கள் என்ற அமைப்பையே பெறுகின்றார்கள். இரண்டாம் இடம் மற்றும் ஏழாம் இடம் மாரக ஸ்தானம் என்பதால் சூரியனும், சனியும் மாரகாதிபதிகளாவார்கள். 11ஆம் இடம் பாதக ஸ்தானம். அதன் அதிபதி சுக்கிரன் பாதகாதிபதி. நண்டைச் சின்னமாகக் கொண்ட இராசியாகும். ஆங்கிலத்தில் ‘‘கேன்சர்’’ (Cancer) என்று பெயர் பெறுகிறது.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் கடகத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்தீரிகளால் ஜெயிக்கப்பட்டவனாகவும (பெண்களுக்கு அடங்கி நடப்பவனாக) பெருத்த

கழுத்துள்ளவனாக, உயர்ந்த பிருஷ்டமுள்ளவனாக(உட்காருமிடம் குதம்), அநேக வீடுள்ளவனாக, அதிக பெண்கள்[76] தொடர்புள்ளவனாக, செல்வம் நிறைந்தவனாக, குள்ளமாகவும், வக்கிர புத்தி உள்ளவனாகவும், வேகமான நடையுள்ளவனாகவும், மேதைத்தனம் உள்ளவனாகவும் (எதையும் மறக்காத ஞாபக சக்தியுடையவன்), நீரில் விருப்பமுடையவனாகவும், அற்பமான குழந்தைகள் உள்ளவனாகவும் இருப்பான். 'ஜாதகலங்காரம்' என்னும் மூலநூலில் "மேன்மை பொருந்திய கடகத்தில் பிறந்தவன் சிவந்த சரீரமுடையவனும், வல்லமையுடை யவனும், ஊன்றி நடப்பவனும், தாசிகள் ஆசையுடையவனும், நவதான்ய மூலமான செல்வந்தனாகவும், ஆசாரியாரிடம் பக்தியுடையவனும், தன் பிதா சொல்லைத் தள்ளி நடப்பவனும், தன்னால் காண முடியாத இடங்களில் மருவு, மச்சமுடையவனாகவும் இருப்பார்கள் என கூறப்பட்டுள்ளது.

கடகத்தில் குரு உள்ள நிலை என்பது சிறப்பானது. தனபாக்யாதிபதியான குரு உச்சம் பெறுவதால், கடகத்தில் குரு இருப்பது பெருந்தன்மையையும், விவேகத்தையும், புகழ், செல்வாக்கு, கௌரவத்தையும் அளிக்கத் தவறுவதில்லை. தலைமை தாங்கும் பண்பு, நாட்டாண்மை, வழக்குகளில் சிக்கல் தீர்த்து வைப்பது போன்றவைகளையும் அளிக்கும்.

பொதுசேவை, தெய்வ காரியங்கள், அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தும். அவற்றில் குறிப்பிடத்தக்க புகழையும் கொடுத்து விடுவார். பெரும்பாலும் சுயநலம் இல்லாதவர்கள். எதிலும் ஆதாயம் தேடமாட்டார்கள். கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளவே மாட்டார்கள். தங்கள் பணம் செலவானாலும் தயங்காமல் செய்து கௌரவத்தை நிலைநாட்டுபவர்கள். எதிரிகளைப் பற்றி சிறிதும் அக்கறையோ, கவலையோ படமாட்டார்கள். இவர்களைப் பொருத்தவரை எவரையும் எதிரியாகவே கருதமாட்டார்கள். கௌரவத்திற்காக கடன் வாங்கியும் செலவு செய்வார்கள். நாணயமானவர்கள் என்பதால் எப்பாடுபட்டாவது கடனை அடைத்துவிடுவார்கள். சிறுசொல்லையும் தாங்காதவர்கள், குறை கூறுவதை வெறுப்பவர்கள். காம உணர்வு உள்ளவர்கள் தான் என்றாலும் கட்டுப்பாட்டுடன் இருப்பார்கள். பெரும்பாலும் மனைவி இவர்களை அடக்கி

ஆளவே முயற்சிப்பாள். இவர்கள் அதை கண்டு கொள்ளவே மாட்டார்கள். குடும்பப் பொறுப்பை மனைவியிடமே விட்டு விடுவார்கள். பிள்ளைகள் மேல் குறிப்பாக பெண் குழந்தைகள் மேல் அதிகமான பற்றும், பாசமும் உடையவர்கள். பிற பெண்கள் தொடர்பு ஏற்பட்டாலும் கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் சாமார்த்தியமாக செயல்படுவார்கள். உயர்ந்த நிலையைவிட்டு கீழிறங்கி வரமாட்டார்கள்.

கடகம் ஒரு நீர் இராசி, பெண் இராசி. இதன் அதிபதி சந்திரன். வளர்பிறையில் சுபன், தேய்பிறையில் அசுபன். நீர் இராசியில் குரு அமர்ந்தால் காம உணர்ச்சிகள் அதிகமாக வெளிப்படும். அதிகமான பெண் குழந்தைகள் கிடைக்கும்.

1) இலக்கினாதிபதி சந்திரன், சுக்கிரனுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் கிடைக்கும்.
2) பஞ்சமாதிபதி செவ்வாய். இவர் வலுப்பெற்றால் ஆண் குழந்தைகள் கிடைக்கும்.
3) பஞ்சமாதிபதி செவ்வாய், குருவுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஆண் குழந்தைகள் பிறக்கும்.
4) குருவுடன் சூரியன் கடகத்தில் சேர்ந்தாலும், பார்த்தாலும், ஆண் இராசியில் அமர்ந்தாலும் ஆண் குழந்தைகள் பிறப்பார்கள்.
5) குருவுடன் சுக்கிரன் கடகத்தில் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் பிறக்கும்.
6) கடகத்தில் குருவுடன் சனி, இராகு, கேது, புதன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் மிகக் குறைவாகப் பிறக்கும். ஊனமான குழந்தையாக இருக்கலாம். குறைப்பிரசவம் ஏற்படும்.

1.14.5. சிம்மம்

ஸ்திர இராசி, ஒஜை இராசி, ஆண் இராசி, குரூர இராசி (பாப இராசி), ஒற்றைப்படை இராசி என்று அழைக்கப்படும் 5ஆவது இராசியான சிம்மம் விலா, மேல்வயிறு என்னும் பாகத்தைக்[77] குறிக்கும். இதன் ஆட்சியாளர் கிரகங்களின் தலைவராகவும், கிரகங்களை தன் ஈர்ப்பு சக்தியால் கட்டுப்படுத்துபவர். பிரபஞ்சத்துக்கே ஒளி அளிக்கும் கிரகம் சூரியனாகும். சூரியனுக்கு சிம்மம் மட்டும் தான் ஆட்சி வீடு என்பதுடன் அவர் மூலத்திரிகோண பலம் பெறுவதும் சிம்மத்திலே தான். சந்திரன்,

செவ்வாய், குரு ஆகிய மூவரும் சிம்மத்தில் நட்பு எனும் நிலையைப் பெறுகின்றார்கள். புதன் நட்பு என்ற நிலையையும், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய நால்வரும் பகை என்ற நிலையையும் பெறுகின்றார்கள். சிம்மத்தில் எக்கிரகமும் உச்சமோ, நீசமோ அடைவதில்லை. எனவே எப்போதும் ஒரே சீரான பலனை அளிக்கும் இராசி என்று சிம்மத்தைப் பற்றி கூறுவதுண்டு.

செவ்வாயும், குருவும் இந்த இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுபராகின்றார்கள். செவ்வாய் முழு யோகராகவும், குரு அரை யோகராகவும் செயல்படுவார்கள். சந்திரன், புதன் இருவரும் நண்பர்கள் என்ற அடிப்படையிலும், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய நால்வரும் பகைவர்கள் என்ற அடிப்படையிலும் செயல்படுவார்கள். அசுபர்கள் என்றும் கூறலாம். 3ஆம் இடம், 8ஆமிடம் ஆகிய இரண்டும் மாரக ஸ்தானம் என்பதால் அதன் அதிபதிகளாகிய சுக்கிரனும், குருவும் மாரகாதிபதிகளாகின்றார்கள். ஸ்திர இராசிகளுக்கு 9ஆமிட அதிபதி செவ்வாய் பாதகாதிபதியாகின்றார். ஆனால் அவரே சுபர், யோகர் என்பதால் அவர் நிற்கும் நிலையைக் கொண்டே பாதகத் தன்மையைச் செய்வார். சிங்கத்தைச் சின்னமாகக் கொண்ட இது நாற்கால் இராசியாகும். ஆங்கிலத்தில் ‘‘லியோ’’(Leo) என்று பெயர் பெறுகின்றது.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் சிம்மத்தில் பிறந்தவர்களைப் பற்றி சிவந்த கண்களுடையவனாகவும், பெருத்த தாடையுள்ளவனாகவும், அகன்ற முகம் உள்ளவனாகவும், அபிமான முள்ளவனாகவும், பராக்கிரமமுள்ளவனாகவும், தகுந்த[78] காரணமின்றி கோபப்படுபவனாகவும், காடு, மலை இவைகளில் சஞ்சரிப்பதில் விருப்பமுள்ளவனாகவும், தாயின் பரிவுடையவனாகவும், ஸ்திரமான புத்தி உள்ளவனாகவும் இருப்பான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எதையும் துணிச்சலுடன் எதிர்கொள்பவர்கள். பயந்து ஒதுங்கமாட்டார்கள். தானாக சண்டைக்குப் போகமாட்டார்கள். தானாக வரும் சண்டையை விடமாட்டார்கள். ஒரு கை பார்த்து விடுபவர்கள். எதற்குமே பயப்படமாட்டார்கள். உழைப்பையே பிரதானமாக எண்ணுபவர்கள். பிறர் உழைப்பில் சாப்பிடுவதை வெறுப்பவர்கள். சிங்கம் தானே தன் உணவை வேட்டையாடிச் சாப்பிடும்.

சிம்மத்தில் குரு அமர்ந்தவர்கள் மிகவும் பெருந்தன்மையான குணமுடையவர்கள். விவரம் அறிந்தவர்கள். சிறு விஷயங்களிலும் ஆர்வமுடன் கவனிப்புடையவர்கள் என்றாலும் அலட்சியமும், சோம்பலும் உடையவர்கள். எதையும் தாங்கள் செய்யாமல் மற்றவர்களைக் கொண்டே சாதித்துக் கொள்வார்கள். இவர்களின் பெரிய மனிதத்தோரணை அதற்கு மிகவும் பயன்படுகிறது. இவர்களைப் பார்க்கும் போதே மற்றவர்களுக்கு ஒரு பயம் கலந்த மரியாதை ஏற்படும்.

இவர்களின் பேச்சு சற்றே அதிகாரம் கலந்ததாகவே இருக்கும். அடுத்தவர்கள் இதற்கு கட்டுப்படுகின்றார்கள். பொதுச்சேவையில், தெய்வகாரியங்களில் நாட்டமுடைய இவர்களுக்கு பதவியும், புகழும் தேடி வரும். அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள். ஆதாயம் தேடமாட்டார்கள். சுயநலம் இல்லாதவர்கள். தான, தருமங்களுக்கும், தெய்வகாரியங்களுக்கும் செலவு செய்ய தயங்கமாட்டார்கள். ஞானிகளையும், வித்வான்களையும், மகான்களையும் மதிப்பவர்கள். அவர்களுக்கு நல்ல கௌரவம் கொடுப்பார்கள்.

பெண்கள் சபலம் அதிகமுடையவர்கள் என்றாலும் அந்த விஷயத்தில் மற்றவர்கள் அறிந்து கொள்ளாமல் மிகவும் நாசுக்காக தொடர்பு கொள்வார்கள். கண்டவர்களிடம் போகாமல் குறிப்பிட்டவர்களிடம் நிரந்தரமாகத் தொடர்பு வைத்துக்கொள்வார்கள். எந்த சமயத்திலும் கௌரவத்தை மட்டும் விட்டுக் கொடுக்காதவர்களாக இருப்பார்கள்.

சிம்மம் ஆண் இராசி. சிம்மத்திற்கு அதிபதி சூரியன் ஒரு ஆண் கிரகம். சிம்மத்திற்கு 5ஆம் அதிபதி வியாழன் ஆண் கிரகம். எனவே,

1) சிம்ம இராசியில் குரு அமர்ந்தால் உயிர் அணுக்கள் அதிகமாகி குழந்தைகள் அதிகம் பிறக்கும். ஆண் குழந்தைகள் அதிகம் பிறக்கும்.
2) சிம்ம இராசியாதிபதி சூரியன் பலமாகி குருவுடன் சிம்மத்தில் அமர்ந்தாலும், குருவைப் பார்த்தாலும் ஆண் குழந்தைகளே அதிகம் பிறக்கும்.
3) சிம்ம இராசியில் ஆண் கிரகம் செவ்வாய் குருவுடன் சேரும்பொழுது அல்லது பார்வை செய்யும்பொழுது ஆண் குழந்தைகள் பிறக்கும்.

4) சந்திரனுடன் சிம்மத்தில் சேரும்பொழுது ஆண், பெண் இரண்டு குழந்தைகளும் கிடைக்கும்.
5) சிம்ம இராசியில் குரு, சுக்கிரன் அமர்ந்து பார்வை பெற்று சுக்கிரன் பலமானால் பெண் குழந்தைகள் பிறக்கும்.
6) சிம்ம இராசியில் குரு, சனி, இராகு, கேது போன்ற கிரகங்களுடன் சேரும்பொழுது குருச் சண்டாளயோகம் பெற்று குழந்தையின்மை அல்லது குழந்தைகளால் தொல்லை ஏற்படும்.

1.14.6. கன்னி

உபய இராசி, உக்கும இராசி, பெண் இராசி, சௌமிய இராசி(சுபஇராசி), இரட்டைப்படை இராசி என்றழைக்கப்படும் 6ஆவது இராசியான கன்னி இராசி இரைப்பை, சிறுகுடல் ஆகிய பாகத்தைக்[79] குறிக்கும். தொப்புள், இடுப்புப்பகுதி என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. இதன் ஆட்சியாளர் புதன். கன்னியில் புதன் ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணம் ஆகிய மூன்று வலிமைகளைப் பெறுகிறார். வேறு எவருக்கும் ஒரே வீட்டில் இம்மாதிரி மூன்று பலன்களைப் பெரும் அமைப்பு இல்லை. இந்த அமைப்பு கன்னி புதனுக்கு மட்டும் தான் உண்டு. இந்த ராசியில் சூரியன் சமம் என்ற நிலையையும், சந்திரன், சனி, இராகு, கேது ஆகிய நால்வரும் நட்பு என்ற நிலையையும், செவ்வாய், குரு இருவரும் பகை என்ற நிலையையும், சுக்கிரன் நீசம் என்ற நிலையையும் பெறுகின்றார்கள்.

சுக்கிரனும், சனியும் இந்த இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு யோகராகவும், சுபராகவும் ஆகின்றார்கள். செவ்வாயும், குருவும் பகைவாகளாகவும், இராகு, கேது, சூரியன் ஆகிய மூவரும் நண்பர்களாகவும் செயல்படுவார்கள். சந்திரனைப் பொறுத்தவரை இந்த இலக்கினத்தாருக்கு நட்பு பெற்றாலும் சந்திரன், புதனை பகையாக எண்ணுவதில்லை. ஆனால் புதன்,சந்திரனை பகையாக எண்ணுகின்றார். எனவே சந்திரன் இந்த இலக்கினத்தாருக்கு பகைவராகவே செயல்படுகின்றார்.

தேய்பிறை என்றால் பகைவர், வளர்பிறை என்றால் சமத்துவம் பெறுபவராகவும் நிர்ணயம் செய்து கொள்வதே நடைமுறை அனுபவத்தில் ஒத்து வருகின்றது. குரு பாதகாதிபதியாகவும், சந்திரன், குரு இருவரும்

மாரகாதிபதிகளாகவும் பொறுப்பேற்கின்றார்கள். பெண்ணை சின்னமாகக் கொண்ட இது இருகால் இராசியாகும். ஆங்கிலத்தில் ''விர்கோ'' (Virgo) என்றழைக்கப்படும்.

'பலதீபிகை' என்னும் மூலநூலில் கன்னி இலக்கினத்தில் பிறந்தவர்களைப் பற்றி சரிந்த தோள்பட்டை, கை இவற்றையுடையவனாக,இபிறருடைய பொருள், வீடு, தனம்[80] இவைகளை அனுபவிப்பவனாக, உண்மையில் பற்றுள்ளவனாக, சாஸ்திரங்களின் கருத்தரிந்தவனாக, பிரியமான வார்த்தைகளைப் பேசுபவனாகவும், வெட்கத்தினால் மெதுவாக சஞ்சரிக்கின்ற கண்களையுடையவனாக, ஸ்திரீ போகத்தில் பற்றுள்ளவனாக, அற்பமான பிள்ளைகளையுடையவனாக இருப்பான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கன்னியில் குரு இருக்கும்போது 4, 7க்குடைய பாதகாதிபதியான குரு இலக்கினத்தில் திக்பலம் பெறுபவர் என்பதால், அவர் கன்னியில் தனித்திருக்கும் போது பாதகத்தன்மையை அதிகம் பெறுவதுடன், பாதக ஸ்தானமான 7ஆம் இடத்தையும் பார்த்து விடுகின்றார். கேந்திராதிபதிகள் சுபராகி, அவர் கேந்திரத்தில் இருந்தால் கேந்திராதிபத்திய தோஷம் பெறுவார்கள் என்பது ஜோதிடவிதியாகும். ஆயினும் பொதுச்சுபரான குருவுக்கும், கேந்திராதிபத்திய தோஷம் உண்டென்றாலும், இலக்கின கேந்திர திக்பலம் குருவுக்கு விசேஷ பலத்தை அளித்து விடுவதால் இவர்களுக்கு கர்வமும், அகந்தையும், பெருமை பேசும் குணமும், மற்றவர்களைக் குறைவாகவே மதிப்பிட்டு அலட்சியப்படுத்தவே செய்யும்.

கன்னி பெண் இராசி, அலிக்கிரக இராசி, குழந்தை பாக்கியம் குறைவான இராசி. 5ஆம் அதிபதி சனியும் ஒரு அலிக்கிரகம். எனவே குரு கன்னியில் அமரும்பொழுது விந்தணுக்கள் குறைவாகி குழந்தை இன்மை ஏற்படும். விந்தணு பரிசோதனை செய்து வைத்தியம் பார்த்தால் ஒரே ஒரு பெண் குழந்தை பிறக்கும்.

1) கன்னி இராசியில் குரு,புதன் சேர்ந்து பார்வை பெற்று புதன் வலுவானால் ஒரே ஒரு ஆரோக்கியமான குழந்தை கிடைக்கும்.
2) கன்னி இராசியில் குரு, சனி சேர்ந்து சனி வலுப்பெற்றால் பெண் குழந்தை பிறக்கும்.

3) கன்னி இராசியில் உள்ள குருவை சூரியன், செவ்வாய் பார்வை செய்தாலும், சேர்ந்தாலும் ஆண் குழந்தைகள் பிறக்கும்.
4) கன்னி இராசியில் உள்ள குருவை சந்திரன், சுக்கிரன் பார்வை செய்தாலும், சேர்ந்தாலும் பெண் குழந்தைகளே பிறக்கும்.
5) கன்னி இராசியில் உள்ள குருவை இராகு, கேது சேர்ந்தால் குழந்தைகள் இருக்காது. நீண்ட வருடங்கள் சென்று ஒரேயொரு பெண் குழந்தை குறைபாட்டுடன் பிறக்கும்.

1.14.7. துலாம்

சர இராசி, ஓஜை இராசி, ஆண் இராசி, சுப இராசி (சௌமியஇராசி), ஒற்றைப்படை இராசி என்றழைக்கப்படும் 7ஆவது இராசியான துலாம் அடிவயிறு, பெருங்குடல் ஆகிய[81] பகுதிகளைப் பற்றிக் குறிப்பிடும். இதன் ஆட்சியாளர் சுக்கிரன், சனி இந்த இராசியில் உச்சம் பெறுகின்றார். சூரியன் நீசமாகின்றார். புதன், இராகு, கேது இவர்கள் நட்பு நிலையையும், குரு பகை என்ற நிலையையும், சந்திரன், செவ்வாய் இருவரும் சமம் என்ற நிலையையும் பெறுகின்றார்கள்.

புதன், சனி இருவரும் துலாமிற்கு சுபராகின்றார்கள். சனி முழு யோகராகவும், புதன் அரை யோகராகவும் செயல்படுவார்கள். சூரியன், குரு இருவரும் பகைவர்களாகவும், இராகு, கேது இருவரும் நண்பர்களாகவும், சந்திரன், செவ்வாய் இருவரும் சமமானவர்கள் என்ற நிலையையும் பெறுகின்றார்கள். சுக்கிரன் மூலத்திரிகோணம் அடையும் இராசி.

11ஆம் இடம் பாதகஸ்தானம் என்பதால் அதன் அதிபதியான சூரியன் பாதகாதிபதியாகின்றார். 2, 7 ஆகிய இடங்கள் மாரகஸ்தானம் என்பதால் அந்த ஸ்தானங்களின் அதிபதியான செவ்வாய் மாரகாதிபதியாகின்றார். தராசு சின்னம் கொண்ட துலாம் இரு கால் இராசியாகும். ஆங்கிலத்தில் இது ‘‘லிப்ரா’’ (Libra) என்று பெயர் பெறும் இது கடை வீதிகளை இருப்பிடமாகக் கொண்டது.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் துலாம் இலக்கினத்தில் பிறந்தவர்களைப்பற்றி, துலாமில் பிறந்தவன் சோர்வடைந்து, இளைத்து இருப்பவன் போன்ற தோற்றம்[82] உடையவனாகவும், குறைந்த

அளவிலான பிள்ளைகளை உடையவனாகவும், தெய்வகாரியங்கள் செய்வதில் விருப்பமுடையவனாகவும், பிராமணார், மகான்களிடமும் பக்தியும், மரியாதையுடையவனாகவும், அதிகமாக வெளியில் சுற்றும் சுபாவமுடையவனாகவும், இரண்டு பெயர்கள் உள்ளவனாகவும், உயரமானவனாகவும், வாங்கல், விற்றல் போன்ற வியாபாரங்களில் வல்லவனாகவும், தைரியசாலியாகவும், தயவற்றவனாகவும், எதிலும் நடுநிலை வகித்துப் பேசுபவனாகவும் இருப்பான் என்று கூறப்பட்டுள்ளது.

துலாமில் குரு இருந்தால் அசாதாரண துணிச்சல் இருக்கும். எவருக்கும் பயப்படமாட்டார்கள். நல்ல விஷய ஞானம் உள்ளவர்கள். மற்றவர்களின் பலத்தை அறிந்து அதை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்வார்கள்.

எதிலும் சுயநல நோக்குடன் தான் இருப்பார்கள். பொதுச்சேவையில் ஈடுபாடு இருந்தாலும் அதையும் ஆதாயக் கண்ணோட்டத்துடன் தான் செய்வார்கள். தங்களின் சுயநலச் செய்கையால் பலரின் விரோதங்களைச் சம்பாரித்து பகைவர்களை உருவாக்கிக் கொள்வார்கள். ஆனால் அவர்களை சமாளித்து வெற்றியும் காண்பார்கள்.

இருக்கும் இடத்திலிருந்தே மற்றவர்களைக் கொண்டு காரியம் சாதித்துக்கொள்வார்கள். மற்றவர்கள் பணத்திலேயே செலவுகளையும் முடித்துக்கொள்வார்கள். தன் கைக்காசு செலவழிப்பதில் மிகவும் தயங்குவார்கள். பெரிய மனிதத்தோரணை இருப்பதால் இவர்களால் எதையும் சாதிக்கமுடியும். எங்கு கடன் கிடைத்தாலும் வாங்கி அசையாச் சொத்தில் தன் பேரில் இல்லாமல் நம்பிக்கையானவர் பேரில் சேர்த்து விடுவார்கள். கடனையும் சரிவர அடைக்கமாட்டார்கள். இழுத்தடித்துவிடுவார்கள்.

இவர்களுக்கு முழுயோகம் அளிப்பது சனிபகவான் தான், இவர்களின் வாழ்வின் ஒளிர்விக்கும் சனியே தான். 4, 5க்குடைய சனி துலாமில் உச்சம் பெறும்போது இவர்களின் வாழ்க்கை உயரும். செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து, புகழ் அனைத்தையும் அளிப்பார். முன்பு புதனுக்கு கூறப்பட்டவைகளை விடவும் உயர்ந்த நிலையில் இவர்களை வைப்பார். நல்ல வசதியான பெரிய வீடுகளில் வசிக்கும்

வாய்ப்பு, பணியாட்கள், வாகனவசதி, நிலம், புலம் போன்றவற்றையும் வழங்குவார். புகழ் இவர்களை நாடி வரும்.

இது ஒரு ஆண் இராசி. இதன் அதிபதி சுக்கிரன் பெண் கிரகம். பஞ்சமாதிபதி சனி அலிக்கிரகம். துலாமிற்கு குரு 3, 6க்குடைய ஆதிபத்தியம் பெற்றவர். குரு 3ஆம் இடமான வீரிய ஸ்தானத்திற்கு உரிய குரு, சனி என்ற அலிகோளின் உச்ச வீட்டிற்கு வரும்பொழுது காம உணர்ச்சிகள் அதிகமானாலும், அதில் வெளிப்படுகின்ற உயிர்அணுக்கள் குறைவாகவே இருக்கும். சுக்கிரனின் வீடு என்பதால் அதிகநேரம் போகத்தில் ஈடுபடுவார்கள்.

1) இராசிநாதன் சுக்கிரன் என்பதால், சுக்கிரன் பலமாக இருந்து ஆண் இராசியில் அமர்ந்தால் ஆண்+அலி+பெண் கிரகசேர்க்கை ஏற்படுவதால் ஆண் குழந்தைகள் மிகக்குறைவாகப் பிறக்கும்.
2) சுக்கிரன் வலுவாகி பெண் இராசியில் இருந்தால் பெண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும்.
3) குரு பார்வை 5ஆம் இடத்திற்கு இலக்கினாதிபதிக்கு, பஞ்சமாதிபதிக்கு கிடைக்கும் பொழுது ஆண், பெண் குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறக்கும்.
4) பெண் கிரகமான சுக்கிரன் குருவுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் கிடைக்கும்.
5) ஆண் கிரகங்களான செவ்வாய், சூரியன் குருவுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஆண் குழந்தைகள் கிடைக்கும்.
6) அலிக்கிரகமான சனி, புதன், கேது சேர்ந்தாலும், இராகு சேர்ந்தாலும் குழந்தைகள் பிறந்து இறக்கும் அல்லது குறைபிரசவம் ஏற்படும். பெண் குழந்தை சிறிது ஊனத்துடன் வைத்தியத்தால் கிடைக்கும்.

1.14.8. விருச்சிகம்

ஸ்திர இராசி, உக்கும இராசி, பெண் இராசி, பாப இராசி, இரட்டைப்படை இராசி என்றழைக்கப்படும் 8ஆவது இராசியான விருச்சிகம் பிறப்புறுப்பு சம்மந்தப்பட்ட பகுதிகளைக் குறிக்கும். இதன் ஆட்சியாளர்

செவ்வாய். இராகு, கேது இருவரும் இந்த இராசியில் உச்சம் பெறுவார்கள். சந்திரன் இந்த இராசியில் நீசம் பெறுகிறார்.

சூரியன், குருவுக்கு விருச்சிகம் நட்பு வீடாகும். சுக்கிரன், புதன் இருவரும் சமம் என்ற நிலையையும், சனி இந்த வீட்டில் பகை என்ற நிலையையும் பெறுகின்றார்கள். சூரியன், சந்திரன், குரு மூவரும் விருச்சிகத்துக்கு சுபராகின்றார்கள். சூரியனும், குருவும் யோகர்களாகவும், புதன், சனி, இராகு, கேது ஆகிய நால்வரும் இலக்கினப் பகைவர்களாகவும், சுக்கிரன் சமமானவர் என்ற அந்தஸ்தையும் பெறுகின்றார். இலக்கின அதிபர் செவ்வாயே இந்த இலக்கினத்திற்குப் பகைவராகின்றார்.

3, 8 ஆகிய இடங்கள் மாரகஸ்தானம் என்பதால் அதன் அதிபதிகளான சனி, புதன் இருவரும் மாரகாதிபதிகளாகின்றார்கள். 9ஆம் இடம் பாதகஸ்தானம். அதன் அதிபதி சந்திரன் தேய்பிறை சந்திரனாகவும், அசுப ஸ்தானங்களான 3, 6, 8, 12 ஆகிய இடங்களில் இருந்தால் பாதகத்தன்மையை அளிப்பார். வளர்பிறைச் சந்திரனாகவோ, சுப ஸ்தானங்களான 5, 9 ஆகிய இடங்களில் இருந்தால் பாதகத்தன்மையை அளிக்கமாட்டார். 1ஆம் இடமான இலக்கினத்தில் நீசம் பெறுபவர் என்பதால், வளர்பிறைச் சந்திரனாக இருந்து நீசபங்கம் பெற்றால் மட்டும் தான் நன்மையை அளிப்பார். தேளை சின்னமாகக் கொண்டது. ஆங்கிலத்தில் ‘‘ஸ்கார்பியோ’’ (Scorpio) என்ற பெயர் பெறும் இது சந்து, பொந்து, இடுக்குகளை இருப்பிடமாகக் கொண்டது.

பிறப்புறுப்பு பகுதியைப் பற்றிக் குறிப்பிடுவதால் ஆண்குறி, விரைகள், பெண்குறி, கர்ப்பப்பை, மாதவிடாய் எனப்படும் மென்சஸ் சம்மந்தப்பட்ட வியாதிகள் ஏற்படக்கூடும். இந்த இராசியில் பிறந்த ஆண், பெண் இருவருக்குமே மற்ற இராசிக்காரர்களைவிட காம உணர்வு சற்று அதிகமாக இருக்கும். மிதமாக சாப்பிடுபவர்கள் என்றாலும் எப்போதும் எதையாவது மென்று கொண்டே இருக்கவேண்டும் என்று எண்ணுபவர்கள். மகோதர வயிறு என்பார்கள். அதாவது ஓநாய் வயிறு போல் சிறிதாக இருந்தாலும் எப்போதும் பசித்திருக்கும்.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் விருச்சிகத்தில் பிறந்தவன் வட்டமானதும், பெருத்ததுமான பின்னங்கால்களையுடையவனாகவும், விசாலமான கண், மார்பு[84] உடையவனாகவும், வியாதியுள்ளவனாகவும், சிறு வயதிலேயே குரு, தகப்பனை இழந்தவனாகவும், கொடூரமான காரியங்கள் செய்பவனாகவும், இராஜ வம்சத்தின் ஆதரவு உள்ளவனாகவும், பத்மரேகையினால் அடையாளம் செய்யப்பட்ட கை, கால்களை உடையவனாகவும் இருப்பான் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எப்போதும் பெண்கள் நினைப்பே இருக்கும். நல்ல உழைப்பாளிகள், திறமைசாலிகள் என்றாலும் தங்களின் அலட்சியத்தாலும், முன்கோபத்தாலும் வாய்ப்புகளைக் கெடுத்துக் கொள்வார்கள். சம்பாத்திய வலிமையுள்ளவர்கள்தான், எனினும் தாராளமாக செலவு செய்வார்கள். எதிலும் உறுதியான பிடிப்பில்லாமல் அடிக்கடி எண்ணங்களை மாற்றிக் கொள்வார்கள். மற்றவர்களைப் பேசவிடாமல் இவர்களே அதிகம் பேசுவதுடன் தங்களின் கருத்தே சரியானது என்று வலியுறுத்துவதுடன், அவர்கள் மேல் திணிக்கவும் செய்வார்கள்.

விருச்சிகத்தில் குரு இருப்பவர்கள் கௌரவம் பார்ப்பார்கள், இல்லையென்றாலும் வீம்பாகக் கடன் வாங்கி செலவு செய்தாவது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வார்கள். தங்களால் முடியாத காரியங்களையும் வீம்புக்காகச் செய்வதாக வாக்களித்துவிட்டு, அதை நிறைவேற்ற சிரமப்பட்டாவது வாக்கைக் காப்பாற்றுவார்கள்.

எப்போதும் இவர்களுக்கு தேவை அதிகமாகவே இருக்கும். காரணம் குரு பெரிய மனிதர் என்பதால் இவர்களை எப்போதும் பெரிய மனிதர் என்ற நிலையிலே வைத்திருப்பார். கீழே இறங்கவே விடமாட்டார். 5ஆம் இடத்தை இவர் பார்ப்பதால் புகழ், கௌரவத்தை தானாக அளித்துவிடுவார். அதே சமயம் 2க்கு அதிபதியாகி 12ஆம் இடத்தில் இருப்பதால் தனவிஷயங்கள் சரளமாக இருப்பதே இல்லை. பற்றாக்குறையை உருவாக்கிவிடுவார்.

பொதுச்சேவை, அரசியல் தொடர்புகள், உயர் பதவிகள் இருந்தாலும் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள். கௌரவம் இதற்கு குறுக்கே நிற்கும். அதே சமயம் ஈகை, தர்மகுணம், பிறருக்கு உபகாரம்

செய்ய வேண்டுமென்ற எண்ணம் இரத்தத்திலேயே ஊறி இருக்கும். எனவே அதையும் விடவே முடியாது. தன் வரவுகளையும் சரியாகவே அளிக்கமாட்டார். இவர்களை குரு படாதபாடுபடுத்தி விடுகிறார். ஆயினும் எந்த நிலையிலும் தங்கள் பிரச்சனைகளை எவரிடமும் வெளிப்படுத்தவும் மாட்டார்கள். எவரிடமும் சட்டென்று உதவி செய்யுமாறு கேட்கவும் மிகவும் தயங்குவார்கள்.

கடன் வாங்குவது என்பதே கௌரவக்குறைவு என்று நினைக்கும் இவர்களை குரு மறைமுகமாக கடனாளியாக்கி விடுகின்றார். விருச்சிக இலக்கின குரு இவர்களை இரண்டும் கெட்டானாக வைத்துவிடுகின்றார். தொழில் வகையிலும் இவர்கள் இறங்கி தாங்களாகவே செய்ய முடியாது. அடுத்தவர்களைக் கொண்டே தான் தங்களின் தொழிலை நடத்தவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கி இவர்களை சோம்பேறிகளாக்கி விடுகின்றார்.

இது ஒரு பெண் இராசி, நீர் இராசி, இதன் அதிபதி செவ்வாய் ஒரு ஆண் கிரகம், உஷ்ண கிரகம். 5க்குடையவனே குருவாக வருகிறார். 5ஆம் அதிபதி, காரகன் என்ற இரு நிலைகளைப் பெறுவதால் குழந்தைப் பிறப்பிற்கு மிக முக்கியமானவராக செயல்படுகிறார். பெண் இராசியில் நட்பு பெற்று அமையும் பொழுது செவ்வாயின் வீடு. எனவே வீரியம் அதிகமாக இருக்கும். உஷ்ண கிரகம் செவ்வாய் வீடு. எனவே விரைவில் விந்து வெளியேறிவிடும். விந்தில் உயிர் அணுக்கள் அதிகமாக இருக்கும். அதனால் அதிக ஆண் குழந்தைகள் கிடைக்கும். சில பெண் குழந்தைகளும் உண்டு.

1) குரு ஆண் இராசியில் அமர்ந்தால் ஆண் குழந்தைகள் பிறக்கும்.
2) குரு பெண் இராசிகளில் அமர்ந்தால் பெண் குழந்தைகள் அதிகம் பிறக்கும். ஆண் ஒன்று பிறக்கும்.
3) செவ்வாய் வலுவாக அமர்ந்து குருவுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஆண் குழந்தைகள் பிறக்கும்.
4) குருவை சூரியன் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஆண் குழந்தைகள் பிறக்கும். 8½ டிகிரியில் அஸ்தங்கம் ஆனால் குழந்தைகளுக்கு குறைபாடு ஏற்படும்.

5) குருவை சந்திரன், சுக்கிரன் போன்ற பெண் கிரகங்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும் பெண் குழந்தைகள் பிறக்கும். நல்ல ஆரோக்கியமான குழந்தைகள் கிடைக்கும்.
6) குருவை கேது, புதன், சனி போன்ற அலிக்கிரகம், இராகு சேர்ந்தாலும் பெண் குழந்தை பிறக்கும். குறைபாடு உள்ள குழந்தைகள் பிறக்கும். வைத்தியம் செய்து பிறக்கும்.

1.14.9. தனுசு

உபய இராசி, ஓஜை இராசி, ஆண் இராசி, சௌம்ய இராசி(சுப இராசி), ஒற்றைப்படை இராசி என்று அழைக்கப்படும் 9ஆவது இராசியான தனுசு இராசி ஓர் உயர்ந்த இராசியாகும். முழுச்சுபர்[85] எனப்படும் குருவை ஆட்சியாளராகக் கொண்ட இந்த இராசி தொடை பகுதியைப் பற்றிக் குறிப்பிடும். ஆட்சியாளரான குரு இந்த இராசியில் மூலத்திரிகோண வலிமையையும் பெறுகின்றார். இந்த இராசியில் எந்தக் கிரகமும் பகையோ, நீசமோ பெறுவதில்லை என்பது இந்த இராசிக்கு விசேஷ சிறப்பாகும்.

மற்ற அனைத்து ராசிகளிலும் பகையோ, நீசமோ, உச்சமோ கிரகங்களுக்கு உண்டு. ஆனால் எந்தக் கிரகமும் இந்த இராசியில் பகை என்ற நிலையைப் பெறுவதில்லை என்பதே தனுசுக்கு உள்ள பெருமையாகும். சூரியன், செவ்வாய் இருவரும் இந்த இராசியில் நட்பு என்ற நிலையையும், இராகு, கேது இருவரும் கூட நட்பு என்ற நிலையையே பெறுகின்றார்கள். சந்திரன், புதன், சுக்கிரன், சனி ஆகிய நால்வரும் சமம் என்ற நிலையைப் பெறுகின்றார்கள்.

இந்த இராசி எந்தக் கிரகத்தையும் பகையாக எண்ணுவதில்லை. செவ்வாயும், சூரியனும் இந்த இலக்கினத்துக்கு சுபரும், யோகருமாகின்றார்கள். சூரியன் முழுசுபர் என்ற அந்தஸ்தைப் பெறுகின்றார். இலக்கின அதிபதியான குரு சுபர் என்ற அடிப்படையில் அவர் கேந்திரஅதிபதியும் என்பதால், தனுசு இலக்கின கேந்திரத்தை தவிர மற்ற கேந்திரங்களில் இருந்தால் அவருக்கு கேந்திராதிபத்திய தோஷம் ஏற்படும். இதனால் அவரின் வலிமை குறையும்.

தனுசுக்கு எந்தக் கிரகமும் பகை இல்லை. 7, 11ஆம் இடங்கள் மாரகஸ்தானம் என்பதால் அதன் அதிபதிகளான புதன், சுக்கிரன் இருவரும் மாரகாதிபதிகளாகின்றார்கள். 7ஆம் இடம் பாதகஸ்தானம் என்பதால் அதன் அதிபதி புதன் பாதகாதிபதியாகின்றார். புதன், சுக்கிரன் இருவரும் தனுசு இராசியில் சமம் என்ற நிலையைப் பெற்று பகைவர் இல்லையென்றாலும், இந்த இலக்கினத்துக்கு அவர்கள் இருவரும் பாபர்கள் என்ற நிலையைப் பெறுகின்றார்கள்.

கையில் அம்பு பூட்டிய வில்லை வைத்திருக்கும் இது இடுப்பு வரை மனிதஉடலும், அதற்கு கீழ் குதிரை உடலையும் சின்னமாகக் கொண்டது என்றாலும், பெரும்பாலும் வில்லையும், அம்பையுமே சின்னமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். வேகத்தையும், வீரத்தையும் குறிக்கும் இந்த இராசி ஆயுத சாலைகளை இருப்பிடமாகக் கொண்டது. ஆயுதப் பயிற்சி செய்யும் மைதானம் என்றும் சொல்வதுண்டு. ஆங்கிலத்தில் 'சாகிடாரஸ்' (Sagitaras) என்று அழைக்கப்படும் இது நாற்கால் இராசியாகும்.

'பலதீபிகை' என்னும் மூலநூலில் தனுசுவில் பிறந்தவர்களைப் பற்றி தனுசுவில் பிறந்தவன் நீண்ட கழுத்து, முகம் இவற்றையுடையவனாகவும், பெருத்த காது, மூக்கு[86] உள்ளவனாகவும், காரியங்களில் முயற்சி செய்பவனாகவும், கூனலான உடல் அமைப்பு உள்ளவனாகவும், அரசனுக்கு வேண்டியவனாகவும், தைரியமுள்ளவனாகவும், கொடையாளியாகவும், எதிரிகளை நாசம் செய்பவனாகவும், அன்பாகப் பேசுவதால் மட்டுமே வசப்படுத்த தகுந்தவனாகவும், பலம் பொருந்தியவனாகவும் இருப்பான் என்று கூறப்பட்டுள்ளது.

இலக்கின அதிபதியான குரு இலக்கினத்தில் இருக்கும் போது பெரிய மனிதத் தோரணை தானாகவே ஏற்பட்டுவிடும். மற்றவர்கள் இவர்களின் தோற்றத்தினாலேயே ஈர்க்கப்பட்டு பயம் கலந்த மரியாதையுடன் தொடர்பு கொள்வார்கள். இவர்களின் வார்த்தைக்கு பலரும் கட்டுப்படுவார்கள். இவர்கள் சற்று சோம்பல் உடையவர்கள் தான். இவர்களே சென்று கவனிப்பதைவிட, மற்றவர்களை ஏவி தேவையானவைகளைச் செய்யவைத்து விடுவார்கள்.

பெரும்பாலும் இவர்களுக்கு பெண் குழந்தைகள் அதிகம் ஏற்படக்கூடும். பிள்ளைகளை விட பெண்களின் மேல் தான் பாசம் அதிகமாக இருக்கும். மகள்கள் எது கேட்டாலும் கொடுத்துவிடுவார்கள். பிள்ளைகளுக்கு கொடுப்பதில் கஞ்சத்தனம் செய்வதுடன், அவர்களுடன் எப்போதும் பிரச்சினைகளை தேவையில்லாமலே வளர்த்துக் கொள்வார்கள். அவர்களின் சிறுதவறுகளும ் கூட பூதாகாரமாகத் தோன்றுவதுடன் சுட்டிக்காட்டிக்கொண்டே இருப்பார்கள்.

தனுசில் குரு ஆட்சி பெரும்பொழுது தொழிலில் வலிமையான நிலையைப் பெற்றுவிடுவார்கள். வாழ்க்கையின் சகல வசதிகளையும் பெற்றுவிடத் துடிப்பவர்கள். அதிகம் உடலுழைப்பு இல்லாத தொழிலையே மேற்கொள்வார்கள். தாங்கள் செயல்படுவதைவிட மற்றவர்கள் மூலம் பணிகளை முடித்துக் கொள்வார்கள் என்றாலும் அனைத்தையும் தன் கண்காணிப்பில் வைத்துக்கொள்வார்கள். எளிதில் ஏமாறமாட்டார்கள். மிகவும் எச்சரிக்கையானவர்கள்.

வீட்டில் நிச்சயம் மனைவியின் ஆதிக்கம் இருக்கும் என்றாலும் மனைவியையும் ஏமாற்றி மற்ற பெண்களுடன் தொடர்பு கொள்வார்கள். சற்றே அதிகமான காம உணர்வு இருப்பதுடன் காமக்கலையில் வல்லவர்களாகவும் நல்ல கலாரசனையும், கலைகளில் பரிச்சயம் உடையவர்களாகவும், கணிதத்திலும், ஜோதிடத்திலும் பரிச்சயம் அல்லது நிபுணத்துவம் உடையவர்களாகவும் இருப்பார்கள். சின்ன விஷயத்துக்கும் கணக்குப் பார்ப்பார்கள். எதிலும் கருத்தாகவும், கறாராகவும் இருப்பார்கள்.

வியாபாரம் அல்லது தொழிலில் கெட்டிக்காரர்கள். தங்களின் வேலைகளைச் சட்டென முடித்துவிட்டு பொழுதுபோக்குகளில் இறங்கிவிடுவார்கள். பேச்சில் வெகு கெட்டிக்காரர்கள். மற்றவர்களை பேசவிடாமல் தாங்களே பேசுவார்கள். பேச்சும் சாதுர்யமாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்கும். தங்களால் முடியாதது எதுவுமே இல்லை என்று கூறுவார்கள்.

இது ஒரு ஆண் இராசி. அதிபதி வியாழன். ஆட்சி நாதனாகவும், காரகனாகவும் இருப்பதால் குருவுக்கே அதிக அதிகாரம் உள்ளது. 5க்குடையவன் ஆண் வீரியமான கிரகமான செவ்வாய். எனவே ஆண் தத்துவம் அதிகமான இராசி. எனவே வீரியம் அதிகமாகி உயிர்

அணுக்கள் அதிகமாக உற்பத்தியாகும். சம்போகம் அதிக நேரம் நீடிக்கும்.

1. இலக்கினாதிபதி குருவாகி ஆட்சி, மூலத்திரிகோணம் பெற்றதால், 5ஆம் இடமான செவ்வாயுடைய வீட்டைப் பார்ப்பதால், செவ்வாய் பலமானால் ஆண் குழந்தைகள் அதிகம் பிறக்கும்.
2. சூரியன் 9க்குடையவன் குருவால் பார்வை பெற்றாலும் ஆண் குழந்தைகளே அதிகம் பிறக்கும்.
3. சந்திரன், சுக்கிரன் போன்ற பெண் கிரகங்கள் குருவைப் பார்த்தாலும், சேர்ந்தாலும் ஆண் குழந்தையும், பெண் குழந்தையும் அதிகமாகப் பிறக்கும்.
4. குரு சனி, இராகு, கேது, புதன் போன்ற அலிக்கிரகங்கள் பார்வை செய்தால் குழந்தைகள் குறைவாகவும், குறைப்பிரசவமும், ஊனமுற்ற குழந்தைகளும் பிறக்கும்.

1.14.10. மகரம்

சர இராசி, உக்கும இராசி, பெண் இராசி, குரூர(பாப)இராசி, இரட்டைப்படை இராசி எனறழைக்கப்படும் 10ஆவது இராசியான மகரம் 12 இராசிகளிலும் தனிச்சிறப்பைக் கொண்டது.[87] முழு பாபர் என்றழைக்கப்படும் சனியின் ஆட்சி வீடாக மகரம் இருந்தாலும் இது புனிதமான இராசி என்று அழைக்கப்படுகிறது. சர இராசிகளில் கடகத்துக்கு அடுத்தபடியான இடத்தைப் பெற்றாலும் கடகத்துக்கு இணையாகவும், இன்னும் சொல்லப்போனால் அதைவிட மேலான ஒரு சிறப்பையும் பெற்றுள்ள இராசி.

மாதங்களில் சிறப்பான மாதம் தை மாதமாகும். தை மாதம் 1ஆம் தேதி முதல் சூரியன் தென்திசை சஞ்சாரத்தை வடக்கு நோக்கித்திருப்பி உத்திராயண புண்ணிய காலத்தைத் தொடங்குகிறார். அந்த புண்ணிய காலத் தொடக்கம் இந்த இராசியில் தான் நிகழ்கின்றது. சூரியன் மகர இராசியில் பிரவேசம் செய்வது தான் தை 1ஆம் நாள். அன்று சூரியனுக்குப் பொங்கல் வைப்பது தமிழகத்தின் தனிச்சிறப்பாகும். மகர சங்கராந்தி என்ற அகில இந்திய பண்டிகையும் இந்த மகர இராசியின் துவக்கத்திலேயே தான் கொண்டாடப்படுகின்றது.

சனியின் ஆட்சி வீடான இது செவ்வாய் உச்சம் பெரும் நிலையையும், குரு நீசம் பெரும் நிலையையும் உருவாக்குகின்றது. புதன், சுக்கிரன், இராகு, கேது ஆகிய நால்வருக்கும் நட்பு வீடாகவும், சூரியன், சந்திரன் இருவருக்கும் பகை வீடாகவும் அமைகின்றது.

இந்த மகர இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரன், புதன் இருவரும் சுபர்களாகவும், சுக்கிரன் முழுயோகராகவும், புதன் அரை யோகராகவும் செயல்படுகின்றார்கள். இராகு, கேது இருவரும் நண்பர்களாகவும், சந்திரன், குரு இருவரும் சமமானவர்களாகவும், சூரியன் பகைவராகவும் செயல்படுகின்றார்கள்.

2, 7ஆம் இடம் மாரகஸ்தானம் என்பதால் அதன் அதிபதிகளான சனி, சந்திரன் இருவரும் மாரகாதிபதிகளாகின்றார்கள். 11ஆம் இடம் பாதகஸ்தானம் என்பதால் அதன் அதிபதியான செவ்வாய் பாதகாதிபதியாகின்றார். மான்(அ)குதிரை முகமும், முதலை உடலையும் உடைய இது கடற்குதிரை அல்லது மகரமீன் என்று அழைக்கப்படுவதை சின்னமாகக் கொண்டது. ஆங்கிலத்தில் “கேப்ரிகார்ன்” (Capricorn) என்றழைக்கப்படும்.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் மகரத்தில் பிறந்தவர்களைப் பற்றி மகரத்தில் பிறந்தவன் இடுப்புக்குக் கீழ் இளைத்தவனாகவும், பலம் உடையவனாகவும்,[88] உபதேசங்களை கிரகிப்பவனாகவும், பாக்கியமுள்ளவனாகவும், வெளியில் அலைபவனாகவும், வாயுத்தொல்லைகளால் பாதிக்கப்படுபவனாகவும் இருப்பான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் ஆட்சியாளரான சனி மகரத்தில் இருக்கும் போது அவரின் இயற்கை குணமான மந்த குணத்தை இயற்கையாகவே அளித்துவிடுவார். எதையும் நிதானப் போக்குடன் யோசித்து ஆராய்ந்தே செய்வார்கள். ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது என்று எச்சரிக்கையாக இருப்பவர்கள். அக்கம் பக்கத்தில், சுற்றுப்புறத்தில் பிரளயமே ஏற்பட்டாலும் நமக்கென்னவென்று ஒதுங்கியே இருப்பார்களேயன்றி என்ன, ஏது என்று ஓடிப்போய்க் கவனித்து எதுவும் செய்ய மாட்டார்கள்.

என்ன நடந்தது என்று சாவகாசமாக கேட்டு அறிந்து கொள்வார்கள். அவ்வளவே! பொது நலத்துக்கோ, பொதுச்சேவைக்கோ

ஒரு துரும்பையும் தூக்கிப்போடாதவர்கள். வீட்டில் எது நடந்தாலும் சிடு, சிடுப்பார்களேயன்றி என்ன, ஏது என்று தலையிடமாட்டார்கள். வீட்டுப் பொறுப்புகள் யாவும் மனைவியிடம் விட்டுவிட்டு ஹாயாக ஒதுங்கிக் கொள்வார்கள். குறிப்பிட்ட அளவுக்கு மேல் செலவு ஏற்பட்டாலும் அதைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள். எப்படியோ மனைவியே சமாளிக்கட்டும் என்று கவலையேபடாதவர்கள். சரியான கல்லூளிமங்கர்கள்.

காமத்தில் மட்டும் மன்னர்கள். மனைவி சுகம் தினம் தேவை. மனைவி சுகம் மட்டும் இவர்களுக்கு போதுமென்று கூறிவிடமுடியாது. பிற பெண்களின் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்வார்கள். இரவில் உடல் இன்பத்துக்காக மனைவியின் காலைக்கூட பிடிக்கவைப்பார். பித்த ஆதிக்கமுள்ள உடம்பு என்பதால் காமஉணர்வு அதிகம். பிற பெண்களின் தொடர்பை ஏற்படுத்தவும் தயங்கமாட்டார். அதற்காக செலவு செய்ய விரும்பாத இவர்களை செலவு செய்யவும் வைப்பார். எதிலும் அவசரமும், அலட்சியமும், ஆத்திரத்தையும் ஏற்படுத்துவார்.

மிகவும் அதிகமான காமஉணர்வுள்ளவர்கள். பெண்களை மிகவும் முரட்டுத்தனமாகக் கையாளுவார்கள். உடல் உறவில் திருப்தி காணமுடியாதவர்கள் என்பதால் அதிகமான பெண்கள் தொடர்பினால் நரம்புத்தளர்ச்சி, பெண்கள் தொடர்பான வியாதிகள் சுலபமாக இவர்களைத் தாக்கும். மனைவியைக் கொடுமைப்படுத்துவதுடன், சித்திரவதை செய்து இரசித்து மகிழ்பவர்களும் உண்டு.

மகரத்தில் நீச நிலையில் உள்ள குருவால் ஜாதகர் சோம்பல் உடையவர்கள், எதையும் தள்ளிப்போடும் குணமுடையவர்கள். அலட்சியம் அதிகமாக இருப்பதால் வாய்ப்புக்களை நழுவி விட்டுவிடுவார்கள். தற்பெருமை பேசுவார்கள். தங்களால் அனைத்தையும் செய்யமுடியும் என்று பீற்றிக்கொள்வார்கள். ஆனால் எதையும் கச்சிதமாகத் தவறில்லாமல் செய்யவே முடியாமல் குழப்பிவிடுவார்கள்.

ஆரம்பத்தில் இருக்கும் சூரத்தனம் சட்டென்று குறைந்துவிடும். உடல் உறவில் கூட பெரிதாக சாதித்துவிடுபவர்கள் போல இறங்குவார்கள். சிறிது நேரம்கூட செய்யமுடியாமல் விந்துவை வெளியிட்டுவிடுவார்கள். திருப்தியில்லாததால் மறுபடியும் ஈடுபடுவார்கள். இவர்களின் காமஉணர்வின் நச்சரிப்பை மனைவி தாங்கமுடியாமல் நழுவிக்கொள்வதுண்டு. அதனால் கிடைக்கும் பெண்கள் எதுவாக இருந்தாலும் அழகோ, வயதோ எதுவும் பார்க்காமல் உடல் உறவு

கொள்வார்கள். சம்பாத்தியத் திறமையும் குறைவாகவே இருக்கும். சிறு வேலைகளுக்கும் கூட மற்றவர்கள் தயவையே எதிர்பார்ப்பார்கள். மெதுவாகவே காரியங்களைச் செய்வார்கள். சம்பாத்தியக் குறைவால் செலவினங்களை சமாளிக்க முடியாமல் திணறுவார்கள்.

மகரம் ஆண் இராசி. இதன் அதிபதி சனி அலிக்கிரகம். 5க்குடைய சுக்கிரன் பெண் கிரகம். 3, 12க்குடைய குரு மகரத்தில் நீசம் பெற்றால் குழந்தைகள் பிறக்காது. நீசபங்க இராஜயோகம் பெற்றால் பெண் குழந்தைகளே குறைவாகப் பிறக்கும். விந்தணுக்கள் குறைவாகவே உற்பத்தி ஆகும். பெண்ணின் ஜாதகமோ, ஆணின் ஜாதகமோ குழந்தைப் பேற்றிற்கு தோஷம் ஏற்படில் குழந்தை பிறப்பது அபூர்வம்.

1) சுக்கிரன் ஆட்சி, உச்சம், நட்பு பெற்று பலமானால் பெண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கலாம். நவீன வைத்தியம் செய்ய ஜாதகருக்குக் குழந்தை பிறக்கும்.
2) குருவை செவ்வாய், சூரியன் பார்த்தாலும், சேர்ந்தாலும் ஆண் குழந்தைகள் கிடைக்கும்.
3) குருவை சந்திரன் பார்வை செய்தாலும், சேர்ந்தாலும் பெண் குழந்தைகளும் குறைவாகவேப் பிறக்கும்.
4) குருவை சனி, இராகு, புதன், கேது போன்ற கிரகங்கள் பார்த்தாலும், சேர்ந்தாலும் குறைப்பிரசவம், குழந்தையின்மை, நவீன வைத்தியத்தின் மூலம் ஒரு பெண் குழந்தை கிடைக்கலாம்.

1.14.11. கும்பம்

ஸ்திர இராசி, ஓஜை இராசி, ஆண் இராசி, குரூர(பாப)இராசி, ஒற்றைப்படை இராசி என்று அழைக்கப்படும் 11ஆவது இராசியான கும்பம் ஸ்திர இராசிகளிலேயே கடைசியாக[89] நிற்பது. மாதங்களில் மாசி மாதத்தைக் குறிக்கும். இந்த மாதத்தில் சூரியன் சஞ்சரிக்கும் போது மாசிமகம் எனும் திருவிழா 12 வருடங்களுக்கு ஒரு முறை குரு சிம்ம இராசியில் இருக்கும் போது மகம் நட்சத்திரத்தில் கும்பகோணத்தில் நடைபெறும்.

வடக்கே கும்பமேளா எனும் திருவிழாவும் நடக்கும். சனியை ஆட்சியாளராகக் கொண்ட இந்த இராசியே அவருக்கு மூலத்திரிகோண பலத்தையும் அளிக்கின்றது. இந்த இராசியில் எந்தக் கிரகமும் உச்சமோ, நீசமோ அடைவதில்லை. எனவே எப்போதும் ஒரே சீரான பலன்களையே

அளிக்கும். சனி இதன் ஆட்சியாளர். புதன், சுக்கிரன், இராகு, கேது ஆகியவர்கள் இந்த இராசியில் நட்பு பெறுகின்றனர்.

இராகு, கேது இருவரும் கும்பத்தில் பகை என்று சில பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது மாபெரும் தவறு. சனிக்கு நெருங்கிய நண்பர்களான இராகுவும், கேதுவும் மகரத்தில் நட்பு நிலையைப் பெறும்போது, சனியின் மற்றொரு வீடான கும்பத்தில் பகை எனும் நிலையைப் பெறமுடியாது. எனவே கும்பத்தில் இராகு, கேது இருவரும் நட்பு நிலையைப் பெறுவது தான் சரியானது. சூரியன் பகை என்னும் நிலையையும், குரு, சந்திரன், செவ்வாய் சமம் என்னும் நிலையையும் பெறுகின்றார்கள்.

கும்பத்தின் ஆட்சியாளர் சனி என்ற போதிலும் அவர் 12ஆம் இடமான மகரத்துக்கும் ஆதிபத்தியம் பெறுவதால் அவர் கும்பத்துக்கு பாபராகின்றார். சூரியன், சந்திரன், இராகு, கேது நால்வரில் புதன், சுக்கிரன் இருவரும் சுபர்கள். அதில் சுக்கிரன் முழுச்சுபர், முழுயோகர். புதன் அரை யோகர், அரை சுபர் ஆவார் குரு சமத்துவம் பெற்றவராவார். செவ்வாய் சமம் பெற்றாலும் அவர் இலக்கின பாபராகவே ஆகின்றார்.

நீர் நிறைந்துள்ள குடத்தைச் சின்னமாகக் கொண்டது. நிறை குடம் தளும்பாது எனும் பழமொழியைப் போல் ஆர்ப்பாட்டங்கள் இல்லாமல் அமைதியாக உள்ள இராசியாகும். கழிவுநீர் தங்கும் இடங்கள், குப்பைத்தொட்டி அல்லது குப்பைக்குழி, தொழிற்சாலைகள் ஆகியவற்றை இருப்பிடமாகக் கொண்டது. ஆங்கிலத்தில் ‘அக்கியூரியஸ்’ (Aqurius) என்றழைக்கப்படும்.

கணுக்காலை குறிப்பிடும் இந்த இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மூட்டுவலி, மூட்டு வாதம், வாயுக்கோளாறுகள், அஜீரணம், கல்லீரல் கோளாறுகள், பித்த சம்மந்தமான நோய்கள், நரம்புத்தளர்ச்சி, வலிப்பு, ஜன்னி போன்ற நோய்கள் ஏற்படக்கூடும்.

‘பலதீபிகை’ என்னும் மூலநூலில் கும்பத்தில் பிறந்தவர்களைப் பற்றி மறைவில் கெட்ட காரியங்கள் செய்பவனாகவும், குடத்தைப் போன்ற உடலமைப்பு[90] கொண்டவனாகவும், பிறருக்கு தீங்கு செய்வதில் கெட்டிக்காரனாகவும், வழி நடப்பதில் திறமையுள்ளவனாகவும், குறைந்த செல்வமுடையவனாகவும், கஞ்சத்தனம் உடையவனாகவும், பிறரையாசிப்பவனாகவும், புத்திரவிருத்தி குறைவாக உள்ளவனாகவும், வாசனை பூக்களில் ஆசையுள்ளவனாகவும் இருப்பான் என கூறப்பட்டுள்ளது.

கும்பத்தில் குரு இருந்தால் பணம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அந்தஸ்து குறையாது. மற்றவர்கள் இவர்களை மதிப்பார்கள். பெருந்தன்மையான குணத்தை அளிக்கும் குரு இவர்களுக்கு தனவிஷயத்தில் மட்டும் எப்போதும் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டே இருப்பார். கௌரவத்தை அளிக்கும் குரு காசு கொடுப்பதில் மட்டும் கஞ்சத்தனம் பார்ப்பார். எனினும் இவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என்பதால் அடுத்தவர்கள் பணம் இவர்கள் கையில் புரளும். அந்தப் பணத்தை தேவைக்கு பயன்படுத்திக் கொண்டாலும் நாணயமாக நடந்து கொள்வார்கள். குரு இவர்களை எப்போதும் நிம்மதியாக இருக்க விடுவதில்லை.

கௌரவத்தை அளித்துவிட்டு அதைக் காப்பாற்றிக்கொள்ள போராடவேண்டிய நிலையை உருவாக்கிவிட்டு எதுவும் செய்யாமல் வெறுமனே வேடிக்கை பார்ப்பார். எவர் தயவுமில்லாமல் தானாகவே அனைத்தையும் சமாளிக்கும் திறமையை மட்டும் அளித்துவிடுவார்.

கும்பம் அதிபதி சனி அலிக்கிரகம். 5ஆம் அதிபதி புதன் அலிக்கரகம். காரகன் குரு 2, 11க்குடையவன். கும்ப இலக்கினத்தில் குரு அமரும் பொழுது அலிக்கிரக வீடு, 5ஆம் அதிபதியும் புதன். எனவே ஆண் குழந்தைகள் பிறப்பது அரிது. பெண் குழந்தைகளே மிகக் குறைவாகப் பிறக்கும்.

1) இலக்கினாதிபதி சனி குருவுடன் சேர்ந்தாலும், பலம் பெற்றாலுமே பெண் குழந்தைகளே பிறக்கும்.
2) பஞ்சமாதிபதி புதன் குருவுடன் சேர்ந்தாலும், குருவால் பார்க்கப்பெற்றாலும் பலமுடன் இருந்தாலும் பெண் குழந்தைகளே பிறக்கும்.

3) செவ்வாய், சூரியன் அஸ்தங்கம் அடையாமல் குருவுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும், ஆண் இராசிகளில் இருந்தாலும் மிகக்குறைவான அளவில் ஆண் குழந்தைகள் பிறக்கும்.
4) குருவுடன் சுக்கிரன், சந்திரன் சேர்ந்தாலும், பார்த்தாலும் ஆரோக்கியமான பெண் குழந்தைகள் பிறக்கும்.
5) குருவுடன் இராகு, கேது சேர்ந்தாலும், பார்த்தாலும் குழந்தையின்மை, குறைப்பிரசவம், குழந்தைகளால் தொல்லை ஏற்படும். வைத்தியத்தால் ஒரே ஒரு பெண் குழந்தை பிறக்கும்.

1.14.12. மீனம்

உபய இராசி, உக்கும இராசி, பெண் இராசி, சௌம்ய இராசி, இரட்டைப்படை இராசி என்றெல்லாம் அழைக்கப்படும் 12ஆவது கடைசி இராசியான மீனம் முழுச்சுபர் எனப்படும் குருவை ஆட்சியாளராகக் கொண்ட இந்த இராசி பாதம் என்ற பகுதியைக் குறிக்கும்.[91] இந்த இராசியில் எந்தக் கிரகமும் பகை பெறுவதில்லை என்பது இந்த இராசியின் சிறப்பாகும். சூரியன், செவ்வாய் இருவரும் இந்த இராசியில் நட்பு என்ற நிலையையும், சந்திரன், சனி இருவரும் சமம் என்ற நிலையையும், இராகு, கேது இருவரும் நட்பு நிலையையும், சுக்கிரன் உச்சம் பெறும் நிலையையும், புதன் நீசம் என்ற நிலையையும் பெறுகின்றார்கள்.

தனுசுவைப் போலவே இந்த இராசியும் தன் வீட்டில் எவரையும் பகையாக எண்ணுவதில்லை. ஆயினும் இதில் நட்பு பெரும் சூரியன் இந்த இராசிக்கு 6-வது இடம் என்னும் அசுப ஸ்தானத்தின் ஆதிபத்தியத்தைப் பெறுவதால், அவரும் இந்த இராசிக்கு பகைவராகவே செயல்படுவார் என்று சில நூல்கள் குறிப்பிடுகின்றது. நடைமுறையில் சூரியனும் இவர்களுக்கு சில பிரச்சினைகளை ஏற்படுத்தவே செய்கின்றார் என்றாலும் அவரைப் பகைவர் என்று கருதுவதற்கில்லை. சமம் பெறுபவர் என்ற அடிப்படையில் சமமானவராகவே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

சுக்கிரன் உச்சாதிபதி என்றாலும் 3, 8க்குடைய ஆதிபத்தியம் பெறுகின்றன. புதன் நீசாதிபதியாகி 4, 7க்குடைய பாதகாதிபத்தியம் பெறுகின்றன. எனவே இவர்கள் இருவரும் இந்த இராசிக்கு பகைவர்கள் என்ற நிலையைப் பெறுகின்றார்கள். சந்திரனும், செவ்வாயும் சுபர்கள்,

யோகர்கள் என்ற நிலையையும், சனி, இராகு, கேது மூவரும் சமமானவர்கள் என்ற அந்தஸ்தையும் பெறுகின்றார்கள்.

'பலதீபிகை' என்னும் மூலநூலில் மீனத்தில் பிறந்தவர்களைப் பற்றி, மீனத்தில் பிறந்தவன் அதிகமாய் தண்ணீர் குடிப்பவனாகவும், குறைகளில்லாத அழகிய[92] உடலமைப்பு உடையவனாகவும், நீரில் உற்பத்தியாகும் பொருட்களை அனுபவிப்பவனாகவும், செய்நன்றி மறக்காதவனாகவும், வித்வானாகவும், எதிரிகளை வெற்றி கொள்பவனாகவும், பாக்கிய முடையவனாகவும் இருப்பான் என கூறப்பட்டுள்ளது.

இலக்கின அதிபதியான குரு மீனத்தில் இருக்கும் போது பெருந்தன்மையை அளித்துவிடுவார். ஆனால் கஞ்சத்தனம் சற்று அதிகம் இருக்கும். பத்துமுறை யோசித்த பின்னே செய்வார்கள். மிகத்தேவையான செலவுகளையே செய்வார்கள். தேவையற்ற செலவுகளைத் தவிர்த்துவிடுவார்கள். எவரையுமே நம்பமாட்டார்கள். வீட்டில் மனைவி உட்பட அனைவரிடமே உஷாராகத்தான் இருப்பார்கள்.

வீட்டுச்செலவுகளைக் கூட தானே கவனித்துக் கொள்வார்கள். தவறிப்போய் வீட்டில் எவரிடமாவது செலவுப் பொறுப்பை ஒப்படைத்தால் தோண்டித்துருவி செலவுகளுக்கு கணக்கு கேட்பார்கள். இவர்களின் கணக்கு பார்க்கும் புத்தி மற்றவர்களுக்கு வெறுப்பாக இருக்கும். ஆனால் அதைப்பற்றி இவர்கள் கவலைப்படவே மாட்டார்கள். வீட்டில் பெற்றோர் உட்பட அனைவரையும், குறிப்பாக குழந்தைகளை அதிகம் நேசிப்பவர்கள் தான் என்றாலும் செலவு விஷயத்தில் மட்டும் கறாராகவே இருப்பார்கள்.

மீனத்தில் குரு ஆட்சி பெரும்நிலை சிறப்பாக இருக்கும். 1, 10க்குடைய ஆதிபத்தியம் பெற்று மீனத்தில் உள்ளபோது இவர்களின் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொடுப்பார். அதுவும் புகழ், செல்வாக்கு, அந்தஸ்து, கௌரவம் ஆகியவற்றை அளிப்பார்.

அதே சமயம் உலக இன்பங்களுக்கு ஆதிபத்தியம் பெரும் அவர் 3-ஆம் இடமான போகஸ்தானத்துக்கும் அதிபதி என்ற நிலையில் போகசக்தியை அதிகமாக்கிவிடுவார்.

சந்திரன், குரு இணைவும் சிறப்பே. முன்பு கூறிய நிலைக்கு பாதி அளவுக்காவது உயர்வுகளை அளிக்கத்தவறாது. சிறப்பான

தொழிலதிபர்களாக உயாவதுடன், பொதுச்சேவை, கௌரவப்பதவி, உதவி செய்யும் மனப்பான்மையை அளிக்கும். சந்திரன், சுக்கிரன் இணைவு சிறப்பளிப்பதில்லை. ஆடம்பரத்தையும், வெளிப்பகட்டையும், பெண்கள் நினைவையே ஏற்படுத்தும். வீண் டாம்பீகத்துக்காக கண்டபடி செலவு செய்வார்கள். குறிப்பாக பெண்கள் வகையில் அதிக செலவாளிகள் எனலாம். வரும் மனைவியும் இவர்களுக்கு மேல் செலவு செய்பவர்களாக இருப்பார்கள்.

மீனம் வியாழனின் ஆட்சி வீடு. சுக்கிரனின் உச்சவீடு. அசுரகுரு, தேவகுரு என்ற இரண்டு சுபர்கள் பலம் பெரும் இராசி. 5க்குடையவன் சந்திரன். இந்த இலக்கினத்தில் குரு அமர்ந்தால் ஆரோக்கியமான சம்போகம் ஏற்பட்டு விந்துவில் உயிர்அணுக்கள் அதிகமாகும். நிறைய பெண் குழந்தைகள் உண்டாகும்.

1) குருவுடன் சந்திரன் சேர்ந்தாலும், பார்த்தாலும், சந்திரன் பலமானால் ஆரோக்கியமான பெண் குழந்தைகள் கிடைக்கும்.
2) குருவுடன் சுக்கிரன் சேர்ந்தாலும், பார்த்தாலும், சுக்கிரன் வலுவுடன் இருந்தால் பெண் குழந்தைகளே கிடைக்கும்.
3) குருவுடன் சூரியன், செவ்வாய் சேர்ந்தாலும், பார்த்தாலும், ஆண் இராசிகள் அமர்ந்தால் ஆண் குழந்தைகளும், பெண் இராசியில் அமர்ந்தால் ஆண், பெண் குழந்தைகளும் பிறக்கும்.
4) குருவுடன் சனி, புதன், இராகு, கேது சேர்ந்தாலும், பார்த்தாலும் ஒரே குழந்தை அல்லது ஊனமான குழந்தை, குறைப்பிரசவம் அல்லது நவீன வைத்தியம் பார்த்து குழந்தை கிடைக்கும்.

1.15. குருவின் வக்கிர, அஸ்தமன, அதிசார நிலைகளால் குழந்தை பிறப்பில் ஏற்படும் குறைகள்

1.15.1. குருவின் வக்ரகதி

ஒரு கிரகம் பூமிக்கு அருகில் சஞ்சரிக்கும் பொழுது வக்ரகதி அடைகிறது. உண்மையில் எந்தக் கிரகமும் பின்னோக்கி பயணிப்பது இல்லை.

இரு கிரகங்கள் இடையே உள்ள வேகமாறுபாட்டின் காரணமாக பூமியில் இருந்து பார்க்கும் நமக்கு கிரகம் பின்னோக்கி செல்வது போல் தோன்றும். இந்நிலையே வக்கிரம் எனப்படுகிறது.[93]

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஐந்து கிரகங்களும் தமக்கு வழக்கமான சுற்றுப்பாதையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பின்னோக்கி செல்வதாக தோன்றும். இதுவே வக்கிரம். இதுவே வக்கிரகதி.

வக்கிரம் பெறும் கிரகம் பலம் பொருந்தியது ஆகும். வக்கிர கிரகம் சில அசாதாரண பலன்களைத் தரும். அதே போல பலன் தரும் யோகமும் வித்தியாசப்படும்.

- சூரியன், சந்திரனுக்கு வக்கிரம் இல்லை.
- இராகு, கேது எப்பொழுதும் வக்கிரமாக சுற்றுகின்றன.
- சனி, செவ்வாய், குரு இவற்றிற்கு ஐந்தில் சூரியன் வரும் போது வக்கிரம் ஏற்படும்.
- ஏழாம் இடத்தில் வரும்பொழுது அதிவக்கிரம் ஏற்படும்.
- ஒன்பதாம் இடத்தில் வரும்பொழுது வக்கிர நிவர்த்தி ஏற்படும்.
- வக்கிர நிலையில் உச்சம் பெறும் கிரகம் அசுபபலனையும்,
- வக்கிர நிலையில் நீசம் பெறும் கிரகம் சுபபலனையும் தரும்.

கிரகம்	சூரியனுக்கும், கிரகத்திற்கும் உள்ள கோணம்	ஸதம்பனம் நாட்கள்	வக்கிரகதி நாட்கள்
செவ்வாய்	228 132	3	80
புதன்	14 20	1	24
குரு	245 115	5	120
சுக்கிரன்	29 26	2	42
சனி	251 5	5	140 ***94***

- ஜாதகத்தில் குரு வக்கிரம் பெரும் பொழுது குழந்தை பாக்கியத்தில் அதிருப்தியை தருகிறது.
- குரு உச்சம் பெற்று, வக்கிரம் பெரும் பொழுது குழந்தையின்மை ஏற்படுகிறது அல்லது குழந்தையால் சந்தோசமின்மை ஏற்படுகிறது.

- குரு ஆட்சி பலம் பெற்று வக்கிரம் பெற்றால் ஒரே வகையான குழந்தைகள் பிறக்கிறது. குழந்தையின்மை அல்லது குறையுள்ள குழந்தை பிறக்கிறது.

1.15.2. குரு அஸ்தமனம்

- ஒரு கிரகம் சூரியனுக்கு அருகில் செல்லும் போது சூரியக்கதிர்கள் அதனை செயலிழக்கச் செய்கிறது.
- இராகு,கேதுவிற்கு அஸ்தமனம் கிடையாது.
- ஒவ்வொரு கிரகமும் சூரியனுக்கு ஒரு குறிப்பிட்ட பாகையில் நெருங்கும் போது அஸ்தமனம் அடைகிறது.

கிரகம்	**அஸ்தமனமாகும் பாகை**
செவ்வாய்	17°
புதன்	14°
குரு	11°
சுக்கிரன்	8°
சனி	15° ***95***

- நட்சத்திர அடிப்படையில் அஸ்தமனம் பற்றி கணிக்கும் போது அதே நட்சத்திர பாதத்தில் உள்ள கிரகம் அஸ்தமனம் அடைகிறது.பிற பாதங்களில் அஸ்தமனம் கிடையாது.
- குரு அஸ்தமனம் அடையும் பொழுது குழந்தை பிறப்பில் குறைபாடுகளை ஏற்படுத்திவிடுகிறார்.

1.15.3. குரு அதிசாரம்

- செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஐந்தும் தமது வழக்கமான சுற்றுப்பாதையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முன்னோக்கி செல்வதாக தோன்றும். அதுவே அதிச்சாரம்.
- தனது இராசியைவிட்டு அடுத்த இராசிக்கு செல்லும் நிலையே அதிச்சாரம்.
- அதிசாரக் கிரகம் பலம் பொருந்தியது ஆகும்.
- அதிசாரக் கிரகம் அசாதாரண பலன்களைத் தரும்.

- குரு அதிசாரம் பெற்று எந்த இராசியில் அமர்கிறாரோ அந்த இராசி பலனையே தருவார்.
- குரு அதிச்சாரம் பெரும்பொழுது புத்திர உற்பத்திக்கு உதவமாட்டார். புத்திரர்கள் பிறந்தாலும் குறைபாடு உள்ள குழந்தையே பிறக்கும்.[96]

தொகுப்புரை

இவ்வியலில் சோதிடம் பற்றி ஓர் அறிமுகமும், நவக்கோள்கள், பன்னிரு இராசிகள் பற்றிய விளக்கமும். கோள்களுக்கான வேறு பெயர்களும், நவக்கிரகங்களுக்குரிய நட்சத்திர மண்டலங்களும், குருபற்றிய விண்வெளித் தகவல்களும், குருபற்றிய தகவல்களும், பாவகப்பலன்களும், பன்னிரு பாவங்களில் குரு நின்ற பலன்களும், குருவின் காரகத்துவ குணங்களும், குருவைப் பற்றிய சிறப்புச் செய்திகளும், குருவின் மேஷம் முதலான மீனம் வரையிலான இராசிமண்டல சஞ்சாரத்தால் ஏற்படும் குழந்தை பிறப்பு பற்றியும், குருவின் வக்கிர, அஸ்தமன, அதிசார நிலைகளால் குழந்தை பிறப்பில் ஏற்படும் குறைகள் பற்றியும் விளக்கமாக அறியப்பட்டு உள்ளது.

அடிக்குறிப்பு

1 மாணவக் களஞ்சியம், ப. 67
2 மேலது.
3 மேலது.
4 மயிலை பூபதிராஜன், நவீன ஜோதிட வளர்ச்சி, ப. 4
5 மேலது.
6 மேலது.
7 ஜான் பி. நாயகம், மருத்துவ ஜோதிடம், ப. 5
8 மயிலை பூபதிராஜன், நவக்கிரக ஜோதிட வழிகாட்டி, ப. 5
9 மேலது ப. 6
10 மேலது ப. 5
11 மேலது ப. 11
12 ஜோதிட நண்பன், டிசம்பர் 1982, ப. 12
13 மேலது
14 மேலது ப. 13
15 மேலது.
16 மேலது.
17 மேலது ப. 14
18 மேலது ப. 15
19 மேலது.
20 கி. வா. ஜெகன்நாதன், நவக்கிரகம், ப. 32
21 மேலது ப. 35
22 மேலது ப. 36
23 மேலது ப. 38
24 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 151
25 டி. விமலன். நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 52
26 எஸ்.எம்.சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் மூலமும் உரையும், ப. 151
27 டி.விமலன் - நவீன கால ஜோதிட வளர்ச்சி. ப. 52
28 எஸ்.எம்.சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் மூலமும் உரையும், ப. 152
29 டி.விமலன் - நவீன கால ஜோதிட வளர்ச்சி. ப. 52
30 எஸ்.எம்.சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் மூலமும் உரையும், ப. 153
31 டி.விமலன் - நவீன கால ஜோதிட வளர்ச்சி. ப. 53
32 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 154
33 டி. விமலன். நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 53
34 மேலது.
35 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 154

36 டி. விமலன். நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 54

37 எஸ்.எம்.சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் மூலமும் உரையும், ப. 155

38 டி.விமலன் - நவீன கால ஜோதிட வளர்ச்சி. ப. 54

39 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 156

40 டி. விமலன். நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 54

41 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 156

42 டி. விமலன், நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 55

43 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 157

44 டி. விமலன், நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 56

45 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 158

46 டி. விமலன், நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 56

47 மேலது.

48 எஸ்.எம். சதாசிவம், உத்திரகாலாம்ருதம் மூலமும் உரையும், ப. 158

49 டி. விமலன், நவீன கால சோதிட வளர்ச்சி, ப. 57

50 மேலது.

51 பாடூர். ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஜோதிஷ வித்யா வாரிதி, ப. 217

52 மேலது ப. 218

53 மேலது ப. 219

54 மேலது.

55 மேலது ப. 220

56 மேலது ப. 221

57 மேலது.

58 மேலது ப. 222

59 மேலது ப. 223

60 மேலது.

61 மேலது ப. 224

62 மேலது ப. 225

63 மேலது ப. 116

64 மேலது.

65 மேலது ப. 117

66 டி. விமலன், அடிப்படை சோதிடவியல், ப. 43

67 மு. மாதேஸ்வரன், 12 இலக்கின பாவப் பலன்கள், ப. 5

68 மேலது.

69 மேலது ப. 20

70 மேலது ப. 26

71 மேலது ப. 36

72 மேலது ப. 37

73 மேலது ப. 56

74 மு. மாதேஸ்வரன், 12 இலக்கின பாவகப் பலன்கள், ப. 57
75 மேலது ப. 70
76 மேலது ப. 71
77 மேலது ப. 80
78 மேலது ப. 81
79 மேலது ப. 104
80 மேலது ப. 105
81 மேலது ப. 124
82 மேலது ப. 126
83 மேலது ப. 143
84 மேலது ப. 145
85 மேலது ப. 154
86 மேலது ப. 156
87 மேலது ப. 182
88 மேலது ப. 183
89 மேலது ப. 202
90 மேலது ப. 204
91 மேலது ப. 223
92 மேலது ப. 225
93 பாடூர். ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஜோதிஷ வித்யா வாரிதி, ப. 63
94 மேலது.
95 மேலது. ப. 61
96 மேலது. ப. 62

இயல் - 2
குருவின் கோச்சாரமும், குழந்தை பிறப்பும்

அறிமுகவுரை

2.0. ஒவ்வொரு கிரகமும் ஒரு இராசியைக் கடக்கும் காலம்

2.1. கிரகங்கள் ஒரு நாளில் சுற்று வட்டத்தில் செல்லும் பாதைகள்

2.2. கிரகங்கள், சந்திரன் நின்ற இராசிக்கு நன்மை செய்யும் பாவங்கள்

2.3. குருவின் கோச்சாரப்பலன்

2.4. குழந்தை பிறப்புக்கு கோச்சாரக் குருவின் அருள்

2.5. குழந்தை பிறக்கும் போது கோச்சாரக் குரு

2.6. நட்சத்திரத்திற்குரிய தசா வருடங்கள்

2.7. குருவின் தசா, புத்தி விவரங்கள்

2.8. குரு தசா, புத்தியின் பொதுப்பலன்கள்

2.8.1. குரு தசா - குரு புத்தி

2.8.2. குரு தசா - சனி புத்தி

2.8.3. குரு தசா - புதன் புத்தி

2.8.4. குரு தசா - கேது புத்தி

2.8.5. குரு தசா - சுக்கிர புத்தி

2.8.6. குரு தசா - சூரிய புத்தி

2.8.7. குரு தசா - சந்திர புத்தி

2.8.8. குரு தசா - செவ்வாய் புத்தி

2.8.9. குரு தசா - இராகு புத்தி

2.9. ஐந்தாம் பாவத்துடன் தொடர்பு கொண்ட குருவின் தசா, புத்திக் காலங்களில் குழந்தை பிறப்பு

தொகுப்புரை

அறிமுகவுரை

இவ்வியலில் ஒவ்வொரு கிரகமும் ஒரு இராசியைக் கடக்கும் காலம், கிரகங்கள் ஒரு நாளில் சுற்று வட்டத்தில் செல்லும் பாதைகள், கிரகங்கள் சந்திரன் நின்ற இராசிக்கு நன்மை செய்யும் பாவங்கள், குருவின் கோச்சாரப்பலன்கள், குழந்தை பிறப்புக்குக் கோச்சாரக் குருவின் அருள், குழந்தை பிறக்கும்போதுள்ள கோச்சாரக்குரு, நட்சத்திரத்திற்குரிய தசா வருடங்கள், குருவின் தசா, புத்தி விவரங்கள், குருதசா, புத்தியின் பொதுப்பலன்கள், ஐந்தாம் பாவத்துடன் தொடர்பு கொண்ட குருவின் தசா, புத்திக் காலங்களில் குழந்தை பிறப்பு பற்றி விவரமாக அறியப்பட உள்ளது.

2.0. ஒவ்வொரு கிரகமும் ஒரு இராசியைக் கடக்கும் காலம்

''கோ'' என்ற சொல்லுக்கு கிரகங்கள் என்று பொருள். ''சாரம்'' என்பதற்கு அசைதல் என்று பொருள். ஆகவே கிரகங்களின் அசைவினால் ஒரு தனி மனிதனுக்கு ஏற்படக்கூடிய பலனையே கோச்சாரப்பலன் என்பர். கிரகங்கள் ஒவ்வொன்றும் ஒரே நிலையில் இல்லாமல் சுற்றிக்கொண்டே வருகின்றன. அவை 12 இராசிகளையும் குறிப்பிட்ட காலகட்டத்தில் கடந்து செல்கின்றன. அவை ஒவ்வொரு இராசிக்கும் வரும்பொழுது வித்தியாசமான பலன்களை ஏற்படுத்துகின்றன. அதற்கு 'கோச்சாரம்' என்று பெயர்.[1]

சந்திரன் ஒரு இராசியை	2 ¼ நாட்களிலும்
சூரியன் ஒரு இராசியை	1 மாதத்திலும்
புதன் சுக்கிரன் ஒரு இராசியை	1 மாதத்திலும்
செவ்வாய் ஒரு இராசியை	1 ½ மாதத்திலும்
வியாழன் ஒரு இராசியை	1 வருடத்திலும்
இராகு, கேது ஒரு இராசியை	1 ½ வருடத்திலும்
சனி ஒரு இராசியை	2 ½ வருடத்திலும் கடக்கிறார்கள்.[2]

2.1. கிரகங்கள் ஒருநாளில் சுற்று வட்டத்தில் செல்லும் பாதைகள்

சந்திரன் ஒரு நாளில் கடக்கும் தூரம் 13^{0} 00’ 15”

சூரியன் ஒரு நாளில் கடக்கும் தூரம் 01^{0} 00’ 00”

செவ்வாய் ஒரு நாளில் கடக்கும் தூரம் 30^{0} 00’ 15”

புதன் ஒரு நாளில் கடக்கும் தூரம் 00° 60’ 10”

சுக்கிரன் ஒரு நாளில் கடக்கும் தூரம் 00° 60’ 10”

குரு ஒரு நாளில் கடக்கும் தூரம் 00^{0} 05’ 15”

இராகு, கேது ஒரு நாளில் கடக்கும் தூரம் 00° 03’ 00”

சனி ஒரு நாளில் கடக்கும் தூரம் 00^{0} 02’ 00” [3]

கோச்சாரப் பலன்கள் சந்திரன் நின்ற இராசியிலிருந்தே பார்க்கப்படுகின்றது. ஒருவர் பிறக்கும்போது, கோச்சாரத்தில் சந்திரன் நின்ற நட்சத்திரமே ஜென்ம நட்சத்திரம். ஜென்ம நட்சத்திரம் அமர்ந்த இராசியே, ஜென்ம ராசி. தசா, புத்தி அந்தந்தப் பலன்களை பார்க்கும் பொழுது ஜெனன காலத்தில் இருந்த கிரக நிலையை வைத்து இலக்கின ரீதியாகப் பலன்கள் கூறப்படுகின்றன. ஒருவர் பிறக்கும்போது இருந்த அப்போதைய கோச்சார கிரக நிலையே ஜாதகத்தின் கிரக நிலையாகும். கோச்சாரப் பலன்கள் பார்க்கும் போது இராசியை ஓர் இடமாகப் பாவித்து கோச்சாரப் பலன்கள் பார்க்கப்படுகிறது.

2.2. கிரகங்கள் சந்திரன் நின்ற இராசிக்கு நன்மை தரும் பாவங்கள்

சூரியன் இராசிக்கு 3, 6, 10, 11 இல் வரும் பொழுதும்

சந்திரன் இராசிக்கு 1, 3, 6, 7, 9, 10, 11 இல் வரும் பொழுதும்

செவ்வாய் இராசிக்கு 3, 6, 10, 11 இல் வரும் பொழுதும்

புதன் இராசிக்கு 2, 4, 6, 8, 10, 11 இல் வரும் பொழுதும்

சுக்கிர இராசிக்கு 1, 2, 3 4, 5, 8, 9, 11 இல் வரும் பொழுதும்

குரு இராசிக்கு 2, 5, 7, 9, 11 இல் வரும் பொழுதும்

சனி இராசிக்கு 3, 6, 11 இல் வரும் பொழுதும்

இராகு,கேது இராசிக்கு 3, 6, 10, 11 இல் வரும் பொழுதும் நன்மையைச் செய்வார்கள்.[4]

2.3. குருவின் கோச்சாரப்பலன்

சந்திரன் நின்ற இராசிக்கு குருவின் சஞ்சாரப் பலன்

"ஜென்ம ராமர் வனத்திலே சீதையை சிறை வைத்ததும்,

தீதிலாதொரு மூன்றிலே துரியோதன் படை மாண்டதும்,

இன்மையெட்டினில் வாழி பட்டமிழந்து போம்படியானதும்,

ஈசனா தொருபத்திலே தலையோட்டிலே யிரந்துண்டதும்,

தர்மபுத்திரர் நாலிலே வனவாசம்படி போனதும்,[5]

சத்திய மாமுனியாறிலே யிரு காலிலேதலை பூண்டதும்,

வன்மையுற்றிட ராவணன்முடி பன்னிரண்டினிற் வீழ்ந்ததும்,

மன்னுமா குருசாரி மாமனை வாழ்விலா துறு மென்பவே"

ஜென்மத்தில் குரு நிற்பதால் சிறைபடுதல்

மூன்றில் தன்னுடைய குடும்பம் நாசம்

நான்கில் இடமாறுதல்

ஆறில் கை கால் முறிவு

எட்டில் தன்னுடைய புகழ் மறைதல்

பத்தில் தரித்திரம் அதிகமாகி பிச்சை எடுத்தல்

பன்னிரெண்டில் ஆபத்து ஏற்படுதல்[6] - போன்றவை ஏற்படும் என்று இந்தப் பாடல் கூறுகிறது. மீதி 2, 5, 7, 9, 11இல் அமரும் பொழுது புகழ், அந்தஸ்து, பணவரவு, திருமணம் ஆதல், குழந்தைப்பேறு

கிடைத்தல், பதவி, அரசு வேலை கிடைத்தல், பந்தயங்களில் வெற்றி பெறுதல், கோர்ட் வழக்குகளில் வெற்றி பெறுதல் போன்ற நற்பலன்கள் ஏற்படும்.

பொதுவாகக் குருவின் கோச்சாரத்தைக் கொண்டு காதணி விழா, கிரகப்பிரவேஷம், கிரஹ ஆரம்பம், புதிய தொழில் தொடங்குதல், திருமணம், குழந்தைகளுக்கு பெயர் வைத்தல் போன்ற சுப காரியங்களுக்கு குருவின் கோச்சாரம் மிகவும் பயன்படுகிறது.

சந்திரனுக்கு 2, 5, 7, 9, 11 ஆகிய இடங்களில் வரும் பொழுது தன் கோச்சாரத்தில் குரு நன்மை புரிவார். இதற்கான வேதை நிலைகள் 3, 4, 8, 10, 12 ஆகிய இடங்களில் கோச்சார கிரகங்கள் இருக்கக்கூடாது.

ஜென்மத்தில் குரு வரும் போது ஜாதகர் தனது இடத்தை விட்டு நீங்கி வேறு இடம் தேடிப் போவார். மனதில் சஞ்சலமும் பொருளாதார நட்பும் பிறருடன் விரோதமும் ஏற்படும்.

2ஆம் இடத்தில் பொருளாதார வெற்றி, குடும்ப சுகம், பணவரவுகள், கொடுத்தல் வாங்கலில் சிக்கல் தீரும். அவரது வார்த்தைக்கு மதிப்பு ஏற்படும்.

3ஆம் இடத்தில் பதவி நாசம், நண்பர் பிரிவு, காரியத்தடை, நோய் முதலியவை ஏற்படும்.

4இல் உறவினர்களால் துன்பம் உண்டாகும். அவமானம் அடைதலும் நாற்கால் விலங்குகளால் துன்பம் ஏற்படும்.

5இல் குழந்தைகள் பிறப்பு, புகழ் உண்டாகுதல், அறிவு முதிர்ச்சியால் பல நல்ல காரியங்கள் செய்தல், நல்லவர்கள் நட்பு, அரசாங்க அனுகூலம் ஏற்படும்.

6ஆம் இடத்தில் விரோதிகளால் தொல்லை, நோய் ஏற்படுதல், கடன் ஏற்படுதல், புது முயற்சியில் தோல்வி, மனைவி மக்களின் உடல் நிலையில் கவனம் தேவை, வைத்திய செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு,

எதிலும் பொறுமை அவசியம், வாகனத்தில் செல்லும் போது கவனமாகச் செல்ல வேண்டும்.

7ஆம் இடத்தில் குரு வரும் பொழுது திருமணம் நடைபெறும், குழந்தைப் பேறு கிடைக்கும், நண்பர்கள் உறவினர்களால் நன்மை ஏற்படும். வீடு வாகன சேர்க்கை ஏற்படும். கூட்டுத்தொழில் நன்மை பயக்கும். மேலதிகாரியின் அனுசரிப்பு உண்டு. பொருளாதார முன்னேற்றம் உண்டு.

8ஆம் இடத்தில் குரு வரும் பொழுது பயணங்களால் தொல்லையும் திடீர் விபத்தும் திடீர் அதிர்ஷ்டமும் ஏற்படும். தனநாசமும், துன்பங்கள் பல வகைகளில் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. வீண் வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டும். குழந்தைகளால் தொல்லை ஏற்படும். வைத்திய செலவுகள் ஏற்படும் கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும்.

9ஆம் இடத்தில் குரு வரும் பொழுது எல்லா நன்மைகளும் கிடைக்கும். எதிர்பார்த்த இலாபம், நல்ல மனைவி, குழந்தைகள் கிடைக்கும் வீடு வாகன சேர்க்கை உண்டு. பதவி புகழ் கிடைக்கும். புனித ஸ்தலங்களுக்கு சென்று தெய்வ தரிசனம் கிடைக்கும். பணவரவுகள், திடீர் யோகங்கள் உண்டு.

10ஆம் இடத்தில் குரு பதவி மாற்றம் செய்யும். வீடு கட்டும் யோகத்தை செய்யும் பதவிகளில் பிரச்சனைகளை ஏற்படுத்தும். நண்பர்களால் உதவி கிடைக்கும். பெரியவர்களுக்கு உடல் நலமின்மை ஏற்படும். வாகன யோகம் ஏற்படும்.

11ஆம் இடத்தில் கோச்சாரக் குரு வரும் பொழுது எதிலும் வெற்றி, திருமணம் நடைபெறும், குழந்தைகள் கிடைக்கும். வீடு, வாகன சேர்க்கை, ஆபரணம் கிடைக்கும். போட்டி பந்தயம், கோர்ட் வழக்குகள் முதலியவற்றிலும் வெற்றி கிடைக்கும். திடீர் வரவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் வெற்றியாகும்.

12இல் குரு பதவிக்கு பிரச்சனைகள் ஏற்படும். பண இழப்பு, கொடுக்கல் வாங்கலில் சிக்கல், தொழில் நட்டம், உறவினர் பகை, எதிர்ப்புகள் அதிகரித்தல், மனச்சோர்வு உடல் நலமின்மை ஏற்படலாம்.

2.4. குழந்தைப் பிறப்பிற்கு கோச்சாரக் குருவின் அருள் ஆய்வு

எ.கா.01 - 14.06.1938ஆம் ஆண்டு மதியம் 2.50 மணிக்கு கோனாபட்டில் பிறந்தவரின் ஜாதகம். இவருக்கு 16 குழந்தைகள். 5 குழந்தைகள் தான் நிலைத்தது. மற்றவை பிறந்து இறந்தன.

பெண்கள் ஜாதகத்தில் 5ஆம் இடமும், 9ஆம் இடமும், காரகன் குருவும் குழந்தை பிறப்பிற்கு முக்கியமானவர்கள். 2, 7க்குடைய மாரகாதிபதி, 9இல் செவ்வாய், இராகுசாரம் பெற்று அம்சத்தில் உச்சம் பெற்றதால் குழந்தை இறப்பு, குறை பிரசவமும் ஏற்பட்டது.

5, 6க்குடைய சனி குரு பரிவர்த்தனை 5இல் அமர்ந்த குரு ஆண் இராசியில் அமர்ந்து அம்சத்தில் ஆண் இராசியில் ஆட்சி பெற்றதால் ஆண் குழந்தைகளே அதிகம் பிறந்தது.

பொதுவாக குரு ஆண் இராசியில் அமர்ந்து குரு சதயத்தில் அமர்ந்தால் குறை பிரசவம் ஏற்படும். குழந்தைகளால் தொல்லையும் உண்டு. என் சகோதரன் ஒருவன் மனநலம் பாதிப்பு உடையவன். 04.02.2019இல் சிவலோகப்பதவி அடைந்தான்.

எ.கா.02 - முதல் குழந்தை 21.08.1957இல் இரவு 21.18இல் கோனாபட்டில் பிறந்தது. ஜாதகரின் அம்மாவின் ஜாதகத்தில் 2இல் இராகு, 8இல் சூரியன், புதன், கேது அமைவு. கடுமையான தார தோஷம். இரண்டாவது தாரம். ஜாதகரின் தந்தைக்கும், தாய்க்கும் 20 வயது வித்தியாசம். மிகச் சிறு வயதில் திருமணம். ஜாதகர் 21.08.1957, 21.18 இரவு, கோனாபட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறப்பு. ஜாதகர் பிறக்கும் போது சூரியதசா, இராகுபுத்தி 30.05.1957 முதல் 24.04.1958 வரை நடைபெற்றது அப்போதைய கிரக நிலை.

தசாநாதன் சூரியன் மிருகசீரிசம் 2இல் செவ்வாய் சாரமும், செவ்வாய் 9இல் அமர்ந்து வியாழனால் பார்க்கப்படுகிறார். சூரியன் 9க்குடைய புதனுடன் சேர்க்கை. எனவே தசாநாதன் 8இல் மறைந்தாலும் சாரபலம், சேர்க்கை பலத்தால் குழந்தை பிறப்பிற்கு காரகன் ஆனார். புத்திநாதன் இராகு 2இல், விசாகம் 4இல் இராகு வியாழனுடைய சாரம். வியாழன் 5இல் அமர்வு. இராகு அமர்ந்த வீட்டிற்குரிய செவ்வாய் 9இல் குருவின் பார்வை. எனவே குழந்தை பிறந்தது.

தசாநாதன், புத்திநாதனுடன் வியாழன் தொடர்பு ஏற்பட்டதால் குழந்தை பிறந்தது. அப்போது கோச்சாரக்குரு, கன்னியில் அமர்ந்து தசாநாதன் சனியைப் பார்வை செய்வதும், தசாநாதன் சூரியனை 9ஆம் பார்வை செய்ததும் குழந்தை பிறப்பிற்கு ஆதாரமானது. கோச்சாரக்குரு ஜாதகத்தில் உள்ள 5ஆம் இடத்தையோ, 5க்குடையவனையோ தசா புத்தி நாதரைப் பார்க்கும் காலம் குழந்தை பிறக்கும்.

எ.கா.03 - ஜாதகரின் தம்பி (1) 07.06.1961இல் பிறந்தார். அப்போது ஜாதகரின் தாயாரின் ஜாதகத்தில் சூரியதசா, சுக்கிரபுத்தி 25.03.1961 முதல் 26.03.1962 வரை நடைபெற்றது. வருடம் வயது: வயது 23வயது 9மாதம் 12நாள்

கோச்சார வியாழன் 5க்குடைய சனியுடன் சேர்க்கையும், 9இல் இருந்த செவ்வாயை 7ஆம் பார்வையும், கோச்சார வியாழன் செவ்வாய் பார்வையும் பெற்றது.

எ.கா.04 - ஜாதகரின் அடுத்த தம்பி (2) 14.07.1962, 02.32இல் பிறப்பு. அப்போது ஜாதகரின் தாயாருக்கு 24 வயது 1 மாதம். 27.03.1963 வரை சந்திரதசா, சந்திர புத்தி.

வியாழன் ஆண்ராசியில், பிறப்பு ஜாதகத்தில் அமர்ந்த காரகன் வியாழனுடன் சேர்க்கையும், பிறப்பு ஜாதகத்தில் 9ஆம் இடத்திற்கு குரு பார்வையும் பெற்றது.

எ.கா.05 - ஜாதகரின் அடுத்த தம்பி பிறப்பு (3) 23.11.1964. சந்திரதசா, இராகு புத்தி. அப்போது ஜாதகரின் தாயாருக்கு 26 வயது 5 மாதம் 9

நாள். 26.02.1965 வரை சந்திரதசா, இராகு புத்தி. ஜனவரி 2019இல் சிவலோக பதவி அடைந்தார்.

9இல் அமர்ந்த கோச்சார செவ்வாயை, கோச்சார வியாழன் பார்வையும், ஜாதகத்தில் இராகுவின் சாரம் பெற்ற வியாழன், கோச்சாரத்தில் இராகு 9இல் அமர்வு. கோச்சாரச் சனி 5க்குடையவன் ஜாதகத்தில் கும்பத்தில் அமர்ந்த வியாழனுடன் சேர்க்கை (ஆண் ராசியில்).

எ.கா.06 - ஜாதகரின் அடுத்த தம்பி (4) 7.02.1968, 03.48இல் பிறப்பு. ஜாதகரின் தாயாரின் வயது - 29 வயது 8 மாதம் 3 நாள். சந்திரதசா, புதன் புத்தி 27.01.1968 முதல் 26.06.1969 வரை.

கோச்சாரக்குரு ஆண் இராசியில் சிம்மத்தில் அமர்வும், கோச்சாரக்குரு, பிறந்த நேரத்தில் கும்பத்தில் இருந்த குருவை பார்வையும், கோச்சாரத்தில் அமர்ந்த குரு 9க்குடைய புதனை கோச்சாரத்தில் பார்வையும், 5க்குடைய சனி கோச்சாரத்தில் சனியுடன் சேர்க்கையும் பெற்றன.

எ.கா.07 - ஜாதகரின் அடுத்த தம்பி (5) **0**7.04.1971ல் பிறப்பு. ஜாதகரின் தாயாரின் வயது - 32 வயது 9 மாதம் 23 நாள். 27.01.1970 முதல் 26.9.1971 வரை சந்திரதசா, சுக்கிர புக்தி.

கோச்சாரக்குரு, ஜாதகத்தில் பஞ்சமாதிபதி சனியைப் பார்வையும், கோச்சாரக்குரு ஜாதகத்தில் பாக்கியாதிபதி புதனை பார்வையும், தசாநாதன் சந்திரனை பிறப்பில் உள்ள குரு பார்வையும், புத்தி நாதன் சுக்கிரன் பிறப்பு ஜாதகத்தில் வியாழனுடன் இணைவு பெற்றும் அமைவு.

2.5. குழந்தை பிறக்கும் போது கோச்சாரக்குரு

கோச்சாரக்குரு, ஜனன காலக் குருவை பார்வை செய்கிறார்.

5ஆம் இடத்திற்கு கோச்சாரக்குருவின் பார்வை (அ) சேர்க்கையும் ஜனன கால பஞ்சமாதிபதிக்கு குரு பார்வை செய்கிறார்.

கோச்சாரக்குருவின் சேர்க்கை ஜனன கால பஞ்சமாதிபதியுடன் சேர்ந்த கிரகங்களுக்கு ஏற்படுகிறது.

ஜனன கால குருவுக்கும், கோச்சாரக் குருவுக்கும் சேர்க்கை (அ) பார்வை ஏற்படுகிறது.

தசா, புத்தி நாதர்களுக்கு கோச்சாரக்குருவின் சேர்க்கை (அ) பார்வை ஏற்படுகிறது.

ஜனன காலத்தில் குருவுக்கு சாரம் கொடுத்த கிரகத்திற்கு கோச்சாரக்குருவின் சேர்க்கை (அ) பார்வை ஏற்படுகிறது.

குருவின் அருள் இருந்தால் மட்டுமே குழந்தை பாக்கியம் உண்டு. பிறந்த ஜாதகத்தின் வாயிலாக குழந்தை பிறப்பை உறுதி செய்து கொண்டு ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? குறை பிரசவமா? குறைபாடுள்ள குழந்தையா? என்பதை முடிவு செய்து கொண்டு கோச்சாரத்தில் அமர்ந்த குரு ஜாதகத்தில் உள்ள குருவை உந்துதல் செய்யும் காலத்தில் குழந்தை பிறக்கும் என்று கூறலாம்.

எ.கா.08 - இது ஒரு ஆணின் ஜாதகம். 1977ல் பிறந்தார். மிதுன இலக்கினம். இலக்கினத்தில் குரு அமர்ந்தார். அசுவினி நட்சத்திரம், மேஷ ராசி. 5ஆம் அதிபதி சுக்கிரன் மிதுனத்தில் அமர்வு.

இவருக்கு 23.12.2017ல் ஒரு பெண் குழந்தை பிறந்தது (C1). அப்போது குருவும், சுக்கிரனும் துலாத்தில் உள்ளது.

கோச்சார துலா குரு, ஜனன கால துலா குருவை 5ஆம் பார்வை செய்கிறது.

கோச்சார துலா குரு, ஜனன கால 5ஆம் அதிபதி சுக்கிரனை 9ஆம் பார்வை செய்கிறது.

கோச்சார தனுசு சுக்கிரன், ஜனன காலத்தில் மிதுனத்தில் அமர்ந்த பஞ்மாதிபதி சுக்கிரனை 7ஆம் பார்வை செய்கிறது.

கோச்சார தனுசு சுக்கிரன், ஜனன காலத்தில் மிதுனத்தில் அமர்ந்த குருவை 7ஆம் பார்வை செய்கிறது.

எ.கா.09 - இது ஒரு பெண்ணின் ஜாதகம். 05.07.1976இல் பிறந்தார். சித்திரை நட்சத்திரம், கன்னி இராசி, கன்னி இலக்கனம். 5ஆம் அதிபதி சனி 11இல் கடகத்தில் அமர்வு. குரு மேஷத்தில் அமர்வு.

இவருக்கு 23.12.2017ல் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்போது குரு துலாத்தில், சனி தனுசில் அமைவு.

கோச்சார துலாக்குரு, ஜனன கால மேஷக் குருவை 7ஆம் பார்வை செய்கிறது.

கோச்சார துலாச் சனியை, ஜனன கால மேஷக் குரு 9ஆம் பார்வை செய்கிறது.

எ.கா.10 - இது ஒரு ஆண் ஜாதகம். 07.03.1966இல் பிறந்தார். பூரம் நட்சத்திரம், சிம்ம இராசி, மிதுன இலக்கனம். குரு ரிஷபத்தில், 5க்குடைய சுக்கிரன் மகரத்தில் அமைவு.

9 C1 இவர் 9இன் முதல் குழந்தை. அப்போது கோச்சாரக் குரு கன்னியில் அமர்ந்தார்.

குழந்தை பிறந்த பொழுது கன்னியில் அமர்ந்த குரு, ஜாதகரின் ரிஷபத்தில் அமர்ந்த குருவை பார்வை செய்கிறது.

குழந்தை பிறந்த பொழுது கன்னியில் அமர்ந்த குரு, ஜாதகரின் 5ஆம் அதிபதி சுக்கிரனை 5ஆம் பார்வை செய்கிறது.

குழந்தை பிறந்த பொழுது கன்னியில் அமர்ந்த குரு,ஜாதகரின் அம்ச குருவுடன் கன்னியில் சேர்ந்தது.

9 C2 - இவர் 10இன் இரண்டாவது குழந்தை. இவர் பிறக்கும் போது :

கோச்சாரக் குரு ஆட்சி பெற்று, ஜாதகரின் 5ஆம் அதிபதி சுக்கிரனின் சாரம் பெற்று உள்ளது. (பூராடம் 3ல்)

குழந்தை பிறக்கும் போது நவாம்சத்தில் துலாமில் அமர்ந்த குரு ஜாதகரின் 5ஆம் இடத்தில் அமர்ந்து இலக்கினத்தை பார்வை செய்கிறது.

கோச்சாரக் குரு 5ஆம் அதிபதி சுக்கிரனை கோச்சாரத்தில் பார்வை செய்கிறது.

---

10 F - இது ஒரு பெண் ஜாதகம். 01.04.1970இல் பிறந்தார். உத்திராடம் நட்சத்திரம், மகர இராசி, மகர இலக்கனம், 5க்குடைய சுக்கிரன், மேஷத்தில் சனி, செவ்வாயுடன் சேர்க்கை. குரு துலாமில் உள்ளது.

10 C1 - இவர் 10இன் முதல் குழந்தை. முதல் குழந்தை பிறக்கும் பொழுது கோச்சாரத்தில், கன்னியில் குரு அமர்ந்தது, தனுசுவில் சுக்கிரன் அமர்ந்தது.

கோச்சாரத்தில் கன்னியில் அமர்ந்த குரு, ஜனனத்தில் 5ஆம் இடமாகிய ரிஷபத்தை பார்வை செய்கிறார்.

நவாம்சத்தில் ரிஷபத்தில் அமர்ந்த குரு, ஜாதகரின் கோச்சாரத்தில் கன்னியில் அமர்ந்த குரு, ஜனன ஜாதகத்தில் 5ஆம் அதிபதி சுக்கிரனுடன் இணைந்த சனியை பார்வை செய்கிறார்.

10 C2 - இவர் 10இன் இரண்டாவது குழந்தை. இவர் பிறக்கும் பொழுது குரு தனுசில் ,சுக்கிரன் மேஷத்தில் அமைவு.

குழந்தை பிறக்கும் போது தனுசில் அமர்ந்த குரு ஜாதகரின் 5க்குடைய சுக்கிரனை பார்வை செய்கிறார்.

குழந்தை பிறக்கும் போது தனுசில் அமர்ந்த குரு, பஞ்சமாதிபதி சுக்கிரனின் சாரம் (பூராடம்) பெற்றுள்ளது. குழந்தை பிறக்கும் போது

நவாம்சத்தில் துலாம் இடத்தில் அமர்ந்த குரு ஜனன காலத்தில் குருவுடன் அமர்ந்த துலாமுடன் சேர்க்கை பெறுகிறார்.

ஜாதகரின் ஜனன கால குருவை, குழந்தை பிறக்கும் பொழுது அமர்ந்த குரு பார்வை செய்கிறது. ஜாதகரின் 5ஆம் அதிபதியை குரு சேர்கிறார். ஜாதகரின் அம்சத்தில் அமர்ந்த குருவுடன் கோச்சார குரு சேர்கிறார். ஜாதகரின் 5ஆம் இடத்தை கோச்சார குரு பார்வை செய்கிறார். ஜாதகரின் 5ஆம் இடத்தில் அமர்ந்த கிரகத்தை கோச்சார குரு பார்வை செய்கிறார். ஜாதகரின் 5ஆம் அதிபதியுடன் சேர்ந்த கிரகத்தை கோச்சார குரு பார்வை செய்கிறார்.

ஆய்வுச் சாதகம் - எடுத்துக் காட்டு - 1

ஜாதகர் பெயர் : கா. திருமாயி அம்மாள்.

பிறந்த நாள் : 14.06.1938

பிறந்த நேரம் : 14.05 பகல்

பிறந்த ஊர் : கோனாபட்டு (புதுக்கோட்டை)

ஜென்ம இலக்கினம் : துலாம்

ஜென்ம இராசி : தனுசு

ஜென்ம நட்சத்திரம் : பூராடம்

இருப்பு தசா : சுக்கிரதசா - 17ஆ 9மா 12 நாள்

சனி		**சூ பு கே**	**செவ்**
கு	**ராசி**		**சுக்**
சந்	**ரா**	**ல/**	மா

			பு மா
	நவாம்சம்		**சுக் ரா**
செவ் சனி கே			**சந்**
கு	**ல/**		**சூ**

ஆய்வு விதிகள் - 2, 4, 7, 8 இன்படி 50% பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு 6 ஆண் குழந்தைகள். இவருக்கு 16 குழந்தைகளில் 6 குழந்தைகள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. அதிலும் 08.02.2019ல் கோபால் என்ற மகன் சிவலோகப்பதவி அடைந்தார். 3 குழந்தைகளுக்குப் பிறகு 4ஆவது மகன் 21.08.1957 இரவு 09.18 பிறக்கும் போது 30.05.1957 முதல் 24.04.1958 வரை சூரியதசா, இராகு புத்தி நடைபெற்றது. விதி 11இன்படி கோச்சாரத்தில் கன்னியில் உள்ள குரு 9ஆம் பார்வையால் தசாநாதன் சூரியனைப் பார்த்தது. விதி 12இன்படி 5க்குடைய சனியை கன்னியில் உள்ள குரு 7ஆம் பார்வையால் பார்ப்பது.

ஆய்வு விதி முடிவு

விதி 2இன் படி குரு 5இல் அமர்ந்து சனியுடன் பரிவர்த்தனை பெற்றதால் 25% உதவுகிறது.

விதி 4இன் படி குரு 5இல் அமர்ந்ததால் 25% உதவுகிறது.

விதி 7இன் படி 5க்குடைய சனி 6ல் அமர்ந்ததால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 8இன் படி ஆண் குழந்தைகள் பிறந்தன.

விதி 2, 4, 7, 8இன் படி 50% புத்திரபலம் பெற்ற சாதகம். சாதகருக்கு 6 ஆண் குழந்தைகள் பிறந்தன.

ஆய்வுச் சாதகம் - எடுத்துக்காட்டு - 2

ஜாதகர் பெயர்	:	கா. வைத்தியநாதன்.
பிறந்த நாள்	:	21.08.1957
பிறந்த நேரம்	:	21.18 இரவு
பிறந்த ஊர்	:	கோனாபட்டு (புதுக்கோட்டை)
ஜென்ம இலக்கினம்	:	மீனம்
ஜென்ம இராசி	:	மிதுனம்
ஜென்ம நட்சத்திரம்	:	திருவாதிரை
இருப்பு தசா	:	இராகுதசா – 10ஆ 10மா 3நாள்

ல/	கே		சந்		கு சுக்	ரா	சூ	
	ராசி		மா		ல/	நவாம்சம்		
			சூ செவ்		சந் பு			செவ்
	சனி	ரா	பு சுக் கு			சனி மா	கே	

ஆய்வு விதிகள் - 1, 4, 6 இன்படி 100% புத்திரபலம் பெற்ற சாதகம்.

விதி 1இன் படி குருக் கேந்திரபலம் பெற்றதால் 50% புத்திர உற்பத்திக்கு உதவுகிறது.

விதி 4இன் படி குரு 5இல் எந்தக் கிரகமும் இல்லை. எனவே 25% புத்திர உற்பத்திக்கு உதவுகிறது.

விதி 6இன் படி 5க்குடைய கிரகம் சந்திரன் 4இல் அமர்ந்ததால் 25% புத்திர உற்பத்திக்கு உதவுகிறது.

விதி 1, 4, 6இன் படி 100% புத்திரபலம் பெற்ற சாதகம். சாதகருக்கு 1 பெண், 2 ஆண் குழந்தைகள் உண்டு.

எடுத்துக்காட்டு - 3

ஜாதகர் பெயர் : கா. முத்துக்கருப்பன்

பிறந்த நாள் : 07.06.1961 புதன்

பிறந்த நேரம் : 19.20 இரவு

பிறந்த ஊர் : பொன்னமராவதி

ஜென்ம இலக்கினம் : தனுசு

ஜென்ம இராசி : மீனம்

ஜென்ம நட்சத்திரம் : உத்திரட்டாதி - 4

இருப்பு தசா : சனிதசா -2ஆ 4மா 11நாள்

சந்	**சுக்**	**சூ** மா	**பு**
கே	**ராசி**		**செவ்**
கு சனி			**ரா**
ல/			

		ல/ கு	**சுக் ரா**
செவ் பு சனி	**நவாம்சம்**		**சூ**
மா			
கே	**சந்**		

ஆய்வு விதிகள் - 3, 5, 7

விதி 3இன்படி, குரு நீசம் பெற்றதால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 5இன்படி, 5இல் அமர்ந்த சுக்கிரனை கேது பார்வை செய்வதால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 7இன்படி, 5க்குடைய செவ்வாய் 8இல் நீசம் அடைந்ததால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 3, 5, 7இன்படி, புத்திர பலமற்ற சாதகம். சாதகருக்கு குழந்தையில்லை.

எடுத்துக்காட்டு - 4

ஜாதகர் பெயர் : கா. லெட்சுமணன்.

பிறந்த நாள் : 14.07.1962 சனி

பிறந்த நேரம் : 14.32 பகல்

பிறந்த ஊர் : பொன்னமராவதி

ஜென்ம இலக்கினம் : விருட்சிகம்

ஜென்ம இராசி : விருட்சிகம்

ஜென்ம நட்சத்திரம் : கேட்டை

இருப்பு தசா : புதன்தசா – 14ஆ 5மா 28நாள்

		செவ்	**சூ** **பு**
கு	**ராசி**		**ரா** மா
சனி **கே**			**சுக்**
	ல/ **சந்**		

கு	**செவ்**	**சனி** **கே**	**சூ** **சுக்**
	நவாம்சம்		**ல/**
பு			
சந்	**ரா**	மா	

ஆய்வு விதிகள் - 3, 5, 7

விதி 3இன் படி குரு 3ஆம் பாவத்தில் அமர்ந்ததால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 5இன் படி 5ஆம் இடத்தை சனி பார்வை செய்வதால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 7இன் படி 5க்குடைய குரு 3ஆம் பாவத்தில் அமர்ந்ததால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி3, 5, 7இன்படி புத்திர பலமற்ற சாதகம். சாதகருக்கு குழந்தையில்லை.

எடுத்துக்காட்டு - 5

ஜாதகர் பெயர் : கா. பாலசுப்பிரமணியன்

பிறந்த நாள் : 17.02.1968

பிறந்த நேரம் : 03.48 காலை

பிறந்த ஊர் : பொன்னமராவதி

ஜென்ம இலக்கினம் : தனுசு

ஜென்ம இராசி : கன்னி

ஜென்ம நட்சத்திரம் : உத்திரம்

இருப்பு தசா : சூரியதசா – 0ஆ 11மா 8நாள்

செவ் சனி ரா			
சூ பு	**ராசி**		
சுக்			**கு**
ல/	மா		**சந் கே**

சந் ரா மா			**கு**
	நவாம்சம்		
சுக்			**செவ்**
	ல/ சூ சனி	**பு**	**கே**

ஆய்வு விதி - 1, 4, 7

விதி 1இன் படி குரு 3ஆம் பாவத்தில் அமர்ந்ததால் புத்திர உற்பத்திக்கு 50% உதவுகிறது.

விதி 4இன் படி 5ஆம் இடத்தை குரு பார்வை செய்கிறது புத்திர உற்பத்திக்கு 25% உதவுகிறது.

விதி 7இன் படி 5க்குடைய செவ்வாய் 4இல் அமர்ந்து சனி, இராகுவுடன் சேர்ந்ததால் புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 1, 4, 7இன்படி புத்திர உற்பத்திக்கு 75% பலம் சாதகம். சாதகருக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை உண்டு.

எடுத்துக்காட்டு - 6

ஜாதகர் பெயர்	:	கா. திருப்பதி வெங்கடாஜலம்
பிறந்த நாள்	:	07.04.1971
பிறந்த நேரம்	:	19.00 மாலை
பிறந்த ஊர்	:	பொன்னமராவதி
ஜென்ம இலக்கினம்	:	துலாம்
ஜென்ம இராசி	:	சிம்மம்
ஜென்ம நட்சத்திரம்	:	பூரம் - 2
இருப்பு தசா	:	சுக்கிரதசா – 12ஆ 3மா 10நாள்

சூ மா	**பு சனி**				**ல/ சுக் கே**			
சுக்	**ராசி**		**கே**		**சூ**	**நவாம்சம்**		**பு** மா
ரா			**சந்**					
செவ்	**கு**		**ல/**		**சனி**		**செவ் கு**	**சந் ரா**

ஆய்வு விதி - 3, 5, 7

விதி 3இன்படி, குரு 3இல் மறைவு. புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 5இன்படி, 5இல் ராகு புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 7இன்படி, 5க்குடைய சனி 8இல் நீசம். புத்திர உற்பத்திக்கு உதவாது.

விதி 3, 5, 7இன்படி புத்திர உற்பத்திக்கு உதவாது. சாதகருக்கு குழந்தையில்லை.

எடுத்துக்காட்டு - 7

ஜாதகர் பெயர்	:	ஏ. முருகானந்தம்
பிறந்த நாள்	:	06.08.1977
பிறந்த நேரம்	:	03.01 காலை
பிறந்த ஊர்	:	காரைக்குடி
ஜென்ம இலக்கினம்	:	மிதுனம்
ஜென்ம இராசி	:	மேஷம்
ஜென்ம நட்சத்திரம்	:	அசுவனி - 3
இருப்பு தசா	:	கேதுதசா - 2ஆ 2மா 20நாள்

கே	**சந்**	**செவ்** மா	**ல/ கு சுக்**				மா	**சந் செவ்**
	ராசி		**சூ சனி**		**சனி கே**	**நவாம்சம்**		
			பு					**ரா**
			ரா		**சூ சுக்**	**ல/ கு**		**பு**

ஆய்வு விதி - 3, 5, 6, 9இன்படி ஒரு பெண் குழந்தை பிறந்த சாதகம். 25% புத்திரபலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு 23.12.2017 அன்று காலை 10.34க்கு மதுரையில் ‘வைதிகா’ என்ற பெண் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறக்கும் பொழுது குரு துலாமில் சஞ்சாரம்.

விதி 12இன்படி துலாமில் உள்ள குரு 9ஆம் பார்வையால் குருவையும், 5ஆம் அதிபதி சுக்கிரனையும் பார்வை செய்கிறது.

எடுத்துக்காட்டு - 8

ஜாதகர் பெயர் : ஆ. சுந்தரி

பிறந்த நாள் : 05.07.1976

பிறந்த நேரம் : 11.52 காலை

பிறந்த ஊர் : நெற்குப்பை

ஜென்ம இலக்கினம் : கன்னி

ஜென்ம இராசி : கன்னி

ஜென்ம நட்சத்திரம் : சித்திரை - 2

இருப்பு தசா : செவ்வாய்தசா – 5ஆ 1மா 15நாள்

	கு **கே**		**சூ** **பு** **சுக்**		**சூ**		**ல/** **செவ்** **சுக்**	
	ராசி		**சனி**		**ரா**	**நவாம்சம்**		மா
			செவ்					**கே**
	மா	**ரா**	**ல/** **சந்**		**கு** **பு**			**சந்** **சனி**

ஆய்வு விதி - 3, 5, 6, 9இன்படி ஒரு பெண் குழந்தை பிறந்தது.

ஜாதகர் ஏ. முருகானந்ததத்தின் (**எடுத்துக்காட்டு - 7**) மனைவி. இவருக்கு 23.12.2017 அன்று காலை 10.34க்கு மதுரையில் ‘வைதிகா; என்ற பெண் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறக்கும் பொழுது குரு துலாமில் உள்ளது.

விதி 12ன் படி துலாமில் அமர்ந்த குரு மேஷத்தில் உள்ள குருவை 7ஆம் பார்வையால் பார்த்தது.

எடுத்துக்காட்டு - 9

ஜாதகர் பெயர்	:	சு. ராமசாமி
பிறந்த நாள்	:	07.03.1966
பிறந்த நேரம்	:	12.36 பகல்
பிறந்த ஊர்	:	பொன்னமராவதி
ஜென்ம இலக்கினம்	:	மிதுனம்
ஜென்ம இராசி	:	சிம்மம்
ஜென்ம நட்சத்திரம்	:	பூரம்
இருப்பு தசா	:	சுக்கிரதசா – 0ஆ 10மா 29நாள்

செவ் பு		**கு ரா**	**ல/**			**சூ சுக்**	**சனி**	
சூ சனி	**ராசி**		மா		**ரா**	**நவாம்சம்**		மா
சுக்			**சந்**					**செவ் கே**
	கே					**சந்**	**ல/ பு**	**கு**

ஆய்வு விதி - 3, 4, 7, 9இன்படி ஒரு பெண் குழந்தை உள்ள சாதகம். 25% பலம் உள்ள சாதகம்.

விதி 12ன் படி 15.03.1996, மாலை 16.42 சந்தியா என்ற பெண் குழந்தை பிறந்தது.

அப்போது குரு தனுசு இராசியில் ஆட்சி பெற்று இருந்தது.

தனுசில் அமர்ந்த குரு 5க்குடைய சுக்கிரனின் சாரம் சந்திரனை 9ஆம் பார்வையால் பார்வை செய்தது.

எடுத்துக்காட்டு - 10

ஜாதகர் பெயர்	:	A. லதா
பிறந்த நாள்	:	01.04.1970
பிறந்த நேரம்	:	02.30 காலை
பிறந்த ஊர்	:	சிவகங்கை
ஜென்ம இலக்கினம்	:	மகரம்
ஜென்ம இராசி	:	மகரம்
ஜென்ம நட்சத்திரம்	:	உத்திராடம் - 3
இருப்பு தசா	:	சூரியதசா – 01ஆ 10மா 7நாள்

சூ பு சனி	**செவ் சுக்**				**ரா**	**ல/**	**சுக்**	
ரா	**ராசி**		மா		**சந் பு**	**நவாம்சம்**		மா
ல/ சந்			**கே**		**கு**			**சனி**
		கு			**சூ**	**செவ்**		**கே**

ஆய்வு விதி - 2, 5, 7, 9இன்படி அமைந்த சாதகம். 25% பலம் உள்ள சாதகம்.

சாதகருக்கு ஒரு பெண் குழந்தை உண்டு.

ஜாதகர் சு. ராமசாமியின் **(எடுத்துக்காட்டு - 9)** மனைவி ஆவார். இவருக்கு 15.03.1996, மாலை 16.42க்கு சந்தியா என்ற பெண் குழந்தை பிறந்தது. அப்போது குரு தனுசு இராசியில் ஆட்சி பெற்று இருந்தது.

விதி 12இன்படி குழந்தை பிறந்த போது தனுசில் அமர்ந்த குரு 5ஆம் பார்வையால் 5க்குடைய சுக்கிரனை பார்வை செய்கிறார்.

2.6. நட்சத்திரத்திற்குரிய தசா வருடங்கள்

ஜோதிட சாஸ்திரம் கடல் போன்றது. அதை ஓரளவும் நீந்திக்கடந்தவர் இல்லை. முற்றிலும் அறிந்தவரும் இல்லை. ஓரளவு மூழ்கி முத்தெடுத்தவர்களும் அநேகர். நம் தசாபுக்திக் காலங்களில் சொல்லப்படும் பலன்களே முக்கியம். கோச்சாரப்பலன்கள், தசாபுக்தி பலன்களின் வலிமையை ஓரளவு கூட்டலாம் (அ) குறைக்கலாமே தவிர, அதைவிட தசாபுத்திப் பலன்கள் அதிக வலிமையான பலன்களை தரவல்லது முக்கியம்.

ஜாதக ரீதியாக மனிதனின் வாழ்நாளை 120 ஆண்டுகளாகப் பிரித்துள்ளார்கள். அதில் நவக்கிரகங்கள் ஆட்சி செய்யும் காலத்தைக் கணித்து உள்ளார்கள். அசுவினி, மகம், மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு முதலாவது தசாவாக கேது மகாதசா நடந்து பிறகு சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, வியாழன், சனி, புதன் என வரிசையாக நடைபெறும்.[7]

நட்சத்திரங்கள்	தசாநாதன்	வருடங்கள்
அசுவினி, மகம், மூலம்	கேது	7 வருடங்கள்
பரணி, பூரம், பூராடம்	சுக்கிரன்	20 வருடங்கள்
கிருத்திகை, உத்திரம், உத்திராடம்	சூரியன்	6 வருடங்கள்
ரோகிணி,அஸ்தம், திருவோணம்	சந்திரன்	10 வருடங்கள்
மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்	செவ்வாய்	7 வருடங்கள்
திருவாதிரை ,சுவாதி சதயம்	இராகு	18 வருடங்கள்
புனர்பூசம், விசாகம், பூரட்டாதி	வியாழன்	16 வருடங்கள்

பூசம், அனுஷம், உத்திரட்டாதி	சனி	19 வருடங்கள்
ஆயில்யம், கேட்டை, ரேவதி	புதன்	17 வருடங்கள்

ஒவ்வொரு தசா நடக்கும்போது ஒன்பது கிரகங்களும் அதில் பங்கு கொள்கின்றன. அவர்களுடைய காலத்தில் அந்தக் கிரகங்கள் புத்திநாதர்கள் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு புத்தியிலும் ஒன்பது கிரகங்களும் பங்கு கொள்கின்றன. அவைகளை அந்தரங்கள் என்று அழைக்கிறோம். இந்த தசாபுத்தி, அந்தரங்களிலிருந்து சாதகங்களின் பலனை அறிந்து அவரவர்கள் எதிர்கால வாழ்க்கையில் அதன்படி நடக்க முயல வேண்டும். கிரகங்களின் நன்மைகள், தீமைகளை அறிந்து கொள்ளலாம்.

முதல் தசா என்பது ஜாதகர் பிறந்த நட்சத்திரத்தையொட்டி ஆரம்பாகும். ஒருவர் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தால் அவருக்கு ஜனன காலத்தில் இராகு தசா ஆரம்பமாகும். ஒவ்வொருவருக்கும் ஆரம்பமாகும் முதல் தசா அவரவர் ஜென்ம நட்சத்திரத்துக்கான முழுக்காலத்திலும் இராது. உதாரணமாக திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்த ஜாதகர் இராகு தசா 18 வருடத்தையும் அனுபவிக்கமாட்டார். திருவாதிரையில் பிறந்த ஜாதகர் அந்த நட்சத்திரத்தின் முதல் வினாடியிலேயே பிறந்தால் இராகு தசா முழுவதும் அனுபவிப்பார். அவர் பிறக்கும் போது 20 நாழிகையிலோ அதற்குரிய குறைவான நாழிகையிலேயே பிறப்பார்கள். அதற்கு தகுந்தாற்போல் அந்த நட்சத்திரத்தின் ஆதியந்தம், பரம நாழிகையைக் கணித்து இருப்பு நாழிகைக்கு உரிய வருடம், மாதம், நாள் கண்டுபிடித்து அதிலிருந்து தற்போது பலன் காணும் வரை நடைபெறும் தசாபுத்தி அந்தரத்தைக் கணிக்கமுடியும்.

2.7. குருவின் தசாபுத்தி விவரங்கள்

குரு தசா 16 வருடங்கள். குரு தசாவில் வரும் 9 புத்தியின் காலஅளவுகள்.

குரு தசை	குருபுக்தி	2 – 1 - 18
குரு தசை	சனிபுக்தி	2 -6 – 12
குரு தசை	புதன்புக்தி	2 – 3 – 6
குரு தசை	கேதுபுக்தி	0 – 11 – 6
குரு தசை	சுக்கிரபுக்தி	2 – 8 – 0
குரு தசை	சூரியபுக்தி	0 – 9 – 18
குரு தசை	சந்திரபுக்தி	1 – 4 – 0
குரு தசை	செவ்வாய் புக்தி	0 – 11 – 6
குரு தசை	இராகு புக்தி	2 – 4 – 24

8

சாராவளியில் சொல்லிய குரு தசாவின் போது பலன்கள் (5வது பாகை வரை) பரமோச்ச பாகத்திலிருக்கும் குருவின் தசாவில் இராஜ்யத்தையும், மகத்தான சவுக்கியத்தையும், கீர்த்தியையும், மனோவிலாசத்தையும், யானை, குதிரை இவைகளின் கூட்டத்தையும், இராஜாபிஷேகத்தையும், தனது குருகுலத்துக்கு அதிபதியாகுதலையும் அடைகிறான் .உச்ச வீடான கடகத்திலிருக்கும் குருவின் தசாவில் பாக்கியப் பெருக்கத்தையும், இராஜமரியாதையையும், மகத்தான ஆதிபத்தியத்தையும், துக்கத்தால் வாடின சரீரமுள்ளவனவாகுதலையும் மனிதன் அடைகிறான்.

உச்சத்திலிருக்கின்ற கிரகத்துடன் சேர்ந்த குருவின் தசாவில் அதிக சுகமும், அனேக பாக்கியப் பெருக்கையும், இராஜமரியாதையையும், வேறு தேசம் போகுதலையும், மகத்தான ஆதிபத்தியத்தையும், துக்கத்தால் வாடின சரீரமுள்ளவனவாகுதலையும் மனிதன் அடைகிறான். அதிக சுகமும்,அனேக கோபுரம் முதலியவற்றின் நிர்மாணமும் இராஜபூஜையும் உண்டாகும்.

அதிநீச (5வது பாகை வரை) பாகத்திலிருக்கின்ற குருவின் தசாவில் வீடு, புத்திரன் இவர்களின் நாசமுள்ளவனவாகவும், நாசத்தை உடையவனாகவும், பிறருக்கு அடிமையாகவும் ஆகிறான்.

நீசத்திலிருக்கின்ற கிரகத்துடன் சேர்ந்த குருவின் தசாவில் மனோரோகத்தையும், பிறர்க்கு அடிமைப்படல் மூலம் அபவாதத்தையும், புத்திரர்களின் விரோதத்தையும் அடைகிறான். அதிமித்திர இராசியடைந்த குருவின் தசாவில் இராஜபூஜையும், மித்திரன் வீட்டையடைந்த குருவின் தசாவில் இராஜமரியாதை, கீர்த்தியையும், வெற்றியையும், நல்வாசனையுடைய பூமியையும், சனியின் வீட்டையடைந்த குருவின் தசாவில் பொதுவான இராஜாக்களால் கொடுக்கப்படும் பாக்கியத்தையும், வீடு, பணம், பசு, பூமி இவற்றால் இலாபத்தையும் அடைகிறான்.

சத்துரு வீட்டில் இருக்கும் குரு தசாவில் நண்பர்கள் மூலம் பணத்தையும், வஸ்திரம் இவற்றையும், இராஜசன்மானத்தையும் அடைவதுடன் எப்பொழுதும் ஸ்தீரி, புத்திரன், வேலைக்காரன், தனது சகோதரன் இவர்கள் மூலம் பீடையும் அடைகிறான்.

அதிசத்துரு இராசியிலிருக்கும் குருவின் தசாவில் துக்கத்தையும், சோகத்தையும், விரோதிகளையும், பூமி, பொருள் களத்திரத்தினால் நட்சத்திரத்தையும், அரசன், நெருப்பு, திருடன் இவர்களினால் பயத்தையும், பீடையையும் அடைகிறான்.

நீசத்தினின்றும் உச்சத்திற்கு போகும் குருவின் தசாவில் மகத்துவத்தையும், பூமியையும், ஸ்தீரி, புத்திரன், இராஜபூஜை இவற்றையும் தனது பராக்கிரமத்தால் கிடைத்த கீர்த்தி, பிரதாபம் இவற்றையும் அடைகிறான். ஆரோஹணியான குரு தசாவில் அரசனாக ஆவதுடன் இடம், பூமி, மூலதனம் கிடைக்கும். மேதாவியாகவும், சாந்தியுள்ளவனாகவும், நல்ல நீதி அறிந்தவனாகவும் ஆகிறான். உச்சத்தினின்றும், நீசத்திற்கு போகின்ற குருவின் தசாவில் ஒரே தடவை சௌக்கியத்தையும், ஒரே தடவை நாசத்தையும், ஒரே தடைவ கீர்த்தி, சாந்தி, விசேஷஇலாபம் இவற்றையும், ஒரே தடவை இராஜனாகுதலையும் அடைகிறான்.

மூலத்திரிகோணத்தில் இருக்கும் குரு தசாவில் இராஜ்யம், அர்த்தம், பூமி, புத்திரன், களத்திரம் இவர்களால் விசேஷ சௌக்கியத்தையும், வாகனத்தில் ஏறுதலையும், தனது பலத்தால்

கிடைத்த தனத்தையும், யாகாதி கர்மத்தையும், ஜனங்களால் பூசிக்கப்படாத பாத பீடமுள்ளவனாகுதலையும் அடைகிறான்.

சொந்த வீட்டில் இருக்கும் தசாவில் இராஜாக்களிடமிருந்து பூமி, தானியம், வஸ்திரம் இவற்றையும் சுகம் பெறுதலையும், அதிகமான ஆகாரம், பசு, குதிரை, மனோவிலாஸம் இவற்றையும், புண்ணிய யாகம், வேத சாஸ்திரத்தையும் அடைகிறான்.

.1, 4, 7, 10ஆம் இடங்களிருக்கும் குருவின் தசாவில் இராஜ்யம், பூமி, களத்திரம், இராஜசன்மானம், ஆனந்தத்தைத் தரும் பற்பல சுகம் கிடைக்கும்.

5, 9ஆம் இடற்களிலிருக்கும் குருவின் தசாவில் ஸ்தீரி, புத்திரன், தான்யம், அர்த்தம், விவேக புத்தி இவற்றையும், மெதுவான அன்னம், பானம், வஸ்திரம், பட்டுவேஷ்டி, வாஹனாதி இலாபம், சௌக்கியம் இவற்றையும் அடைகிறான்.

இலக்கினத்தையடைந்த குருவின் தசாவானது ஜாதகரைச் சுத்தமான வஸ்திரம், பூஷணம், வாகனமேறுதல், மிருதங்கம், பேரி இவற்றின் சப்தங்கள் இவற்றுடன் கூடினவனாகவும், மதங்கொண்ட யானை, குதிரை, காலாள் இவற்றின் கூட்டத்துடன் கூடினவனாகவும் செய்கிறது.

இரண்டாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் பணத்தின் வரவையும், பூமியை ஆளுகின்றவரின் மரியாதையையும், வித்யாவிஷயமான விவாதம் செய்யும் இராஜகோஷ்டியையும், சவுக்கியத்தையும், இராஜாக்களால் (மந்திரிகளால்) வெகுமானம் பெறுதல், தனவரவு பெருகுதல் ஏற்படும். சகோதரர்கள் மூலம் பூமி இலாபம், பெண்களால் கொடுக்கப்பட்ட பூமி, பசு, சொத்துக்கள் இவற்றின் இலாபத்தையும், ஆஹாரம், வஸ்திரம், ஆபரணம், சந்தனமாலை, நல்லவேஷ்டி முதலியவற்றையும் பிறரால் செய்யப்பட்ட உபகாரத்தையும் நல்ல புத்திமானாகுதலையும் சவுக்கியத்தையும் அடைகிறான்.

மூன்றாமிடத்தில் இருக்கும் குருவின் தசாவில் பிதாவர்க்கத்தால் கொடுக்கப்பட்ட தனத்தையும், இராஜாக்கள் (மந்திரிகள்) கொடுக்கப்பட்ட

தனத்தையும், சவுக்கியத்தையும், கந்தம், மாலை, வஸ்திரம் முதலியவற்றையும் அடைகிறான்.

நான்காமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் வாகனம் வாங்குதலையும், நண்பர்களால் நன்மையையும், பெரிய பதவி கிடைத்தலையும், இராஜாக்களுக்கு ஒப்பாக இருத்தலையும் அடைகிறான்.

ஐந்தாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் மந்திரப் பிரயோகத்தால் மகத்தான சுகத்தையும், புத்திரப்பிராப்தியையும், இராஜமரியாதையையும், வேதத்தை அறிதலையும், தெய்வ அருள் பெறுதலையும் அடைகிறான்.

ஆறாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் முதற்பாகத்தில் ஆரோக்கியம், புத்திரன், களத்திரம் இவற்றின் இலாபம், கடைப்பாகத்தில் களத்திரம், அர்த்தம் முதலியவற்றால் பயத்தையும், சோகத்தையும் அடைகிறான்.

ஏழாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் தாரம், தனம், புத்திரன் முதலியோரின் சவுக்கியத்தையும், வேறு தேசம் போதலையும், போட்டியில் வெற்றியையும், தானியம், பணம் பெறுதலையும், ஆலயம் கட்டுதல், பழுது பார்த்தல், திருப்பணிகள் செய்தலையும் பெறுகிறான்.

எட்டாமிடத்திலிருக்கும் குருவின் தனது தசாவில் சௌக்கியத்தை செய்வதுடன், தனபந்துகளால் பிரச்சினைகளையும், வேறு தேச வாசத்தையும், தசையின் கடைப்பாகத்தில் ஸ்தீரி, இராஜபுத்திரர்களால் சிரமத்தையும் செய்கிறான்.

ஒன்பதாமிடத்தில் குரு ஒருவருக்கு எல்லா வளத்தையும், புகழ், பணவரவு, மனநிறைவையும் வழங்குவார். பெரியோர்கள், ஞானிகள் தொடர்பு ஏற்படும். இராஜபதவியையும், இராஜாக்களால் கௌரவமும் கிடைக்கும். பணவரவும், சௌக்கியத்தையும் அடைகிறான்.

பத்தாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் இராஜபதவியையும், பதவியால் பெருமையும் அடைகிறான். தொழில் இலாபத்தையும், கௌரவப்பதவி கிடைத்தல், புகழும் உண்டாகும். புத்திர களத்திரத்தால் நன்மையும் உண்டாகும்.

பதினொன்றாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் இராஜ்ய இலாபத்தையும், அதிக தாரம் ஏற்படும். எதிலும் வெற்றி, நினைத்த காரியம் ஜெயத்தையும் அடைகிறான்.

பனிரெண்டாமிடத்திலிருக்கும் குருவின் தசாவில் வேறுதேசம் போதல், பற்பல சோகங்கள், பண இழப்பு, விரயம் அடைகிறான்.

2.8. குரு தசா, புத்தியின் பொதுப்பலன்கள்

2.8.1. "குரு தசா – குரு புத்தி

ஏராளமான செல்வம், பல அரசரை ஆளுதல், அரசரால் மதிக்கப்படுதல், ஆடை, ஆபரணம், கால்நடை, வாகனங்கள் சேருதல், புதிய மாளிகை கட்டுதல், முயற்சிகள் பலிதமாகி வெற்றியடைதல், அரசர் மற்றும் பிராமணர்களுடன் சந்திப்பு, மனைவி குழந்தைகளுக்கு மகிழ்ச்சி, முதலாளி மூலம் பயன் அடைதல் முதலியன.

தாழ்ந்தோர் சகவாசம், அவதூறாகப் பேசப்படுதல், மரணம் பற்றிய அச்சம், மனைவி குழந்தைகளைப் பிரிதல், உடல் வேதனை, செல்வம், தானியம் போன்றவை நஷ்டமாதல் ஆகியன.

2.8.2. குரு தசா – சனி புத்தி

நாடுகளை கைப்பற்றுதல், ஆடை ஆபரணங்கள், கால்நடைகள், தானியங்கள், செல்வம், வாகனங்கள் போன்றவை வந்தடையும், மகனாலும், நண்பர்களாலும் உற்சாகம் வரும். மேற்கு நோக்கிய பயணம், அரச சந்திப்பு மற்றும் அரசன் மூலம் செல்வம் கிடைத்தல், நிலம், வீடு, வாகனம், மகன் மற்றும் எதிரிகளால் செல்வம் போன்றவை கிடைக்கும்.

செல்வம், கால்நடைகள் போன்றவை சேதம், காய்ச்சல் நோயால் பாதிப்பு, வேலை இழப்பு, மனைவி குழந்தைகளுக்கு காயம் ஏற்படுதல், வீட்டில் அசுப நிகழ்வுகள், உறவினருடன் பகை, மன உளைச்சல் மற்றும் சொத்துக்களை இழப்பார். பண இழப்பு, உறவினர் பகை, தொழில் தடை, உடலில் வலி, குடும்ப உறுப்பினர்கள் மூலம் ஆபத்து, அகால மரணம் தரும்.

2.8.3. குரு தசா – புதன் புத்தி

செல்வம் சேருதல், நாடுகளைக் கைப்பற்றுதல், உடல் இன்பங்கள் அடைதல், வாகனம், ஆடை, ஆபரணம், கால்நடைகள் பெறுதல் ஆகியன. சொந்த நாட்டிலேயே செல்வம் சேரும். பெற்றோரால் மகிழ்ச்சி, அரசரால் வாகனங்கள் சேரும்.

எதிரிகள் அதிகமாவர், வேலை மற்றும் வசதிகள் தொலையும், வியாபாரம் நஷ்டம் தரும். காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு உண்டாகும். பயணத்தில் திருடு போகும், கண் நோய், உடலில் எரிச்சல், காயம் உண்டாதல், அலைந்து திரிதல் ஆகியன ஏற்படும். புக்தி ஆரம்பத்தில் செல்வம், ஆடை, வாகனம் மற்றும் எல்லாவித

வசதிகளையும் தரும். ஆனால் தசா முடிவில் செல்வ இழப்பும், உடல் நோயும் தரும். காரணமின்றி துக்கம், கோபம், வியாபார மற்றும் கால்நடை நஷ்டம், அகால மரணம் ஏற்படும்.

2.8.4. குரு தசா – கேது புத்தி

மிதமான சுகங்கள், செல்வம், கடினமான உணவு (அ) பிறர் தரும் உணவு போன்றவை கிடைக்கும். செல்வம் தேட முறையற்ற வழிகளை மேற்கொள்வார். தண்டனை மூலம் செல்வம் இழத்தல், சிறைவாசம், நோய்கள், உடல் பலவீனமடைதல், தந்தை மற்றும் சகோதரர்களுடன் பகை, மனஉளைச்சல்.

அரசு அங்கீகாரம், ஆதரவு மற்றும் மரியாதை கிடைத்தல், விரும்பிய துறைகளில் வெற்றி, வியாபாரத்தில் வெற்றி, கால்நடைகள் அபிவிருத்தி, அந்நிய அரசர் மூலம் செல்வம், ஆடைகள் சேரும்.

2.8.5. குரு தசா – சுக்கிர புத்தி

செல்வம், வாகனங்கள், யானைகள் முதலியன அரசனால் கிடைக்கும். உற்சாகம்மிகும். நீலம் மற்றும் சிவப்பு நிற பொருட்கள் சேர்தல், கிழக்கு திசை பயணத்தால் அபரிமிதமான இலாபம் கிடைத்தல், பெற்றோரால் மகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், தர்மச் செயல்கள், தெய்வபக்தி, அணைகள், நீர்நலைகள் அமைத்தல் முதலியன. இசையை இரசித்து அனுபவிப்பவர். இனிப்பு வகைகளை உண்பார். கற்றவர் நட்பு கிடைக்கும். மனைவியால் இன்பம் கிடைக்கும். அரசனின் சந்திப்பு உண்டு. உறவினருக்கு உதவுபவர். குழந்தைகள் நிறைய உண்டு.

தீய பலன்கள், சண்டை, சச்சரவு, உறவினரிடம் பகை, மனைவி மக்களுக்கு துன்பம், அரசரால் துன்பம், மனைவி, மாமனார் மற்றும் சகோதரர்களுடன் சண்டை, செல்வம் அழிதல் ஆகியன ஏற்படும். செல்வம் இழப்பு, மனைவியுடன் பகை, அகால மரணம் ஏற்படலாம்.

2.8.6. குரு தசா - சூரிய புத்தி

மதிப்பு, மரியாதை, செல்வம், வாகனம், ஆடை, ஆபரணம், முயற்சிகளில் வெற்றி, அரசருடன் சுகமான உறவு,குழந்தை பிறப்பு ஆகியன தரும்.

நரம்புத் தளர்ச்சி, காய்ச்சல், சோம்பேறித்தனம், நற்செயல்கள் செய்வதில் ஈடுபாடு இல்லாமை, பாபச் செயல்கள் செய்தல்,

அனைவரிடமும் பகை, உறவினரிடம் காரணமின்றி பகை ஆகியன தரும். உடல் நலம் கெடும்.

2.8.7. குரு தசா – சந்திர புத்தி

அபரிமிதமான செல்வம், புகழ், அரசரால் மதிக்கப்படுதல், மனைவியால் மகிழ்ச்சி, இன்பம், நற்செயல்கள் செய்து புகழடைதல், குழந்தைகள், பேரன்கள் பிறத்தல், அரசர் ஆதரவில் வசதிகள் அதிகமாகுதல், தர்மச் செயல்கள் மற்றும் மதச்செயல்களில் ஈடுபாடு ஆகியன தரும்.

உறவினர் பிரிவு, பண நஷ்டம், வெளியிடங்களில் அலைந்து திரிதல், தாய் மாமனோடு கலகம், தாய்க்கு உடல் நலிவு, அரசர் மற்றும் திருடரால் ஆபத்து மற்றும் ஆரோக்கியம் கெடும்.

2.8.8. குரு தசா – செவ்வாய் புத்தி

திருமணம் போன்ற சுபநிகழ்வுகள் நடைபெறும். நிலம் போன்றவை சேரும், வலிமை கூடும், முயற்சிகள் வெற்றியடையும். சுபப் பலன்கள், மனைவி மக்களால் மகிழ்ச்சி, அரசனின் ஆதரவு, செல்வம், தானியங்கள் சேருதல், இனிப்பு வகைகள் உண்ணுதல் ஆகியன.

கண் நோய், செல்வம் நஷ்டமடைதல், உடல் மன நல பாதிப்பு மற்றும் இதர அசுப பலன்கள் தரும். இந்த அசுபப் பலன்கள் தசா ஆரம்பத்தில் அதிகமாக இருக்கும். பின்னாட்களில் குறையும்.

2.8.9. குரு தசா – இராகு புத்தி

யோகாப்பயிற்சியில் ஈடுபாடு, முதல் ஐந்து மாதங்களில் செல்வம், தானியங்கள் சேர்தல், ஒரு கிராமம் (அ) நாட்டுக்குத் தலைமை ஏற்றல், வெளிநாட்டு அரசர் சந்திப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தூரதேசப் பயணங்கள், புனித நதிகளில் நீராடுதல் போன்றவை.

நோய், அரசர், பாம்பு மற்றும் திருடர்களால் ஆபத்து, காயங்கள், குடும்பத்தில் பிரச்சினைகள், சகோதரருடன் பகை, கெட்ட கனவுகள், காரணமில்லாத சண்டைகள் மற்றும் உடல் நலம் கெடும்''.[9]

2.9. ஐந்தாம் பாவத்துடன் தொடர்பு கொண்ட குருவின் தசாபுத்திக் காலங்களில் குழந்தை பிறப்பு

ஜாதகருக்கு முற்பிறவியின் விதிப்படி குழந்தைப் பிறக்கிறது.

"ஊழின் பெருவழி யாவுள மற்று ஒன்று!

சூழினும் தான் முந்துறும்" *10*

என்ற வள்ளுவரின் வாக்குப்படி விதிபோல மிக்க வலிமை வாய்ந்த சாதனம் உலகில் வேறு எங்கும் இல்லை.

நாம் ஒன்று செய்தால் அந்த செயல் விதிப்படியே நடக்கிறது. இவைகளெல்லாம் விதியின் விளையாட்டு என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். "ஊழியின் வழியிலே தான் ஒருவரது வாழ்க்கை அமையும் என்றால் ஜோதிடம் என்ற தெய்வீகக் கலையினால் என்ன பயன்?" என்ற கேள்வி எழுகிறது. அப்படியென்றால் விதி வழியே சென்றுவிடலாமே.... ஏன் ஜோதிடம் பார்க்க வேண்டும். வாழ்க்கைப்பாதையில் எதை நீ தேர்ந்தெடுக்க வேண்டும். கல்லும் முள்ளும் நிறைந்ததையா, இல்லை தார் சாலையையா?. எந்த வழி நடந்தால் ஆபத்தில்லாமல் சேரலாம். வரவிருக்கும் ஆபத்தில் இருந்து எந்த விதத்தில் தப்பிக்கலாம். இவைகளை எல்லாம் உணர்த்தும் ஓர் வழிகாட்டி தான் ஜோதிடக்கலை (எ) ஜோதிட அறிவியல் என்பதாம்.

வருங்காலத்தில் நம் செயல்பாடுகள் எப்படியெல்லாம் இருக்கவேண்டும், அந்த செயல்பாட்டில் ஏற்படும் தடைக்கற்கள் யாவை? அவைகளை எப்படிக் கடக்க வேண்டும்? என்பதை அறிந்து கொண்டு அதை வருமுன் காத்துக்கொள்வதே அறிவுடைமையாகும். தலை முட்டிய பின்னரா தணிய வேண்டும்? இவைகளை எல்லாம் நாம் அறிந்துகொண்டால் மனதில் ஏற்படும் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளலாம். மனநிம்மதி பெறலாம், நிம்மதி என்பது மட்டுமே செல்வத்தால் பெறமுடிவதில்லை. செயல் முறையினால் பெறுவதே ஆகும். அதனால் தான் "எத்தனை கோடி பணம் இருந்தாலும் நிம்மதி வேண்டும் மனதினிலே" என்றார் கவியரசர். நன்மையோ, தீமையோ அது நடைபெறும் காலத்தில் நடந்தே தீரும். அதை நாம் தடுத்துவிட முடியாது.

மாங்காய் பிஞ்சாக இருக்கும் போது துவர்க்கிறது காயாக இருக்கும் போது புளிக்கிறது, பழமாகும் நிலையிலே இனிக்கிறது. அந்த இனிப்புச்சுவையை பழமாக ஆகும் காலகட்டத்தில் யாரும் அதற்கு

ஊட்டுவதில்லை. அதற்கு அந்த காலகட்டத்தில் இயற்கையாக ஏற்படும் சுவை தான் அது. இறைவன் அதற்குத் தந்த வரமே. அதைத்தான் விதி என்கிறோம்.

அதே போன்று தான் மனித குலத்திற்கும் நல்லவை நடைபெறும் காலகட்டம் வரும் நேரத்தில் அவைகள் நடந்தே தீரும். அந்த சந்தர்ப்பங்களை யாரும் உண்டாக்கிக் கொள்ள முடிவதில்லை.நமது முன்வினை அதற்கு பலன் தரவேண்டிய காலம் தான் எப்போது,அதை அறிந்து தன்னம்பிக்கை ஊட்டுவதே ஜோதிடக்கலை (எ) ஜோதிட அறிவியல் என்பதாம்.

இன்ன காலகட்டத்தில் உன் முன்னேற்றம் இருக்கிறது. அதற்கு இப்பொழுதே உன் செயல்பாட்டைத் தொடங்கு. அதில் பல தடைக்கற்களை சந்திக்கத்தான் வேண்டும். அவைகளைக் கண்டு மனம் தளராது, அவைகளை வெற்றியின் படிக்கற்களாக ஏற்றுக்கொள். தோல்வி என்ற படிகளைக் கடந்தால் தான் வெற்றி என்ற சிகரத்தை அடைய முடியும்.

தோல்விகள் ஏற்படுவது இயற்கையின் செயலே. அவைகளைக் கண்டு துவண்டுவிடாதே. முயன்றால் முடியாதது இல்லை. முயற்சி திருவினையாக்கும். எந்த ஒரு வெற்றி பெறும் காலத்தை அறிவிப்பதும், மனோபலத்தைத் தருவதும் ஜோதிடக்கலை தான். மனோபலம் இருந்தால் ''மாமலையும் ஓர் கடுகாம்''. அந்த மனோபலத்தை, வெற்றிப்பாதையை தெரிவிக்கும் வழியை ஜோதிடம் மூலம் அறிந்து செயல்பட்டால் வெற்றி பெறலாம் என்று உணர்த்துவது ஜோதிடம்.

ஒருவருக்கு குழந்தை பிறக்க ஜாதகத்தில் எந்த அமைப்பு வேண்டும் என்பதை நாம் ஜாதகரின் ஐந்தாம் பாவத்தைக் கொண்டும்,ஐந்தில் அமர்ந்த கிரகத்தைக் கொண்டும், குருவைக் கொண்டும் முடிவு செய்கிறோம்.

ஒருவருக்கு குழந்தை பிறக்கும் பொழுது

1. குருவின் தசா, 5இல் அமர்ந்த கிரகத்தின் தசா, 5க்குரியவனின் தசா
2. குருவின் புத்தி, 5இல் அமர்ந்த கிரகத்தின் புத்தி, 5க்குரியவனின் புத்தி

3. 5ஆம் அதிபதியின் தசாவில்
4. 5இல் அமர்ந்த கிரகத்தின் தசாவில்
5. குருவின் தசாவில், 5ஆம் அதிபதியின் புத்தியில்
6. குழந்தை பிறக்கும் போது 5ஆம் பாவத்தை கோச்சாரக்குரு பார்வை செய்ய வேண்டும்.
7. ஜெனன காலத்தில் உள்ள குருவை கோச்சாரக்குரு பார்க்கும் காலம் குழந்தை பிறக்கும்.
8. ஜாதகத்தில் 5ஆம் பாவத்தை குரு பார்வை செய்யும் காலத்திலும் குழந்தை பிறக்கும்.

எடுத்துக்காட்டு - 11

ஜாதகர் பெயர் : N. போஜராஜன்

பிறந்த நாள் : 28.10.1979 ஞாயிறு

பிறந்த நேரம் : 13.54 பகல்

பிறந்த ஊர் : பொன்னமராவதி

ஜென்ம இலக்கினம் : கும்பம்

ஜென்ம இராசி : மகரம்

ஜென்ம நட்சத்திரம் : உத்திராடம்

இருப்பு தசா : சூரியதசா – 0ஆ 9மா 17நாள்

					சந்			சுக்
ல/ கே	ராசி		செவ்		செவ்	நவாம்சம்		கு ரா
சந்			கு சனி ரா		சூ கே			பு
	பு	சூ சுக்			சனி		ல/	

ஆய்வு விதி - 2, 4 ,6, 8இன்படி அமைந்த சாதகம். 75% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு ஒரு ஆண்,ஒரு பெண் குழந்தை உண்டு.

02.08.2015 இரவு 18.20 மணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்காலம் இராகு தசாவில் செவ்வாய் புத்தி.

- விதி 10ன் படி குருவுடன் சேர்ந்த இராகு தெசையிலும்,5க்குடைய புதனின் சாரம் பெற்ற செவ்வாய் புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 11ன் படி தெசா நாதன் இராகு இருந்த ராசிக்கு குரு அமர்ந்ததால் புத்திரன் பிறந்தது.
- விதி 12ன் படி ஜனன காலத்தில் அமர்ந்த குருவுடன்,கோச்சாரக் குரு சிம்மத்தில் அமர்ந்தது.

எடுத்துக்காட்டு - 12

ஜாதகர் பெயர் : N. பேச்சிமுத்து

பிறந்த நாள் : 07.11.1988 திங்கள்

பிறந்த நேரம் : 12.50 பகல்

பிறந்த ஊர் : காரைக்குடி

ஜென்ம இலக்கினம் : மகரம்

ஜென்ம இராசி : கன்னி

ஜென்ம நட்சத்திரம் : சித்திரை

இருப்பு தசா : செவ்வாய் தசா – 5ஆ 10மா 29நாள்

செவ்		**கு**			**கு ரா**	**சூ**	**சுக் சனி**	
ரா	**ராசி**					**நவாம்சம்**		
ல/			**கே**					**ல/ சந்**
சனி		**சூ பு**	**சந் சுக்**		**பு**			**செவ் கே**

ஆய்வு விதி - 1, 4, 7இன்படி அமைந்த சாதகம். 75% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு ஒரு ஆண்,ஒரு பெண்.இவர் எடுத்துக்காட்டு:11ன் மனைவி ஆவார்.

02.08.2015 இரவு 6.20 மணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.அக்காலம் குரு தெசை,சனி புத்தி.

- விதி 10ன் படி குரு தெசையிலும்,புத்திநாதன் சனி 10ம் பார்வையால் பஞ்சமாதிபதியைப் பார்ப்பதால் புத்திர உற்பத்தி ஏற்பட்டது.
- விதி 11ன் படி புத்திநாதன் சனியை கோச்சாரக் குரு 9ம் பார்வையால் பார்வை செய்கிறது.
- விதி 12ன் படி ஜனன காலத்தில் குரு இருந்த ரிஷபத்தின் அதிபதி சுக்கிரனுடன் கோச்சாரக் குரு அமர்ந்தது.

எடுத்துக்காட்டு - 11, 12 - அ

ஜாதகர் பெயர் : S. கோபிகிருஷ்ணன்

பிறந்த நாள் : 02.08.2015 ஞாயிறு

பிறந்த நேரம் : 18.20 மாலை

பிறந்த ஊர் : திண்டுக்கல்

ஜென்ம இலக்கினம் : மகரம்

ஜென்ம இராசி : கும்பம்

ஜென்ம நட்சத்திரம் : சதயம்

இருப்பு தசா : இராகுதசா – 7ஆ 1மா 19நாள்

கே			
சந்	**ராசி**		**சூ** **செவ்** **பு**
ல/			**கு** **சுக்**
	சனி		**ரா**

ரா	**ல/**	**சுக்** **கு**	
பு **சந்**	**நவாம்சம்**		**செவ்**
			சனி
	சூ		**கே**

ஆய்வு விதி

இவர் எடுத்துக்காட்டு – 11 மற்றும் 12இன் மகன் ஆவார்.

எடுத்துக்காட்டு - 13

ஜாதகர் பெயர் : A.நாகப்பன்

பிறந்த நாள் : 10.02.1969

பிறந்த நேரம் : 19.16 மாலை

பிறந்த ஊர் : கோவை

ஜென்ம இலக்கினம் : கன்னி

ஜென்ம இராசி : விருச்சிகம்

ஜென்ம நட்சத்திரம் : அனுஷம்

இருப்பு தசா : செவ்வாய் தசா – 14ஆ 0மா 22நாள்

சுக் சனி ரா					பு சனி கே	ல/ கு		செவ்
	ராசி					நவாம்சம்		
சூ பு								
	சந்	செவ்	ல/ கு கே			சுக்		சந் சூ ரா

ஆய்வு விதி - 2, 5, 7, 9இன்படி அமைந்த சாதகம். 25% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

08.04.1997க்கு காலை 11.57 மணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும் போது புதன்தசா, குரு புத்தி.

- விதி 10ன் படி 5இல் அமர்ந்த புதன்தசாவிலும், குரு புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 11இன் படி தசாநாதன் புதனை, கோச்சாரப் படி கன்னியில் அமர்ந்த குரு 5ஆம் பார்வையால் பார்ப்பதும், புத்திநாதன் குருவுடன் கோச்சாரக் கன்னியில் அமைவு.
- விதி 12இன்படி ஜனன காலத்தில் கன்னியில் அமர்ந்த குருவுடன் கோச்சாரக் குரு கன்னியில் சேர்கிறது.

எடுத்துக்காட்டு - 14

ஜாதகர் பெயர் : S. பூங்கோதை

பிறந்த நாள் : 25.02.1973 ஞாயிறு

பிறந்த நேரம் : 23.55 இரவு

பிறந்த ஊர் : பட்டுக்கோட்டை

ஜென்ம இலக்கினம் : விருச்சிகம்

ஜென்ம இராசி : விருச்சிகம்

ஜென்ம நட்சத்திரம் : கேட்டை

இருப்பு தசா : புதன்தசா – 12ஆ 2மா 25நாள்

பு		**சனி**	**கே**
சூ சுக்	**ராசி**		
கு			
செவ் ரா	**ல/ சந்**		

கு	**கே**		
சூ	**நவாம்சம்**		**பு சனி**
சந்			**ல/ செவ்**
		சுக் ரா	

ஆய்வு விதி - 3, 5, 6, 9இன்படி 25% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகிக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. இவர் எடுத்துக்காட்டு – 13இன் மனைவி ஆவார்.

இவருக்கு 08.04.1997ல் காலை11.57க்கு ஒரு பெண் குழந்தை மட்டும் பிறந்தது.

குழந்தை பிறக்கும் போது சுக்கிரதசா, சந்திர புத்தி.

- விதி 10இன்படி சுக்கிரன் சூரியனின் சாரம் பெற்ற குருவின் தசாவிலும், 5இல் அமர்ந்த புதனின் சாரம் பெற்ற சந்திர புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 12இன்படி ஜனன காலத்தில் அமர்ந்த குருவுடன் கோச்சாரக் குரு சேர்க்கை.

எடுத்துக்காட்டு - 13 - 14 - அ

ஜாதகர் பெயர்	:	N. லக்சணா
பிறந்த நாள்	:	08.04.1997
பிறந்த நேரம்	:	11.57 காலை
பிறந்த ஊர்	:	கோவை
ஜென்ம இலக்கினம்	:	மிதுனம்
ஜென்ம இராசி	:	மேஷம்
ஜென்ம நட்சத்திரம்	:	அசுவனி
இருப்பு தசா	:	கேதுதசா - 4ஆ 0மா 12நாள்

சூசனி சுக் கே	**பு சந்**		**ல/**
	ராசி		
கு			**செவ்**
			ரா

ல/		**சந்**	
சூ சுக் ரா	**நவாம்சம்**		**கு**
			பு கே
சனி	**செவ்**		

இவர் எடுத்துக்காட்டு - 13 மற்றும் 14இன் ஒரே புத்திரி ஆவார்.

எடுத்துக்காட்டு - 15

ஜாதகர் பெயர் : T. தங்கப்பன்

பிறந்த நாள் : 09.05.1966

பிறந்த நேரம் : 03.25 காலை

பிறந்த ஊர் : மணப்பாறை

ஜென்ம இலக்கினம் : மீனம்

ஜென்ம இராசி : தனுசு

ஜென்ம நட்சத்திரம் : பூராடம்

இருப்பு தசா : சுக்கிரன்தசா – 18ஆ 4மா 6நாள்

ல/ சனி சுக்	**சூ செவ் பு**	**ரா**	**கு**				**பு**	
	ராசி							**சனி கே**
					ரா	**நவாம்சம்**		**சந்**
சந்	**கே**				**கு**	**சூ**	**ல/ செவ் சுக்**	

ஆய்வு விதி - 1, 5, 7, 8இன்படி 50% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உண்டு.

- விதி 10இன்படி 16.07.1996ல் முதல் ஆண் குழந்தை பிறந்தது. அப்போது சாதகருக்கு சந்திரதசா, புதன் புத்தி நடைபெற்றது. குருவால் பார்க்கப்பட்ட சந்திரதசாவிலும் 2, 9க்குடைய செவ்வாய் புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 11இன்படி தசாநாதன் சந்திரனுடன் கோச்சார தனுசு குரு இணைவு. 5ஆம் பார்வையால் புத்திநாதன் புதனை பார்வை செய்கிறது.
- விதி 12இன்படி மிதுனத்தில் அமர்ந்த குருவை தனுசுவில் அமர்ந்த கோச்சாரக் குரு பார்வை செய்கிறது.

எடுத்துக்காட்டு - 15 - அ

ஜாதகர் பெயர் : T. ஹேமநாதன்

பிறந்த நாள் : 16.07.1996

பிறந்த நேரம் : 07.20 காலை

பிறந்த ஊர் : சென்னை

ஜென்ம இலக்கினம் : கடகம்

ஜென்ம இராசி : கடகம்

ஜென்ம நட்சத்திரம் : பூசம்

இருப்பு தசா : சனி தசா – 17ஆ 6மா 10நாள்

சனி கே		**செவ் சுக்**						**ரா**
	ராசி		**ல/ சூ சந் பு**			**நவாம்சம்**		**சுக் சூ**
								சந் பு
கு			**ரா**		**ல/ கே**	**சனி**		**செவ் கு**

இவர் எடுத்துக்காட்டு – 15இன் மகன் ஆவார்.

எடுத்துக்காட்டு - 16

ஜாதகர் பெயர் : M. தியாகராஜன்

பிறந்த நாள் : 18.12.1976

பிறந்த நேரம் : 07.22 காலை

பிறந்த ஊர் : காரைக்குடி

ஜென்ம இலக்கினம் : தனுசு

ஜென்ம இராசி : துலாம்

ஜென்ம நட்சத்திரம் : விசாகம்

இருப்பு தசா : குருதசா – 14ஆ 9மா 2நாள்

	கு கே					**சூ சந்**	**சுக்**	**கே**
	ராசி		**சனி**		**செவ்**	**நவாம்சம்**		
சுக்					**சனி**			**ல/**
ல/ சூ பு	**செவ்**	**சந் ரா**			**கு ரா**		**பு**	

ஆய்வு விதி - 1, 5, 7,8இன்படி 50% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உண்டு.

- விதி 10இன்படி 15.09.1999ல் முதல் ஆண் குழந்தை பிறந்தது. அப்போது சனி தசா, சுக்கிர புத்தி.
- 5ஆம் இடத்தை பார்க்கின்ற சனி தசாவிலும், 5ஆம் இடத்தை பார்வை செய்கின்ற சந்திரனின் சாரம் பெற்ற சுக்கிரனின் புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 12இன்படி ஜனன காலத்தில் மேஷத்தில் அமர்ந்த குருவுடன் கோச்சாரக் குரு சேர்க்கை பெற்றது.

எடுத்துக்காட்டு - 16 - அ

ஜாதகர் பெயர் : T. தேவா

பிறந்த நாள் : 15.09.1999

பிறந்த நேரம் : 12.52 பகல்

பிறந்த ஊர் : முசிறி

ஜென்ம இலக்கினம் : தனுசு

ஜென்ம இராசி : விருச்சிகம்

ஜென்ம நட்சத்திரம் : விருச்சிகம்

இருப்பு தசா : குரு தசா – 3ஆ 3மா 24நாள்

	கு சனி						**ல/**	**கே**
	ராசி		**சுக் ரா**		**பு சுக்**	**நவாம்சம்**		**கு சந்**
கே			**சூ**					
ல/	**செவ் சந்**		**பு**		**சூ ரா**	**செவ்**	**சனி**	

இவர் எடுத்துக்காட்டு – 16இன் மகன் ஆவார்.

எடுத்துக்காட்டு - 17

ஜாதகர் பெயர் : S. துரைராஜ்

பிறந்த நாள் : 08.10.1975 புதன்

பிறந்த நேரம் : 09.30 காலை

பிறந்த ஊர் : மேலூர்

ஜென்ம இலக்கினம் : விருச்சிகம்

ஜென்ம இராசி : விருச்சிகம்

ஜென்ம நட்சத்திரம் : விசாகம்

இருப்பு தசா : குரு தசா – 0ஆ 10மா 23நாள்

கு		**கே**	**செவ்**		**கு**			**சுக்**
	ராசி		**சனி**			**நவாம்சம்**		**சூ சந் ரா**
			சுக்		**கே**			**பு**
	ல/ சந் ரா		**பு சூ**			**செவ்**		**ல/ சனி**

ஆய்வு விதி - 1, 5, 7, 9இன்படி 50% புத்திர பலம் பெற்ற சாதகம்.

சாதகருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு.

- விதி 10ன் படி 15.08.2000ல் இரவு 9.00 மணியளவில் ஒருபெண் (எடு – 17 - அ - பெ) குழந்தை பிறந்தது. அப்போது சாதகருக்கு புதன் தசா, சுக்கிர புத்தி நடைபெற்றது. புத்திரகாரகன் குருவால் பார்க்கப்பட்ட புதன் தசாவிலும், புத்திநாதன் சுக்கிரன் அமர்ந்த வீட்டுக்கிரகம் சூரியனையும் குரு பார்வை செய்வதால் குழந்தை பிறந்தது.
- விதி 11இன்படி தசாநாதன் புதனையும், சூரியனையும் கோச்சாரப்படி ரிஷபத்தில் அமர்ந்த குரு பார்வை செய்கிறது.

எடுத்துக்காட்டு - 17 – அ - பெ

ஜாதகர் பெயர்	:	T. கனிமொழி
பிறந்த நாள்	:	15.08.2000
பிறந்த நேரம்	:	21.00 இரவு
பிறந்த ஊர்	:	இராமநாதபுரம்
ஜென்ம இலக்கனம்	:	மீனம்
ஜென்ம இராசி	:	கும்பம்
ஜென்ம நட்சத்திரம்	:	அவிட்டம்
இருப்பு தசா	:	செவ்வாய்தசா – 1ஆ 4மா 20நாள்

ல/		**கு சனி**	**ரா**		**சூ**		**கு**	**ரா**
சந்	**ராசி**		**சூ பு செவ்**		**சனி**	**நவாம்சம்**		
			சுக்		**பு**			
கே					**கே**	**செவ் சந்**	**ல/**	**சுக்**

இவர் எடுத்துக்காட்டு – 17இன் முதல் பெண் குழந்தை ஆவார்.

எடுத்துக்காட்டு - 18

ஜாதகர் பெயர் : M. கருப்பையா

பிறந்த நாள் : 10.11.1960

பிறந்த நேரம் : 03.15PM

பிறந்த ஊர் : கரூர்

ஜென்ம இலக்கினம் : மீனம்

ஜென்ம இராசி : கடகம்

ஜென்ம நட்சத்திரம் : பூசம்

இருப்பு தசா : சனி தசா – 6ஆ 6மா 0நாள்

ல/			**செவ்**		**பு கே**	**சுக்**	**சூ செவ்**	**கு**
கே	**ராசி**		**சந்**			**நவாம்சம்**		
			ரா					
சுக் சனி கு		**சூ பு**					**ல/ சந் சனி**	**ரா**

ஆய்வு விதி - 2, 4, 6இன்படி 75% புத்திர பலம் பெற்ற சாதகம். சாதகருக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவருக்கு 08.12.1989ல் (எடு - 18CM) ஆண் குழந்தை பிறந்தது. அந்நேரத்தில் சாதகருக்கு கேது தசா, சனி புத்தி நடைபெற்றது.

- விதி 10ன் படி சனியுடைய வீட்டில் அமர்ந்த கேது தசாவில் சனி குருவுடன் சேர்க்கை பெற்றதால் (கேது இருந்த வீட்டின் அதிபதி சனியாகவே கருதப்படுவார்) கேது தசாவிலும் குருவுடன் சேர்ந்த சனி புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 11இன்படி தசா நாதன், புத்திநாதன் இருவருக்கும் கோச்சாரத்தில் மிதுனத்தில் அமர்ந்த குருவின் பார்வை ஏற்படுகிறது.
- விதி 12இன்படி ஜனனகாலத்தில் தனுசுவில் ஆட்சி பெற்ற குருவை கோச்சாரப்படி மிதுனத்தில் அமர்ந்த குரு 7ஆம் பார்வை செய்கிறது.

எடுத்துக்காட்டு - 19

ஜாதகர் பெயர்	:	M. கோதை
பிறந்த நாள்	:	04.02.1966 வெள்ளி
பிறந்த நேரம்	:	11.30 காலை
பிறந்த ஊர்	:	விழுப்புரம்
ஜென்ம இலக்கினம்	:	மேஷம்
ஜென்ம இராசி	:	கடகம்
ஜென்ம நட்சத்திரம்	:	புனர்பூசம்
இருப்பு தசா	:	குருதசா – 2ஆ 1மா 26நாள்

	ல/	**கு ரா**			**சுக் ரா**	**சனி**		
செவ் சனி	**ராசி**		**சந்**			**நவாம்சம்**		**சந் சூ பு**
சூ பு சுக்					**செவ்**			**ல/**
	கே							**கு கே**

ஆய்வு விதி - 2, 4, 6இன்படி 75% புத்திர பலம் பெற்ற சாதகம். சாதகருக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை பிறந்தது.

இவருக்கு 08.12.1989ல் காலை 7.25 மணியளவில் (எடு - 18, 19 - **அ)** பிறந்தது. அக்காலம் சாதகருக்கு புதன் தசா, செவ்வாய் புத்தி நடைபெற்றது.

- விதி 10இன்படி குருவின் பார்வை பெற்ற புதன் தசாவிலும், 5ஆம் இடத்தை பார்வை செய்கின்ற செவ்வாய் புத்தியிலும் குழந்தை பிறந்தது.
- விதி 11இன்படி கோச்சாரப்படி மிதுனத்தில் அமர்ந்த குரு 9ஆம் பார்வையால் செவ்வாயையும் தசாநாதன் புதன் அமர்ந்த வீட்டுக்கிரகம் சனியையும் பார்வை செய்கிறது.

எடுத்துக்காட்டு - 18, 19 - அ

ஜாதகர் பெயர்	:	பரமேஸ்வரன்
பிறந்த நாள்	:	08.12.1989 வெள்ளி
பிறந்த நேரம்	:	07.25 காலை
பிறந்த ஊர்	:	பரமக்குடி
ஜென்ம இலக்கினம்	:	தனுசு
ஜென்ம இராசி	:	மீனம்
ஜென்ம நட்சத்திரம்	:	ரேவதி
இருப்பு தசா	:	புதன்தசா - 14ஆ 4மா 22நாள்

சந்			**கு**				**ல/**	**செவ் பு**
	ராசி		**கே**		**சுக் கு கே**	**நவாம்சம்**		
ரா சுக்					**சூ**			**ரா**
ல/ சனி பு	**சூ**	**செவ்**			**சந்**			**சனி**

இவர் எடுத்துக்காட்டு - 18, 19இன் மகன் ஆவார்.

எடுத்துக்காட்டு - 20

ஜாதகர் பெயர் : R. அன்புமணி

பிறந்த நாள் : 06.08.1977 சனி

பிறந்த நேரம் : 03.01 காலை

பிறந்த ஊர் : மாயவரம்

ஜென்ம இலக்கினம் : மிதுனம்

ஜென்ம இராசி : மேஷம்

ஜென்ம நட்சத்திரம் : அசுவனி

இருப்பு தசா : கேது தசா – 2ஆ 2 மா 20 நாள்

கே	**சந்**	**செவ்**	**ல/ கு சுக்**					**செவ் சந்**
	ராசி		**சூ சனி**		**சனி கே**	**நவாம்சம்**		
			பு					**ரா**
			ரா		**சுக் சூ**	**ல/ கு**		**பு**

ஆய்வு விதி - 1, 4, 6இன்படி 100% புத்திர பலம் பெற்ற சாதகம். சாதகருக்கு ஒரு ஆண், இரண்டு பெண் குழந்தை பிறந்தது.

23.12.2017ல் ஒரு பெண் குழந்தை (எடு – 20 - **அ**) பிறந்தது. அக்காலம் சாதகருக்கு செவ்வாய் தசா, வியாழ புத்தி நடைபெற்றது.

- விதி 10இன்படி தசாநாதன் செவ்வாய், புத்திர ஸ்தானாதிபதியின் வீட்டில் அமர்ந்ததாலும் புத்திநாதன் வியாழன் ஆவதால் குழந்தை பிறந்தது.
- விதி 12இன்படி கோச்சாரப்படி துலாமில் அமர்ந்த குரு 5ஆம் பார்வையால் ஜனனகாலத்தில் அமர்ந்த குருவையும் 5க்குடையவனையும் பார்வை செய்கிறது.

எடுத்துக்காட்டு - 20 - CF - அ

ஜாதகர் பெயர் : கலைச்செல்வி

பிறந்த நாள் : 23.12.2017

பிறந்த நேரம் : 10.34 காலை

பிறந்த ஊர் : மாயவரம்

ஜென்ம இலக்கினம் : கும்பம்

ஜென்ம இராசி : கும்பம்

ஜென்ம நட்சத்திரம் : அவிட்டம்

இருப்பு தசா : செவ்வாய் தசா – 2ஆ 11மா 13நாள்

						கு	சுக் சனி	சூ
ல/ சந்	ராசி		ரா		செவ்	நவாம்சம்		கே
கே					ரா			
சூ சுக் சனி	பு	செவ் கு			ல/ பு		சந்	

இவர் எடுத்துக்காட்டு – 20இன் மகள் ஆவார்.

தொகுப்புரை

இவ்வியலில் ஒவ்வொரு கிரகமும் ஒரு இராசியைக் கடக்கும் காலம், கிரகங்கள் ஒரு நாளில் சுற்று வட்டத்தில் செல்லும் பாதைகள், கிரகங்கள் சந்திரன் நின்ற இராசிக்கு நன்மை செய்யும் பாவங்கள், குருவின் கோச்சாரப்பலன்கள், குழந்தை பிறப்புக்குக் கோச்சாரக் குருவின் அருள், குழந்தை பிறக்கும்போதுள்ள கோச்சாரக்குரு, நட்சத்திரத்திற்குரிய தசா வருடங்கள், குருவின் தசா, புத்தி விவரங்கள், குருதசா, புத்தியின் பொதுப்பலன்கள், ஐந்தாம் பாவத்துடன் தொடர்பு கொண்ட குருவின் தசா, புத்திக் காலங்களில் குழந்தை பிறப்பு பற்றி விவரமாக அறியப்பட்டு உள்ளது.

அடிக்குறிப்பு

1 பொத்தேரி ஸ்ரீராமய்யங்கார் & கீழாத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாசாசாரியார்,
குடும்ப ஜோதிடம், ப. 125

2 மேலது ப. 13

3 பாடூர். ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஜோதிட வித்யா வாரிதி, ப. 178

4 மேலது ப. 180

5 ஆற்காடு சீதாராமய்யர் பஞ்சாங்கம், ப. 140

6 மேலது ப. 40

7 பொத்தேரி ஸ்ரீராமய்யங்கார் & கீழாத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாசாசாரியார்,
குடும்ப ஜோதிடம், ப. 33

8 மேலது ப. 37

9 மேலது ப. 120

10 திருக்குறள் - ஊழ் குறள் 380, ப. 38

இயல் - 3

குழந்தை பிறப்புக்கான கோள் அமைப்புகளும், பகுப்பாய்வும்

இயல் - 3

குழந்தை பிறப்புக்கான கோள் அமைப்புகளும், பகுப்பாய்வும்

அறிமுகவுரை

இவ்வியலில் குழந்தை பிறப்பு பற்றிய விளக்கம், நால்வகை வந்தியா தோஷங்கள் பற்றிய விளக்கம், காரகன் - பாவாதிபதிகள் பற்றிய விளக்கம், இலக்கின வாரியாக காரகன், ஸ்தானாதிபதி விவரம், குருவின் முழுபலம் அறிதல், சமபலம் அறிதல், பலமின்மை அறிதல், ஐந்தாம் பாவத்தின் முழுபலம் அறிதல், பலமின்மை, ஐந்தாம் அதிபதியின் முழுபலம் அறிதல், பாவாதிபதியின் பலமின்மை, ஆய்வு விதிகளின் சேர்க்கையால் குழந்தைகளின் வகைகளை அறிதல், குழந்தைப்பேறு – பல நிர்ணயம், குழந்தைப் பேற்றிற்கான ஆய்வு விதிகள், குழந்தைப் பிறப்பிதற்கான கோள் அமைப்புகள் - யூக விதிகள், யூக விதிகளுக்கான விளக்கம், ஆய்வுப் பகுப்பு ஆகியவை பற்றி அறியப்பட உள்ளது.

3.0. குழந்தை பிறப்பு – விளக்கம்

‘‘குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்

மழலைச் சொல்கேளா தவர்’’– குறள். [1]

தன் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே, குழலின் இசை இனியது, யாழின் இசை இனியது என்று கூறுவர் என்கிறார் வள்ளுவர்.

சொகுசு வாழ்வில் பெருமை பெறும் கோடீஸ்வரர்களும், அன்றாட வாழ்க்கையில் மன்றாடும் கூலி ஆட்களும் குழந்தை என்றால் பெரும் செல்வம் பெற்றதாக கருதி மகிழ்ச்சி அடைகிறார்கள்.

வாழ்க்கையில் எவ்வளவுதான் களைப்பாக இருந்தாலும் குறு குறுவென நடந்து சிறு கை நீட்டி விறு விறுவென தன்னை நோக்கி வரும் மழலைச் செல்வத்தை வாரி எடுத்து மார்போடு அணைத்து முத்தமிட்டு தன் கவலை எல்லாவற்றையும் மறக்கிறார்கள். குழந்தை இல்லாதவர்கள் தன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்தவர்களாகவே கருதுகிறார்கள்.

பிள்ளை இல்லாதவர்களை எல்லோரும் எள்ளி நகையாடுகிறார்கள். கோடான கோடிக்கு அதிபன் ஆயினும் ஓடி விளையாட, தழுவி மகிழ்ந்திட குழந்தை இல்லையே என ஏங்கித் தவிக்கின்றனர்.

பெண்களாயினும், ஆண்களாயினும் தங்களை மலடி என்றோ, பிள்ளை இல்லாதவன் என்றோ சொல்ல விரும்புவது இல்லை. இரண்டு நபர்கள் சந்திக்கும் பொழுது உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்று தான் குசலம் விசாரிக்கிறார்கள். உங்களுக்கு எத்தனை கோடி ரூபாய் தேறும் என்று கேட்பதில்லை.

வம்சம் செழிக்க, தாங்கள் தேடிய சொத்தை அனுபவிக்க, குழந்தை செல்வம் வேண்டும் என்பதே எல்லோரின் விருப்பம். குழந்தைச் செல்வம் பெற இலட்ச, இலட்சமாகச் செலவு செய்து, தான தர்மங்கள் செய்வதுடன், சிறந்த மருத்துவர்களையும் நாடுகிறார்கள்.

‘‘ ந புத்திரஸ்ய கதிர் ராஸ்தி ’’ என்கிறது வேதம்.

‘‘ஜனனீ ஜன்ம சௌக்யானாம் வர்த்தனீ குல ஸம்பதாம், பதவி

பூர்வ புண்யானாம்’’ என்று ஆரம்பிக்கிறார்கள் சோதிடர்கள்.

‘‘பூர்வ புண்ணிய சுகிர்தம்’’ என்கிறது சோதிட சாஸ்திரம்.

வாழ்வில் நலம் சேர்க்க பலத்துடன் வாழ பாரம்பரியம் தழைக்க மழலைச் செல்வம் வேண்டும். இவ்வளவு அருமை வாய்ந்த குழந்தைச் செல்வத்தை ஆராய முனைந்ததன் விளைவுதான், உலகில் பிறந்த மனிதர்கள் அனைவருக்கும் தங்களுக்கு குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் எல்லோருக்கும் குழந்தை பிறக்கிறதா? அப்படியே பிறந்தாலும் ஆண்,பெண் குழந்தைகள் பிறக்கின்றதா? சிலருக்கு ஏதேனும் ஒரு பாலினத்தில் குழந்தைகள் பிறக்கிறது. அவர்கள் மற்ற பாலினத்தில் குழந்தை பிறக்கவில்லையே என ஏங்குகிறார்கள்.

மனித இனத்தின் குழந்தை பிறப்பின் வகையை அறியவே இவ்வாய்வு. பழம்பெரும் சோதிட நூலான பலதீபிகை என்ற நூலில் பலவகையான குழந்தைகள் பிறப்பு பற்றியும் கூறுகிறது. ஆண், பெண் குழந்தைகள் ஒருவருக்கு இல்லாததை ஒரு வகையான மலடு என உறுதி செய்கிறது.

யூக ஆய்வு விதிகள் அமைக்க உந்துதலாக இருந்தது இந்த சுலோகங்கள் தான்.

3.1. நால்வகை வந்தியா (மலடு தோஷங்கள்)

3.1.1. காக வந்தியா தோஷம்

இவை ஸ்தீரி காகம், புருஷ காகம் என இரு வகைப்படும்.

அதாவது புத்திர ஸ்தானத்தில் சுக்கிரன், சந்திரன் இருந்து புத்திர ஸ்தானமோ, ஸ்தானாதிபதியோ அதிக பலமுள்ளவனாய் இருந்தால் ஸ்தீரி காக தோஷம் எனப்படும் (ஒரு புத்திரி மட்டும் பிறப்பது). புத்திர ஸ்தானத்தில் குரு இருந்து புத்திரகாரகன் சுபவர்ஜிதனானால் புருஷகாக தோஷம் எனப்படும் (ஒரு புதல்வன் மட்டும் பிறப்பது). ஒரே ஒரு சந்ததி மட்டும் ஏற்பட்டு மறு சந்ததி காணாமைக்கு காக வந்தியா தோஷம் என்று அழைக்கப்படுகிறது. இதுவும் ஒரு வித மலட்டு இனத்தைச் சார்ந்தது.

3.1.2. ஸ்திரி புருஷ வந்தியா தோஷம்

மகரமோ, கடகமோ புத்திர ஸ்தானமாகி (சிம்மம், மீனம் இலக்கினம்) அதில் புதன் குடி இருந்தாலும் அல்லது அவ்விடங்களில் சந்திரனோ, சுக்கிரனோ இருந்தாலும், குரு, புத்திரகாரகன் இவர்களுக்கு பலமற்ற கிரகத்தின் சேர்க்கை அல்லது சந்திரனோ, சுக்கிரனோ ஐந்தாமிடத்தில் சனியுடன் கூடினாலும் ஸ்திரி வந்தியா தோஷம் ஏற்படுகிறது. அதாவது புருஷப் பிரஜைகளை மட்டும் பெற்று பிறகு பெண் குழந்தையே பெறாதவளாகிறாள்.

அதைப் போல் ஸ்திரி பிரஜைகளை மட்டும் பெற்று ஆண் சந்ததியே இல்லாதவன் புருஷ வந்தியா தோஷமுள்ளவன். இதுவும் ஒரு வித மலட்டு இனத்தைச் சாருகிறது.

3.1.3. மிருத வந்தியா தோஷம்

சந்திரன், சனி, செவ்வாய் இவர்களின் சம்மந்தம் (புத்திரஸ்தானத்துக்கோ, புத்திரகாரகனுக்கோ) இருந்தாலும், புத்திர, புத்திரேசர்களுக்கு முறையே 6, 8, 12க்குடையவரின் சேர்க்கை, 6, 8, 12,ல் இருந்தாலும் குருவுக்கு நீசம், அஸ்தங்கதம், சத்துரு சம்பந்தம் இவைகளைக் கொண்டும் மேற்படி மிருத வந்தியா தோஷம் ஏற்படுகிறது.

மேற்படி தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குழந்தைகள் பிறக்கப், பிறக்க அழிந்து கொண்டே வரும். இதுவும் ஒரு வித மலட்டுத் தன்மையைக் காட்டுகிறது.

3.1.4. ஸாஷத் வந்தியா தோஷம்

புத்திர ஸ்தானமானது (மிதுனம், கன்னி, மகரம், கும்பம்) புத ஷேத்திரமாகவோ, சனியின் ஷேத்திரமாகவோ ஆகி சனி, குளிகன் இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப் பெற்றிருந்தாலும், புத்திர ஸ்தானத்தில் வெகு பாபக்கிரகங்களிருந்தாலும், புத்திர ஸ்தானாதிபதி நீசத்திலோ, சத்துருவின் வர்க்கத்திலோ இருந்தாலும், புத்திர ஸ்தானமோ, புத்திர ஸ்தானாதிபனோ, குருவோ நீசத்திலோ, சத்துரு உட்வர்க்கத்திலோ இருந்தாலும், பாபக்கிரக உட்வர்க்கம் பெற்றிருந்தாலும் குரு, ஜன்ம இலக்கனம், சந்திரன் இவர்களுக்கு ஐந்தாமிடத்தில் பாபக்கிரகங்களாயிருந்தாலும் புத்திரேசன் பாபருடன் கூடினாலும் ஸாஷத் வந்தியா தோஷம் ஏற்படுகிறது. இவர்களுக்கு குழந்தையே பிறக்காது.[2]

